விலை ரூபா 20.00


பெண்களைத் தாக்கிய கரடி
பக்கம் 09


ஜனாதிபதியாக மீண்டும் கலாம்
பக்கம் 10


முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சி
பக்கம் 17


சச்சின் வந்தும் சறுக்கியது மும்பை
பக்கம் 23


www.onlineuthayan.com

பக்கங்கள் : 28

# உதயன்

சுடர் 27
கதிர் 150

வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 12 செவ்வாய்க்கிழமை (24/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


# இலங்கையில் அரசியல் தீர்வுக்கு இந்திய அழுத்தம் அவசியமானது

## இந்திய நாடாளுமன்றில் சுஷ்மா சுவராஜ் இன்று விளக்க அறிக்கை

புதுடில்லி, ஏப்ரல் 24

இலங்கையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை மிக விரைவாக எட்டுவதற்கு இந்திய மத்திய அரசு இலங்கை அரசு மீது கடும் அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்ற பிரதான கோரிக்கை உட்படப் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய அறிக்கை ஒன்றை இந்திய எதிர்க்கட்சித் தலைவியும் இலங்கை வந்த இந்திய நாடாளுமன்றக் குழுவின் தலைவியுமான சுஷ்மா சுவராஜ் இன்று செவ்வாய்க்கிழமை இந்திய நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றுவார் எனத் தெரிய வருகிறது.

அத்துடன் இந்த அறிக்கையை இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கையும் நேரில் சந்தித்துக் கையளிக்க உள்ளது என அந்தக் குழுவில் இடம்பெற்ற காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவியான சுஷ்மா சுவராஜ் இன்று காலை சபை ஆரம்பமாகும் வேளையில் இலங்கை பயணம் தொடர்பான விளக்க அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றுவார் எனவும் சுதர்சன நாச்சியப்பன் கூறினார்.

இந்த அறிக்கையில் இலங்கை தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயம் முக்கிய இடத்தை பிடித்துள்ளது எனவும் இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வை விரைவாக எட்டுவதற்கு இந்திய மத்திய அரசு இலங்கை அரசுக்கு கடும் அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்ற கோரிக்கை உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் இலங்கை வந்த இந்திய நாடாளுமன்றக் குழுவில் இடம்பெற்றிருந்த காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.என்.வி.சித்தன், சுதர்சன நாச்சியப்பன் ஆகியோர் குறிப்பிட்டனர்.

அத்துடன் இந்த அறிக்கையில் இலங்கையில் 04

# பதவி விலகுகிறார் ஹக்கீம்?



கொழும்பு,ஏப். 24

முஸ்லிம்களுக்கெதிரான செயற்பாடுகளைத் தடுக்க அரசு தவறியுள்ளமையால் அரசிலிருந்து விலகிக் கொள்வதற்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளதாக அந்தக் கட்சியின் உட்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தம்புள்ள பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், அதற்கு அரச தரப்பால் வழங்கப்பட்ட ஆதரவு, பௌத்த பிக்குகள் இதற்கெதிராக தூண்டப்பட்டமை ஆகியவற்றுக்கு எதிராக ஜனாதிபதி இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மீது முஸ்லிம் சமூகம் தற்போது அதிருப்திகொண்டுள்ளது.

தம்புள்ள பள்ளிவாசல் மீதான தாக்குதல் ஜனாதிபதியின் பூரண ஆதரவுடன் இமானுவேல் சுமங்கள தேரர் மற்றும் ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் பெரேரா ஆகியோர் தலைமையில் மேற் 04

# கிழக்கு மாகாண தேர்தலில் அரசின் ஆதரவுடன் வரதர்

கொழும்பு, ஏப். 24

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் களத்தில் குதிக்கும் பரபரப்பிலும் பேரப்பேச்சுகளிலும் தமிழ் - முஸ்லிம் கட்சிகள் பம்பரமாகச் சுழன்று கொண்டிருக்கும் இவ்வேளையில், முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாளும் களத்தில் குதிக்க ஆயத்தமாகி வருகிறார் என நம்பகரமாகத் தெரியவருகின்றது.

ஐ.ம.சு.மு. அரசின் பங்காளிக்கட்சியாக கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் குதிக்கவே முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் அர 04

# 16 வயது சிறுமியுடன் நேற்று தவறாக நடக்க முயன்ற சிப்பாய்

## நெடுங்கேணியில் பதற்றம்

நெடுங்கேணி, ஏப். 24

வவுனியா, நெடுங்கேணிப் பகுதியில் 16 வயதுச் சிறுமியுடன் தவறாக நடக்க முயன்ற சிப்பாய் அயலவர்களின் கூக்குரலால் தன் முயற்சியை கைவிட்டு தப்பி ஓடியுள்ளார் என்று மக்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 10.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

குறித்த சிறுமி வவுனியாவில் தங்கியிருந்து க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு புதுக்குடியிருப்பில் தோற்றிவிட்டு ஒரு வாரத்துக்கு முன்னர்தான் நெடுங்கேணியில் உள்ள 04

# யாழ்ப்பாணத்தில் மேதினத்தை குழப்புவதற்கு அரச தரப்பு சதி

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப். 24

எதிர்க்கட்சிகள் இணைந்து யாழ்ப்பாணத்தில் நடத்த திட்டமிட்டுள்ள மேதினக் கூட்டத்தை குழப்புவதற்கு, அரசும், அரசுடன் சம்பந்தப்பட்ட சக்திகளும் முயற்சித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க குற்றம் சாட்டியுள்ளார். எனினும் இவ்வாறு ஏற்படுத்தப்படும் சகல சவால்களையும் முறியடித்து, யாழ். நகரில் திட்டமிட்டபடி மேதினக் கூட்டம் நடத்தப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். 04

# வன்னியில் 15 லட்சம் கண்ணிகள்

யாழ்ப்பாணம், ஏப்.24

வன்னிப் பிராந்தியத்தில் 15 லட்சம் நிலக்கண்ணி வெடிகள் வரையில் இருக்கலாம் என்றும் இவற்றை அகற்றுவதற்கு 893 மில்லியன் ரூபா வரையில் செலவாகும் என்றும் ஜனாதிபதி விசேட செயலணியால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 04

# தமிழ்த் தலைவர்கள் ஈழம் கோரவில்லை

## இந்திய எம்.பி. ரங்கராஜன்

புதுடில்லி,ஏப். 24

இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்காக அரசியல் தீர்வையே கேட்பதாகவும் தமிழீழம் வேண்டுமென்று எவரும் கோரவில்லையெனவும் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்ட இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் அங்கம் வகித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரி.கே.ரங்கராஜன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் [illegible] திமோர், கோசோவா, மொன்ரேனிகுறோ போன்ற நாடுகள் 04

# பிள்ளையார் கோயிலை அகற்ற உத்தரவு திருமலைத் தமிழர்கள் கொந்தளிப்பு

## பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் நகர அபிவிருத்திச் சபை திடீர் நடவடிக்கை

கொழும்பு, ஏப்ரல் 24

தம்புள்ளைப் பள்ளிவாசல் பிக்குகளால் சேத[illegible] விவகாரத்தை [illegible] சிறுபான்மையின மக்கள் மத்தியில் எழுந்துள்ள கொதிப்பு தணியும் முன்னரே கிழக்கில் திருகோணமலையில் 60 வருடகால பழைமை வாய்ந்த விநாயகர் ஆலயத்தையும் அகற்றுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை பொது வைத்தியசாலை வளாகத்தினுள் அமைந்துள்ள இந்தப் பிள்ளையார் ஆலயத்தின் கும்பாபிஷேகம் எதிர்வரும் ஜூலை 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், பாதுகாப்பு 04

### மின்னல் தாக்கி மீனவர் மரணம்

கடற்றொழிலில் ஈடுபட்டிருக்கும்போது மின்னல் தாக்கியதில், 24 வயதுடைய விதானகே நலிந்த லக்மால் என்பவர் உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் திருகோணமலை கடற்பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

### கல்கமுவவில் கடும் காற்று: 69 வீடுகள் சேதம்

கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவில் வீசிய கடும் காற்று காரணமாக 67 வீடுகள் சேதமடைந்துள்ளன. புதுருவகந்த, குருந்தன்குளம் மற்றும் கெலேகம ஆகிய பிரதேசங்களை ஊடறுத்து இந்த கடும் காற்று வீசியுள்ளதாக இடர்முகாமைத்துவ மத்திய நிலைய ஊடகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் சரத் லால் குமார தெரிவித்தார். பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### சந்தேக நபர்கள் மீதான விசாரணை ஒத்திவைப்பு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலை அடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மீதான விசாரணையை கொழும்பு மேல் நீதிமன்றம் ஜூலை மாதம் 17 ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளது. சந்தேகநபர்களான ரூபதி சர்மா, அவரது மனைவி மற்றும் வேலாயுதம் வரதராஜ் ஆகியோர் கடந்த 12 வருடங்களாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீதான வழக்கு இதுவரை ஆறு நீதிபதிகளால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கு விசாரணை நடைபெறும் போது நீதிபதிகள் ஒவ்வொருவரும் விசாரணை அறிக்கையை முழுமையாகப் படிக்க அவகாசம் வேண்டும் என்று கூறியே இந்த வழக்கின் விசாரணைகளை ஒத்தி வைத்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

### ஜெஹான் முபாரக் பிணையில் விடுதலை

இலங்கை கிரிக்கெட் அணி வீரர் ஜெஹான் முபாரக்கை சிலாபம் நீதிமன்றம் நேற்றுப் பிணையில் விடுதலை செய்துள்ளது. கொழும்பு - சிலாபம் வீதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற விபத்தொன்றில் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து இவர் கைது செய்யப்பட்டிருந்தார். இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் உயிரிழந்து மற்றொருவர் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

### இடியுடன் கூடிய மழை பெய்யும்

நாட்டின் பல பகுதிகளிலும் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் எனவும் கடும் காற்று வீசும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது. நாட்டின் மேல் நிலை கொண்டுள்ள அனைத்து வலயங்கள் இடையிலான குவிவு வலயம் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அந்தத் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது. வட அரைக்கோளம், தென் - அரைக்கோளம் ஆகியவற்றிலிருந்து வீசும் காற்றுகள் சந்திக்கும் இடமே அனைத்து வலயங்கள் இடையிலான குவிவு மையம் எனப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடுமாறிய பீரிஸ்

கொழும்பு, ஏப் 24

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் வித்தியாசம் தெரியாமல், செய்தியாளர் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், தடுமாறியமை இராஜதந்திர வட்டாரங்களில் மிகவும் கேலிக்குரிய விவகாரமாகப் பார்க்கப்படுகிறது.

அண்மையில் பலஸ்தீன ஜனாதிபதி அப்பாசுடன் கொழும்பு வந்திருந்த பலஸ்தீன வெளிவிவகார அமைச்சருடன் இணைந்து வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது, வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், தன் பக்கத்தில் பலஸ்தீன வெளிவிவகார அமைச்சரை வைத்துக் கொண்டே, மதிப்புக்குரிய இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் றியாட் அல் மலிகி, மதிப்புக்குரிய இஸ்ரேல் தூதுவர் .....என்று வரவேற்கத் தொடங்கினார்.

அப்போது அவருக்கருகில் இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சரோ, தூதுவரோ இருக்கவில்லை. பலஸ்தீன விவகார அமைச்சரும் தூதுவரும் தான் உடனிருந்தனர்.

வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் இவ்வாறு கூறியதும் பலஸ்தீன வெளிவிவகார அமைச்சர் மற்றும் தூதுவரின் முகம்கள் சிவந்தன. ஒன்றுக்கு இரண்டு முறை இஸ்ரேல் என்று அடுத்தடுத்துப் பீரிஸ் கூறியது அவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஆனால், பீரிஸ் மிகச் சாதாரணமாக மன்னிக்கவும் என்று கூறிவிட்டுத் தொடர்ந்து பேசினார்.

பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் குறைந்தபட்ச வித்தியாசத்தைக் கூட உணராமல், வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் மிகப்பெரிய இராஜதந்திரத் தவறை இழைத்துள்ளதாகக் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று விமர்சித்துள்ளது. (த)

# 13ஆவது திருத்தச் சட்டம் இந்தியா திணித்த சுமை

### சாடுகிறார் சோபித தேரர்


கொழும்பு, ஏப்.24

13ஆவது திருத்தச் சட்டம் என்பது இந்தியாவினால் இலங்கை மீது பலவந்தமான முறையில் திணிக்கப்பட்ட ஓர் தேவை யற்ற சுமையாகும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஒமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாகாணசபைகளுக்குக் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டியதில்லை.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் முன்மொழிவுகள் தொடர்பில் கூட்டணிக் கட்சி களின் கருத்துக்களைக் கோரும் ஜனாதிபதியின் முயற்சி வரவேற்கப்பட வேண்டியது.



ஜாதிக ஹெல உறுமய கட்சி 13'பிளஸ்',13 அல்லது 13'மைனஸுக்கு' ஆதரவளிக்காது.

தமிழ் மக்களுக்கு 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்ற தேவை கிடையாது.

இன ரீதியாக, மத ரீதியாக, பிரதேச ரீதியாகப் பிளவடைந்து வாழ வேண்டுமெனப் பொதுமக்கள் கருதவில்லை. தமிழ் மக்கள் அமைதியான முறையில் வாழ்வதற்கே விரும்புகின்றனர்-என்றார். (த)

### 25 மில்லியன் கப்பம் கோரியமை

## பிரதி அமைச்சர் மீது விசாரணை

கொழும்பு, ஏப் 24

மினுவாங்கொடையில் காணியொன்றைக் கொள்வனவு செய்த வர்த்தகர் ஒருவரிடமிருந்து 25 மில்லியன் ரூபா கப்பம் பெற முயன்றதாகக் கூறப்படும் பிரதியமைச்சர் ஒருவர் குறித்துப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகப்பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடை, ஹொரன்பெல்ல பிரதேசத்தில் காணியொன்றை வாங்கிய வர்த்தகரான பி.கே. சிந்தக மொஹான் பெரேரா பெப்ரவரி 27 ஆம் திகதி இது தொடர்பாக மினுவாங்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவுசெய்துள்ளார்.

இந்தப் பிரதியமைச்சர் பெப்ரவரி 26 ஆம் திகதி தனது செல்லிடத் தொலைபேசிக்கு அழைப்புவிடுத்து 25 மில்லியன் ரூபா பணம் வழங்காவிட்டால் கொலை செய்யப்போவதாக அச்சுறுத்தினார் என அந்த வர்த்தகர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அச்சுறுத்தல் அழைப்பு விடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் தொலைபேசி இலக்கமானது பிரதியமைச்சருக்கு வழங்கப்பட்ட தொலைபேசி இலக்கமாகும் என சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (த)

## அரச சிங்கள இனவாதிகளால் முஸ்லிம்களுக்கு அநியாயம்

### ஜனாதிபதியிடம் முறையிடுகிறார் சுபைர்

கொழும்பு,ஏப்.24

புலிகள் முஸ்லிம் மக்களுக்கு செய்த அநியாயத்தை விடவும் மிகவும் கொடூரமான அநியாயத்தை இன்றைய அரசின் பங்காளிக் கட்சிகளாகவுள்ள இனவாதக் கட்சிகளின் சிங்கள கடும் போக்காளர்கள் செய்துள்ளதற்கு சான்றாக தம்புள்ள கைரியா ஜும்ஆ பள்ளிவாசல் மீதான தாக்குதல் சம்பவம் அமைந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட சிங்கள கடும் போக்காளர்களான இனவாதிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிக்க ஜனாதிபதி முன்வர வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளரும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சருமான எம்.எஸ். சுபைர் கோரியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய ஆட்சியாளர்கள் எதிர்கொண்ட சவால்களுக்கு முட்டுக் கொடுத்து அரசுக்குப் பேராதரவை அளித்த முஸ்லிம்களின் நெஞ்சறைகளைப் பிளந்தது போன்று தம்புள்ள பள்ளிவாசல் மீதான தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஹெல உறுமய போன்ற இனவாதிகளின் போக்குக்கு அரசு ஆட முற்பட்டால் இந்த நாட்டில் வாழும் சிறுபான்மைத் தமிழ் , முஸ்லிம் மக்களின் இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு விடும். ஐக்கிய இலங்கைக்குள் சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் உள்ளிட்ட பல்லினத்தவர்களையும் அரவணைத்துச் செல்வதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூளுரைப்பதை இனவாதிகள் வேட்டு வைத்துத் தகர்த்துள்ளனர்.

முஸ்லிம் மக்களின் மனங்களைப் புண்ணாக்கி சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களின் இருப்பைக் கேள்விக் குறியாக்கி கொடூரங்களைப் புரிய எவரும் முற்படக் கூடாது-என்றார். (த)

## நேர்மையான தலைவர் சம்பந்தன்

கொழும்பு, ஏப்.24

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஓர் நேர்மையான தலைவர் என்று இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவரும் பா.ஜ.க. தலைவருமான சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார்.

தமிழ்த்தலைவர்களும் தமிழர்களும் பிளவுபடாத ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வொன்றை காண்பதற்கே விரும்புகின்றனர். இலங்கையின் இறைமை ஒருமைப்பாட்டை மதிக்கின்றனர். அந்தவகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஓர் நேர்மையான தலைவர் என்று சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார்.

இந்திய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு 6 நாள் பயணத்தை முடித்துக்கொண்டு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் கடந்த சனிக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் கேட்ட வினாக்களுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதில் தமிழ் தலைவர்கள் உறுதியாகவே இருக்கின்றனர்.

அரசியல் தீர்வு தொடர்பில் நாம் ஒவ்வொரு சந்திப்புக்களிலும் வலியுறுத்தியே வந்திருக்கின்றோம். ஜனாதிபதியிடமும் வலியுறுத்தினோம்.

பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வொன்றே அவசியம் என்பதைச் சம்பந்தன் பல தடவைகள் வலியுறுத்தியுள்ளார்''-என்றார் சுஷ்மா (த)




# புகைப்படக் கண்காட்சியும் போட்டியும்

'நல்லிணக்கமும் சமாதானமும்' என்னும் தொனிப் பொருளில் பாடசாலை மாணவர்கள் தனியாகவும், ஏனையோருக்கும் இரு வகையில் போட்டி நடத்தப்படவுள்ளது.

புகைப்படங்கள் 2011ஆம் ஆண்டுக்குப் பின்னர் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

புகைப்படத்தின் Soft Copy (CD/Flash) சமர்ப்பிக்கப்படவேண்டும்.

ஒருவர் ஆகக் கூடியது 5 புகைப்படங்கள் வரையிலும் அனுப்ப முடியும்.

29.04.2012ஆம் திகதிக்கு முன்னர் புகைப்படங்களின் Soft Copy (CD/Flash) யாவும் 'இல.347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மின் அஞ்சல் ஊடாக அனுப்ப விரும்புவர்கள், comvofm2011@gmail.com என்னும் முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம்.

தொனிப்பொருளுக்கு அமைவாக எடுக்கப்படும் செய்திப்படங்களில் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படுபவை கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் என்பதுடன் போட்டியின் இரு பிரிவுகளிலும்


முதலிடத்துக்கு 10,000/=,

இரண்டாம் இடத்துக்கு 7,000/=,

மூன்றாம் இடத்துக்கு 5,000/=

அத்துடன் 10 புகைப்படங்களுக்கு ஆறுதல் பரிசும் வழங்கப்படும்.

சுதந்திர ஊடகக் குரல்
இல.347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்



விளம்பர அனுசரணை:

லக்ஷ்மி ஏஜென்சி

23/1, 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



# Wanted Journalist

We are looking for a Journalist, with a minimum experience of five years, competent equally in English and Tamil. Should be proficient enough in translation from English to Tamil and viceversa. Candidates who had worked in print or electronic media will be given preference. Should be within the age limit of 30 to 50 years.

Selected candidate should be willing to work with the editorial team and be enthusiastic and co-operative.

Apply with full bio-data and copies of testimonials before 25th April 2012 to:

Chief Editor,
New Uthayan Publications (pvt.) Ltd,
361, Kasthuriyar Road,


## கொழும்பு - மதுரை இடையே நேரடி விமான சேவை

புதுடில்லி,ஏப் 24

இலங்கை மற்றும் மதுரைக்கு இடையில் நேரடி விமான சேவையை ஆரம்பிக்க இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளதாக இந்திய காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மணிக்கா டகொரே தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் இருந்து இலங்கை வந்த நான்கு காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் மணிக்கா டகொரேவும் ஒருவராவார்.

இலங்கை ஜனாதிபதியுடனான சந்திப்பில் இரு நாட்டு கலாசார உறவுகளை மேம்படுத்திக் கொள்வது குறித்துக் கலந்துரையாடப்பட்டதாகவும் இதன்போது மதுரை - இலங்கைக்கு இடையில் நேரடி விமான சேவையை ஆரம்பிக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்ததாகவும் மணிக்கா டகொரே குறிப்பிட்டுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மல்வத்த பீடத்தின் உபபீடாதிபதி அட்ட பகஸ்கட் சத்தர்ம கீர்த்தி ஸ்ரீ சுமண சித்தாந்த கல்யாண திஸ்ஸாபிதான தேரரின் வடமாகாண பிரதி பிரதான சங்கை நாயக்க நியமன பதவிப் பிரமாணத்தை முன்னிட்டு யாழ்.நாகவிகாரையில் நேற்று இடம்பெற்ற பாராட்டு நிகழ்வின்போது யாழ்.நாகவிகாரை பீடாதிபதி சிறிவிமலதேரர், மல்வத்து பீடத்தின் உபபீடாதிபதிக்குப் பாராட்டுப் பத்திரம் வழங்குகிறார். இந்த் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் அமர்ந்துள்ளனர். (ம-3)

குகநாதனின் தாக்குதலுடன் தொடர்புடைய

# முக்கிய சந்தேகநபரை விரைவில் கைது செய்வோம்

## சட்டமா அதிபர் அனுமதி கிடைக்கட்டும் என்கிறார் சமன்சிகேரா

யாழ்ப்பாணம், ஏப்.24

ஊடகவியலாளர் குகநாதன் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் முக்கிய சந்தேக நபரைக் கைது செய்ய சட்டமா அதிபரின் அனுமதியைக் கோரியுள்ளோம்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் யாழ்.தலைமைப் பொலிஸ் அதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.

யாழ்.நகரில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்கள் தொடர்பாகத் தெரிவித்த போது அவர் இவ்வாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குகநாதன் தாக்கப்பட்டது உண்மைச் சம்பவம். நாங்கள் அதை ஆராய்ந்தபோது பிரபல சட்டத்தரணி ஒருவர் கைக் கூலிகளை வைத்துத் தாக்கியிருந்தார் என்பது தெரிய வந்தது. சம்பவத்தில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். முக்கிய சந்தேக நபரைக் கைது செய்ய சட்டமா அதிபரின் அனுமதி கோரப்பட்டுள்ளது. அது கிடைத்ததும் உண்மை நிலையை அறிந்து கொள்ளலாம்.- என்றார். (ம-7)

### பஸ்ஸில் திருடனின் 'திருவிளையாடல்'

யாழ்ப்பாணம், ஏப்.24

வங்கியில் அடைவு வைத்த நகைக்கு பணம் செலுத்துவதற்காக 90 ஆயிரம் ரூபாவுடன் சென்றவர் பதை பதைத்துப் போனார்.

பஸ்ஸில் பயணித்த அவரின் பணம் காணாமல் போய்விட்டது. பின்னர் 88 ஆயிரத்து 500 ரூபா பணம் பஸ்ஸில் எங்கும் சிதறுண்டு கிடந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை 751 ஆம் இலக்க வழி தனியார் பஸ் ஒன்றில் இடம்பெற்றது.

குறித்த பெண், வியாபாரி மூலையில் இருந்து பருத்தித்துறை வங்கி ஒன்றில் அடைவுக்கான பணத்தைச் செலுத்துவதற்காக கைப்பையில் 90 ஆயிரம் ரூபாவை எடுத்துச் சென்றுள்ளார்.

திடீரென கைப்பையைப் பார்த்த பெண் பணத்தைக் காணாது பதற்றமடைந்து சத்தம் போட்டுள்ளார்.

இதனையடுத்து பஸ் உடனடியாகப் பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டது. பயணிகளை இறக்கி பொலிஸார் தேடிய போது ஆயிரத்து 500 ரூபா பணம் குறைந்த நிலையில் பஸ்ஸுக்குள் சிதறிய நிலையில் பணம் காணப்பட்டதாகக் கூறப்பட்டது. (ம-253)

## 'பொல்லாத' கணவரைச் 'சிறை மீட்டார்' மனையாள்

தென்மராட்சி, ஏப். 24

'பொல்லாத' தமது கணவரை, அவர் தாக்கியதால் ஏற்பட்ட காயம் மாறமுன்னர் மன்னித்து நீதிமன்றுக்குச் சென்று சிறைமீட்டார் மனைவி.

இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்றது.

நடந்தது இதுதான்:

கடந்த வியாழக்கிழமை போதை தலைக்கேறிய நிலையில் வீடு வந்துசேர்ந்தார் கணவர். வந்த கையோடு கணவன்-மனைவி இடையே சிறு சச்சரவு. அது வாக்குவாதமாக மாறியது. கோபம் கொப்பளித்த நிலையில் ஓடிச்சென்று தடியை முறித்துக்கொண்டு பாய்ந்து வந்தார். தனது வீராவேசத்தைக் காட்டினார். மனைவிக்குத் தலையில் மட்டுமன்றி உடலெங்கும் காயங்கள்.

அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மறுநாள் பொலிஸ் வந்து பிடித்துச் சென்றது கணவரை. இவரை நேற்று சாவகச்சேரிநீதிமன்றுக்குக்கொண்டு வந்தனர் பொலிஸார்.

இதனை அறிந்துகொண்ட அவரது மனைவி, வைத்தியசாலையில் விசேட அனுமதி பெற்று தலையில் கட்டுடன், ஓடோடி வந்தார் நீதிமன்றுக்கு.

சட்டத்தரணி ச.சிவரூபன் மூலம் கணவரைப் பிணையில் விடுவிக்க மனுச் செய்தார்.

வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபரை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார். அத்துடன் பிரதி வெள்ளிக்கிழமைகள் தோறும் நீதிமன்றில் கையொப்பம் இட வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

கணவன் வந்தார் வெளியில். மனைவி மீண்டும் சென்றார் வைத்தியசாலைக்கு. அங்கு சென்ற அந்தப் பெண்ணை வைத்தியரும் 'விடுவித்து' வீடு செல்ல அனுமதித்தார்.

நாவற்குழி, கோகிலாக் கண்டியைச் சேர்ந்த ஈஸ்வரன் அகிலா (வயது-28) என்பவரே அந்தப் பெண் ஆவார். (ஒ-9)

## புதிய நகர்ப் பகுதியில் புதிய வடிவில் பஸ் நிலையம்

தென்மராட்சி, ஏப்.24

பளை நகர்ப் பகுதியில் 50 லட்சம் ரூபா செலவில் நவீன பஸ் நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அமைச்சின் வடக்கு துரித மீட்சித் திட்டத்தில் (என்றிப்) நிர்மாணிக்கப்பட்டுள்ள பஸ் நிலையக் கட்டடத்தின் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இந்த பஸ் நிலையம் விரைவில் பொதுமக்களின் பாவனைக்கு விடப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

போரின் போது அழிவடைந்த பளை பிரதேச சபையின் நவீன சந்தை மற்றும் கடைத் தொகுதிகள் அமைந்திருந்த இடத்தில் ஐங்கோண வடிவில் நவீன பஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## 'ரீ-சேர்ட்' அணிந்த பயணி ஆடாக மாறிய அதிசயம்

தென்மராட்சி, ஏப்.24

'ஹைஏஸ்' வாகனம் ஒன்றின் முன் ஆசனத்தில் வழக்கத்தை விட அதிகளவான பயணிகள் இருந்ததை அவதானித்து பரிசோதித்த பொலிஸார் 'ரீ-சேர்ட்' அணிந்த பயணி ஒருவர் ஆடாக மாறியிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

இந்த 'அதிசயச்' சம்பவம் நேற்று முன்தினம் மந்துவிலில் இடம்பெற்றது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

மந்துவிலில் சென்றுகொண்டிருந்த 'ஹைஏஸ்' வாகனம் ஒன்றில் கொள்ளவை விடவும் அதிக பயணிகள் முன் ஆசனத்தில் இருப்பதைக் கண்ட பொலிஸார் அதை மறித்தனர். ஆனால், என்னே ஒரு ஆச்சரியம். முன் ஆசனத்தில் 'ரீ-சேர்ட்' அணிந்திருந்த பயணி ஒருவர் உண்மையில் ஒரு மறியாடு என்பது பொலிஸாருக்கு அப்போது தான் தெரியவந்தது. தாம் ஆட்டை வாகனத்தில் கொண்டு செல்வதை மறைப்பதற்காகவே இவ்வாறு குறித்த ஆட்டுக்கு வாகனத்தில் இருந்தோர் ரீ-சேட் அணிவித்து கொண்டு சென்றுள்ளனர்.

எனினும் பொலிஸார் இதுகுறித்து விசாரித்த போது ஆட்டினை வளர்ப்பதற்காகவே விலை கொடுத்து வாங்கிச் செல்வதாக அதில் இருந்தோர் தெரிவித்தனர்.

அத்துடன் குறித்த வாகனத்தின் சாரதிக்கு சாரதிய அனுமதிப்பத்திரமும் இருக்கவில்லை.

மறியாட்டை கடத்தியமை, சாரதிய அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை போன்ற குற்றச் சாட்டுக்களுடன் கொடிகாமம் பொலிஸாரால் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் வாகனதில் இருந்த மூவருக்கு எதிராக வழக்குத் தாக்குதல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் மூவரையும் மே இரண்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

குறித்த மூவரும் புத்தளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மீளக் குடியேறியோர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ங-9)

### நிகழ்வுகள் இன்று

**கலந்துரையாடல்**

தென்மராட்சி பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் தொடர்பான கலந்துரையாடல் முற்பகல் 11 மணிக்கு பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ம-9)

**எழுத்தாளர் கௌரவிப்பு**

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி உப அலுவலகத்தின் கீழ் இயங்கும் கைதடி பொது நூலகத்தின் உலக புத்தக தினமும் எழுத்தாளர் கௌரவிப்பும் நிகழ்வும் பிற்பகல் 3 மணிக்கு பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா தலைமையில் நடைபெறவுள்ளன. (ம-131)

யாழ்.மாவட்ட மாற்றுத் திறனாளிகள்

## சாரதி அனுமதிப்பத்திரம் பெறமுடியாது திணறல்

யாழ்ப்பாணம்,ஏப்.24

சாரதி அனுமதிப் பத்திரத்திற்காக விண்ணப்பித்து வருடங்கள் கடந்தும் மாற்றுத்திறன் கொண்டவர்கள் எனக் காரணம் காட்டி இதுவரை அனுமதிப் பத்திரம் வழங்கப்படாததால் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் கவலை அடைந்துள்ளனர்.

மாற்றுத் திறனாளிகள் சாரதி அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பிக்க முடியும் என்று யாழ்.மாவட்ட செயலகத்தால் அறிவிக்கப்பட்டதற்கு அமைவாக மாற்றுத்திறன் கொண்ட 18 பேர் ஓட்டோவுக்கான அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பம் செய்தனர். எனினும் இதுவரை 3 பேருக்கு மட்டுமே சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

சுயதொழில் முயற்சிக்காக ஓட்டோ பயன்படுத்தும் நோக்குடன் வங்கிகள் மூலம் கடன் உதவி பெற்றும், தொண்டு நிறுவனங்களின் உதவியின் மூலமும் ஓட்டோக்களைப் பெற்றுக் கொண்டுள்ள மாற்றுத் திறனாளிகள் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாத காரணத்தால் வீடுகளுக்குள் முடக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தொழில் வாய்ப்பின்றிப் பெரும் சிரமம் அடைந்து வருகின்றனர்.

இது தொடர்பாக பாதிப்படைந்துள்ள மாற்றுத் திறனாளிகள் தெரிவிக்கும் போது: "சாரதி அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப்பம் செய்து வருடங்கள் கடந்துவிட்டன. நாம் மாற்றுத்திறன் கொண்டவர்கள் எனக் காரணம் காட்டியே எமது சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான விண்ணப்பங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மாற்றுத் திறனாளிகளின் அமைப்பினூடாகவும் பலரிடம் முறையீடு செய்தோம். ஆனால் இதுவரை எதுவித தீர்வும் பெற்றுத் தரப்படவில்லை என்றனர். (ம-14)

## யாழ்.மின்சார சபைக்கு புதிய கட்டுப்பாட்டு அலகு

### விசேட தொழிற்பாட்டு குழுவால் பணிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ்.மின்சார சபைக்கு புதிய கட்டுப்பாட்டு அலகு ஒன்றை அமைக்கும் வேலைத் திட்டம் கொழும்பு மின்சார சபையின் விசேட தொழிற்பாட்டுப் பிரிவால் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த வேலைத் திட்டம் இந்த வருட இறுதிக்குள் 50 வீதம் பூர்த்தியடைந்துவிடும் என்று மின்சார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கட்டுப்பாட்டு அலகு வடமாகாணத்தில் முதன் முறையாக அமைக்கப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் உள்ள மின்சார விநியோகம் அனைத்தையும் இந்தக் கட்டுப்பாட்டு அலகு மூலம் சீர்செய்ய முடியும்.

சுன்னாகம் மின் நிலையத்தின் ஒரு பகுதியில் இது இயங்கி வருகிறது. வடமாகாணத்தில் லக்ஷபானா மின்சாரம் விநியோகிக்கப்படும் [illegible] தவிர ஏனைய பகுதிகளில் மின் பிறப்பாக்கிகள் ஊடாகவே மின் விநியோகம் இடம்பெறுகின்றது.

இந்தக் கட்டுப்பாட்டு அலகை அமைப்பதன் மூலம் குறித்த பகுதிகளில் குறிப்பிட்ட பகுதிகளுக்கு தனித்தனியே ஆளிகள் அமைத்து மின் துண்டிப்பை மேற்கொள்ள முடியும்.

இதனால் முழு இடங்களுக்குமான மின் துண்டிப்பு தவிர்க்கப்படும்.

அனைத்துப் பகுதிகளுக்கும் 30 வரையான ஆளிகள் இந்தக் கட்டுப்பாட்டு அலகு மூலம் பொருத்தப்படும்.

இவ்வாறு கட்டுப்பாட்டு அலகின் மூலம் ஆளிகளைப் பொருத்தி இயக்குவதால் தேவையற்ற விபத்துக்களையும் கட்டுப்படுத்த முடியும்.

இந்த வேலைத் திட்டத்துக்கான இயந்திரங்கள், ஆளணி வளம் என்பன கொழும்பில் இருந்து வந்த விசேட குழுவால் எடுத்து வரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மின்சார சபையின் அதிகாரி ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். (ம-13)

### புகையிலைச் செய்கை மழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.24

யாழ்.குடாநாட்டில் புகையிலைச் செய்கையாளர்கள் அண்மையில் பெய்த மழையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரத்தில் திடீரெனப் பெய்த மழையால் புகையிலையில் மழை நீர் பட்டதால் அவை வெளிறிப் பழுதடைந்துள்ளன.

கூடுதலாகத் தீவுப் பகுதியிலும் வலி.கிழக்குப் பகுதியிலுமே இவ்வாறு புகையிலைப் பயிர்கள் பாதிக்கப்பட்டள்ளன.

நல்ல நிலையில் காணப்பட்ட பயிர்களே மழையால் பாதிக்கப்பட்டுள்ளன.

அதனைவிடச் சில விவசாயிகள் புகையிலையை அறுவடை செய்து வெயிலில் உலரவிட்டிருந்தனர். அவை மழையில் நனைந்து சேதமடைந்தன.

இதேவேளை, கடந்த வாரத்தில் 60 ரூபாவுக்கு மேல் இருந்த அறுவடை செய்யப்பட்ட ஒரு புகையிலைச் செடி தற்போது 25 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளதாகச் செய்கையாளர்கள் தெரிவித்தனர். (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்புள்ள பள்ளிவாசலை அகற்றுவதில் பௌத்தர்கள் தீவிரம்; 6 மாதங்கள் கெடு

தம்புள்ள, ஏப். 24

தம்புள்ள நகரில் உள்ள பள்ளிவாசல் மற்றும் இந்துக் கோயில் என்பவற்றை அங்கிருந்து அகற்றுவதில் பௌத்தர்கள் தீவிரமாக உள்ளனர்.

நகரில் உள்ள ரஜமஹா விகாரையின் புனிதப் பகுதி என்று அறிவிக்கப்பட்ட இடத்தை அபவிருத்தி செய்வதற்கான திட்டத்தை 6 மாதங்களுக்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டுமென்று தம்புள்ளையில் நேற்று திங்கட்கிழமை நடந்த கூட்டமொன்றில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பௌத்த சாசன அமைச்சின் ஏற்பாட்டில் அமைச்சின் செயலாளர், மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர் மற்றும் தம்புள்ளை ரஜமஹா விகாரையின் தலைமைக் குருவான இனாமலுவே சுமங்கள தேரர் ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

புனித பகுதியிலுள்ள சகல சட்ட விரோதமான கட்டடங்களையும் அகற்றுவது என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக இனாமலுவே சுமங்கள தேரர் கூறினார். அதற்குள்ளேயே பள்ளிவாசல் மற்றும் இந்துக் கோயில் என்பனவும் உள்ளன.

1982ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்த இடம் புனிதப் பகுதியாக அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்ட வரைபடத்தில், இந்துக் கோவிலோ இருக்கவில்லை என்று கூறும் சுமங்கள தேரர், எனவே அவை அங்கிருந்து அகற்றப்பட்டாக வேண்டும் என்று பிடிவாதமாக உதயனிடம் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதியின் வேண்டுகோளின் படி, தம்புள்ள பகுதிக்குச் சென்ற அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா சுமங்கள தேரரையும் பள்ளிவாசல் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசினார்.

''இன்னும் மூன்று மாதங்களுக்கு குறித்த பள்ளிவாசலில் வழிபாடுகளை நடத்துவதற்குத் தடை இருக்காது'' என்று அவர் தெரிவித்தார்.

பள்ளிவாசலை குறித்த இடங்களிலிருந்து அகற்றுவது குறித்து பள்ளிவாசல் பிரதிநிதிகளும் முஸ்லிம் மத பிரமுகர்களும் பிரதேச மக்களுமே தீர்மானிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-01)

# யாழ்ப்பாணத்தில் மேதினத்தை குழப்புவதற்கு அரச தரப்பு சதி

01↘ அவர் மேலும் தெரிவித்ததாவது;-

யாழ்ப்பாணத்தில் நடத்த திட்டமிட்டுள்ள மே தினக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட அரசியல் கட்சிகள் கலந்துக் கொள்ளவுள்ளன.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி கலந்துக்கொள்ளும் இரண்டு மேதினக் கூட்டங்கள் நடைபெற உள்ளதாக சிலர் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் ஐக்கிய தேசியக் கட்சி கலந்துக் கொள்ளும் உத்தியோகபூர்வமான ஒரே மே தினக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் மாத்திரமே நடைபெறவுள்ளது.

யாழ் நகரில் நடைபெறும் மே தினக் கூட்டத்துக்கு ஒரு தேர்தல் தொகுதியில் இருந்து தலா 100 பேரைக் கலந்துக் கொள்ளச் செய்ய ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட எதிர்க்கட்சிகளும் கூடியளவில் மக்களை இந்த கூட்டத்தில் கலந்துக்கொள்ள செய்வதற்கான நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்துள்ளன.

இந்தக் கூட்டத்தக் குழப்புவதற்கு அரசு முயற்சிக்கின்றபோதும் திட்டமிட்டபடி மேதின நிகழ்வு நடைபெறும்-என்றார்.(த)

# வன்னியில் 15 லட்சம் கண்ணிகள்

01↘ வன்னி பிராந்தியதில் 3 ஆயிரத்து 800 சதுர கிலோ மீற்றர் பரப்பு நிலப் பகுதியில் 15 லட்சம் நிலக்கண்ணி வெடிகள் வரையில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்றும், இவற்றை அகற்றுவதற்கு 893 மில்லியன் ரூபா வரையில் செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் நாகர்கோயில் முகமாலை முன்னரங்க நிலைகளில் மாத்திரம் 8 லட்சம் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-5)

# பரிந்துரைகளை விரைவில் அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்

## தயான் ஜயதிலக்க வலியுறுத்துகிறார்

''நல்லிணக்க ஆணைக் குழு தனது அறிக்கையில் முன்மொழிந்துள்ள சிபாரிசுகளை அரசு விரைவில் பரிபூரணமாக அமுல்படுத்தவேண்டும். யுத்தக்குற்றங்கள் ஏதும் இடம்பெற்றிருக்குமாயின் அவற்றை இனங்காணும் விசாரணைப் பொறிமுறை உள்நாட்டிலேயே வகுக்கப்படவேண்டும்.''

- இவ்வாறு பிரான்ஸுக்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜயதிலக தெரிவித்தார்.

இலங்கையில் ஏதாவது யுத்தக்குற்றங்கள் இடம் பெற்றிருப்பின் அவற்றைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம். அதற்கான நடவடிக்கைப் பொறிமுறையை நாமே வகுக்கவேண்டும் என்பதும் அவசியம். இது தொடர்பில் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்குலகங்களுக்குக் கையளிக்கவேண்டிய அதிகாரம் கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

# 16 வயது சிறுமியுடன் நேற்று தவறாக நடக்க முயன்ற சிப்பாய்

01↘ தனது சொந்த வீட்டுக்கு வந்திருந்தார்.

நேற்றுக்காலை வேலைக்காகப் பெற்றோர் இருவரும் வெளியே சென்று விட்டனர். குறித்த சிறுமியின் தங்கையும் பாடசாலைக்குச் சென்று விட்டார். இந்த வேளையில் வழமையாக குறித்த பகுதியில் பதிவுகளை மேற்கொள்வதற்காக வருகின்ற சிப்பாய் சிறுமி தனியே இருப்பதைக் கண்டு அவரைத் தவறான நோக்கோடு அணுகி உள்ளார். வீட்டில் உள்ள நாள்காட்டியில் தனது தொலைபேசி இலக்கத்தை எழுதிய சிப்பாய் அந்த எண்ணுக்கு தொடர்பு கொண்டு தன்னுடன் கதைக்குமாறும் இல்லாவிட்டால் சிறுமியின் தங்கையை பாடசாலை செல்லும் போது கொலை செய்யப்போவதாகவும் மிரட்டியுள்ளார்.

எனினும், சிறுமி இதற்கு மறுத்து கூச்சலிட முற்பட்டுள்ளார். இதைத் தடுப்பதற்காக சிப்பாய் பாய்ந்து சென்று சிறுமியின் கழுத்தை நெரித்ததுடன் தவறாகவும் நடக்க முயன்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது. எனினும்சிறுமியின் கூச்சலைக் கேட்ட அயலவர்கள் அங்கு ஓடி வரவே தனது முயற்சியை கைவிட்டுவிட்டு சிப்பாய்தப்பிச்சென்று விட்டார்.

இது குறித்து கனகராயன்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்கு கனகராயன் இராணுவப் பொறுப்பதிகாரியும் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். (ங-35)

# தமிழ்த் தலைவர்கள் ஈழம் கோரவில்லை

01↘ புதிதாக தோற்றம் பெற்றதைப்போன்று இலங்கையிலும் தமிழீழம் உருவாகுவதற்கான வாக்கெடுப்பை நடத்த வேண்டுமென முன்னாள் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.கருணாநிதி முன்வைத்த கோரிக்கை தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

''இந்தியக் குழுவினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் உட்பட கிட்டத்தட்ட சகலதமிழ்த்தலைவர்களையும் சந்தித்தனர்.

'யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பிரஜைகள் கூட்டத்திலும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நடைபெற்ற கூட்டத்திலும் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வொன்று முன்வைக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார். தமிழீழம் குறித்து அவர் எதுவும் தெரிவிக்கவில்லை'' என ரங்கராஜன் கூறினார்.

''நான் ஓர் இலங்கையர். இலங்கையராக மரணமடைய வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்' என இரா. சம்பந்தன் கூறியதாக அவர் மேலும் கூறினார்.

'45,000 தமிழ் விதவைகளின் நிலைமை குறித்து எங்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது. மட்டக்களப்பில் மாத்திரம் 23,000 விதவைகள் உள்ளனர். இதில் 13,000 பேர் 23 வயதுக்கு குறைந்தவர்களாக உள்ளனர். நான் அவர்களுடன் பேசியபோது எனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடிய வில்லை'' என அவர் கூறினார்.

இந்தப் பிரச்சினையை இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முன்வைத்ததாகவும் இதன்போது போரில் பலியான 30,000 படைவீரர்களினது மனைவிமாரும் விதவைகளாக உள்ளானரென்று அவர் கூறினார் என்றும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் ரங்கராஜன் தெரிவித்துள்ளார். (த)

# பிள்ளையார் கோயிலை அகற்ற உத்தரவு திருமலைத் தமிழர்கள் கொந்தளிப்பு

01↘ அமைச்சின் கீழ் இயங்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபை இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. இந்த நடவடிக்கையானது தமிழ் மக்களின் கலாசார, சமய விடயங்களில் கைவைக்கும் விடயமாக மாறியுள்ளதுடன் இந்து மதத்தையும் பாதிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை பொது வைத்தியசாலை வளாகத்தினுள் அமைந்துள்ள இந்த ஆலயம் சுமார் 60 வருடங்களுக்கு முற்பட்ட பழைமை வாய்ந்தது. இந்த ஆலயம் கடந்த காலங்களில் நடைபெற்ற போரால் பாதிக்கப்பட்டிருந்தது. தற்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ள நிலையில் வீதி அபிவிருத்தியைக் காரணம் காட்டி பிள்ளையார் மீது கை வைக்க முயற்சி எடுக்கப்படுகிறது.

இலங்கை அரசு நாட்டினுள் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என சர்வதேச சமூகம் வலியுறுத்தி வருகின்ற நிலையிலேயே இவ்வாறான செயல்களும் நாட்டில் தமிழ்பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் அரங்கேற்றப்படுகின்றன.

இதனால், தமிழ் மக்கள் கடும் அதிருப்தியடைந்து பொங்கி யெழுந்துள்ளனர். தமிழர் கலை, கலாசாரங்களையும், சமய விழுமியங்களையும் அழிக்கும் நடவடிக்கை திட்டமிட்டு அரங்கேற்றப்படுகின்றது என்றும் அவர்கள் விசனமடைந்துள்ளனர். (ங-சி)

# பதவி விலகுகிறார் ஹக்கீம்?

01↘ கொள்ளப்பட்டுள்ளமைக்கான தகவல்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குத் தற்போது முழுமையாக கிடைத்துள்ளன.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம், இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து கலந்துரையாடுவதற்காக காணி அமைச்சர் ஜனகபண்டார தென்னகோனைச் சந்திக்க திட்டமிட்டிருந்ததாகக் கட்சியின் உட்தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

முஸ்லிம் பள்ளிவாசல் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமையினால் அரசிலுள்ள முஸ்லிம் அமைச்சர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர். அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி மாத்திரமே இந்தத் தாக்குதலைக் கண்டித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் மீது முஸ்லிம் மக்கள் அதிருப்தி கொண்டுள்ளமையால் அரசில் இருந்து வெளியேறுவதற்கு அமைச்சர் ஹக்கீம் தயாராகி வருகிறார் என்று உட்கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன. ந)

# கிழக்கு மாகாண தேர்தலில் அரசின் ஆதரவுடன் வரதர்

01↘ சியல் காய் நகர்த்தல்களை மேற்கொள்கிறார் எனத் தெரிய வருகின்றது.

இது தொடர்பில் அவரும், அவரது இயக்கப் பிரமுகர்களும் பல்வேறுபட்ட பேச்சுகளில் மிக இரகசியமாக ஈடுபட்டு வருகின்றனர் என மிக நம்பகமான தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

கடந்த வாரம் இலங்கையிலிருந்து சென்னைக்குச் சென்ற கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவருடன் இது தொடர்பில் பேச்சு நடத்தியிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாளின் ஆலோசனைக்கமைய டில்லியிலிருந்து வந்த கட்சியின் விசேட பிரமுகர்கள் ஐவரே இப்பேச்சில் கலந்துகொண்டுள்ளனர்.

சென்னை வட பழனி முருகன் கோயிலுக்கு அருகிலுள்ள 'பீமாஸ்' ஹோட்டலில் தங்கியிருந்த குறித்த இலங்கைப் பிரமுகரைச் சந்தித்த குழுவில் வடக்கு, கிழக்கு மாகாணசபையின் முன்னாள் இரு உறுப்பினர்களும் அங்கம் வகித்துள்ளனர்.

வரதராஜப் பெருமாள் இலங்கையின் அரசியல் நீரோட்டத்தில் மீண்டும் ஈடுபடுவதற்கான சூழ்நிலை மற்றும் கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டால் அத் தேர்தலில் போட்டியிடுவதற்கான கள நிலைவரம் என்பவை தொடர்பிலேயே இப்பேச்சின்போது முக்கியமாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை அரசுடன் நல்லுறவைப் பேணி இந்தியாவிலிருக்கும் வரதர் அணி குடும்பத்தினர் தாயகம் திரும்புவதற்கான ஏற்பாடுகளை எவ்வாறு மேற்கொள்வது என்பன தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது என நம்பகரமாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 25, 30 வருடங்களாக வரதர் அணியைச் சேர்ந்தோரும் அவர்களின் குடும்பத்தினரும் இந்தியாவிலேயே உள்ளனர். தற்போது தாயகத்துக்கு மீள வர ஆர்வம் காட்டுகின்றனர்.

இதற்கான களத்தை ஏற்படுத்தி, கிழக்குத் தேர்தலிலும் போட்டியிடும் [illegible] சியின் குறித்த இலங்கைப் பிரமுகரிடம் பேச்சின் இறுதியில் ஒப்படைக்கப்பட்டது எனப் பேச்சில் கலந்து கொண்ட முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஈ.பி.ஆர். எல்.எவ். வரதர் அணி மற்றும் சுரேஷ் அணியை ஒன்றுபடுத்தும் வேலைத்திட்டம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

சுரேஷ் அணித் தலைவரான சுரேஷ் பிரேமச்சந்திரன் அண்மையில் மட்டக்களப்புக்குச் சென்று கிழக்கு மாகாணசபையில் அங்கம் வகிக்கும் வரதர் அணியின் உறுப்பினர் துரைரெட்ணத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

# இலங்கையில் அரசியல் தீர்வுக்கு இந்திய அழுத்தம் அவசியமானது

01↘ இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களின் மீள்குடியமர்வு, வடக்கில் காணப்படும் இராணுவப் பிரச்சன்னம், இந்தியாவில் வாழும் இலங்கை அகதிகளை அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தல் உட்பட இன்னோரன்ன விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் இது குறித்து பிரதமர் மன்மோகன் சிங்குடன் நேரில் பேசப்படும் எனவும் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். பிரதமரைச் சந்திப்பதற்கான திகதி இன்று முடிவு செய்யப்படும் எனவும் அவர்கள் கூறினர்.

'' இலங்கை தமிழ் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும் அந்த மக்கள் அவர்களது பூர்வீக பூமியில் சுதந்திரமாக வாழக் கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும். ஏனெனில் தற்போது அரசியல் தீர்வை எட்டுவதற்கான தடைகள் தமிழர் சார்பில் இலங்கையில் இல்லை. எனவே இலங்கை அரசை ஆக்கபூர்வமாக நெறிப்படுத்த எமது அறிக்கை மத்திய அரசுக்கு உதவும்'' எனவும் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் நாச்சியப்பன் குறிப்பிட்டார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கைதிகள் குறித்து அரசுக்கு அக்கறையில்லை

## குற்றஞ்சாட்டுகிறார் அரியநேத்திரன் எம்.பி.

மட்டக்களப்பு,ஏப்.24
மட்டக்களப்பில் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் குறித்து அக்கறை ஏதுமின்றி செயற்படுகின்றது அரசு. அவர்களின் விடுதலை தொடர்பில் அரசு தொடர்ந்து அசமந்தப்போக்கில் இருந்து வருகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

தம்மை ஒன்றில் அரசு விசாரணை செய்யவேண்டும் அல்லது விடுதலை செய்யவேண்டும் என்று மட்டக்களப்பு தமிழ் அரசியல் கைதிகள் வேண்டுகோள் விடுத்தமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தடுப்பு முகாம்களில் உள்ள முன்னாள் போராளிகளில் பெரும் எண்ணிக்கையானோரை விடுவித்துள்ளோம் என மார்தட்டும் அரசு, மட்டக்களப்பு சிறைச்சாலைகளில் எவ்வித விசாரணைகளுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் குறித்து எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காமல் இருக்கின்றது. இது அநீதியானது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசுக்கு உண்மையாகவே கரிசனை இல்லை. அதனால்தான் அவர்களை அரசு தொடர்ந்து சிறை வைத்துள்ளது.

அரசின் இந்தச் செயற்பாட்டில் உடனடி மாற்றம் ஏற்படவேண்டும். விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு தமிழ் அரசியல் கைதிகள் கூறுவதுபோல குற்றச்செயல்களில் அவர்கள் ஈடுபட்டிருந்தால் அவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகைகளை அரசு தாக்கல் செய்ய வேண்டும் அல்லது அவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும்.

சிறைச்சாலைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் அங்கு பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். அவர்கள் சிங்களக் கைதிகளின் பல் வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாகின்றனர். அண் மைக்காலங்களில் சிறைச்சாலைகளில் இடம்பெற்ற சம்பவங்கள் இதற்கு உதார ணங்களாகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறைச்சாலைகளுக்குச் சென்று அவர்களைப் பார்வையிட்டபோது தமிழ் அரசியல் கைதிகள் தாம் படும் துன்பியல் நிகழ்வுகளை எம்மிடம் விவரித்துக் கூறியுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளை போதைப்பொருள் பாவனைக்கு சிங்களக் கைதிகள் அடிமைப்படுத்துகின்றனர். இது அரசுக்கும் தெரியும். ஆனால், அரசு அமைதியாக இருக்கின்றது.



இதன் உள்நோக்கம் என்னவென்றால் விசாரணை ஏதுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மீது போதைப்பொருள் பாவனையைக் காட்டி அவர்கள் மீது குற்றம் ஒன்றை நிரூபிக்க அரசு முயல்கின்றது போலத் தெரிகின்றது.

எனவே, தமிழ் அரசியல் கைதிகள் மீது அரசு காட்டும் அநீதியான செயல்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும். அவர்களை விசாரணை செய்து விடுதலைசெய்ய அரசு நட வடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ச-31)

## முன்னாள் போராளிகளுக்கு வவுனியாவில் புத்தாண்டு விழா

வவுனியா, ஏப்.24
புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வரும் முன்னாள் போராளிகளுக்கான புத்தாண்டு விளையாட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்றது.

புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சும், சிறைச்சாலைகள் திணைக்களமும் சேர்ந்து ஏற்பாடு செய்த இவ் விளையாட்டு விழாவில் புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் க.சந்திரசிறி கஜதீர கலந்து கொண்டு நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வுகளில் புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் க.திஸாநாயக்கா வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ், சிறைச்சாலைகள் ஆணையாளர் பிரிகேடியர் தர்சன ஹெட்டி ஆராய்ச்சி ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

முன்னதாக விருந்தினர்கள் மைதான வாசலில் இருந்து கலாசார நிகழ்வுகளுடன் அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து தேசியக் கொடியை புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் ஏற்றி வைக்க மங்கல விளக்கை வவுனியா மாவட்ட அரச அதிபர், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம், அமைச்சின் செயலாளர் உட்பட பலரும் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர், அரச அதிபர், அமைச்சரின் செயலர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் பூந்தோட்டம், வெலிக்கந்தை, பொலநறுவை, நேரியகுளம், சிங்கபுரம் உட்பட நாட்டிலுள்ள புனர்வாழ்வு முகாம்களிலுள்ள முன்னாள் போராளிகள், அவர்களுடைய பிள்ளைகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தமிழ் - சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் பலூன் உடைத்தல், தயிர் முட்டி உடைத்தல் பணிஸ் உண்ணல், கிறீஸ் கம்பம் ஏறுதல், யானைக்குக் கண் வைத்தல், தலையணைச் சண்டை உட்பட பல விளையாட்டுக்கள் இடம்பெற்றன.

இதில் மூவினச் சமயத் தலைவர்கள், அமைச்சின் உயர் அதிகாரிகள், முன்னாள் போராளிகளின் குடும்ப உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். சிறப்பு நிகழ்வாக இராணுவ படையணியால் இசைக் கச்சேரியும் நடத்தப்பட்டன. (க-400)

# குற்றங்களைத் தடுப்பது குறித்து பொலிஸார் - பொதுமக்கள் சந்திப்பு

கிளிநொச்சி, ஏப்.24
கிளிநொச்சி வர்த்தகர்கள், பொதுமக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸாருக்கிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சிப் பிரதேச வர்த்தகர்கள், பொதுமக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸாருக்கு இடையிலான சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி மாவட்டப் பொலிஸ் பிரிவின் மக்கள் தொடர்பாடல் அலுவலகத்தில் மக்கள் தொடர்பாடல் பொலிஸ் பொறுப்பதிகாரி

வங்கிக் காசோலைகள் தொடர்பான மோசடிச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

எம்.எல்.அரிப்டீன் தலைமையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி எட்மன்ட் மகேந்திரா, கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்.டி.நீல்தளுவத்த, கிளிநொச்சி மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சிறி செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

கிளிநொச்சியில் இடம்பெற்று வரும் திருட்டுச் சம்பவங்கள் மற்றும் குற்றச் செயல்களை எதிர்காலத்தில் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் பொலிஸாரை சுற்றுக் காவல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது தொடர்பாகவும் அதற்கு வர்த்தகர்களின் ஒத்துழைப்புக்கள் பற்றியும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதேவேளை அதிகளவு வணிக நிலையங்களில், வெளியிடங்களில் இருந்து வருபவர்களால் பல வங்கிக் காசோலைகள் தொடர்பான மோசடிச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இதில் வர்த்தகர்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட வர்த்தகர்கள், பொதுமக்கள் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர். (க-6)

## மின்னல் தாக்கியதால் மின்சாரம் இல்லை

துணுக்காய், ஏப்.24
வவுனியா மாவட்டம் புளியங்குளம் பிரதேசத்தில் மின்னல் தாக்கி மின்சார இணைப்புகள் பாதிப்படைந்ததால் இப்பகுதி மக்கள் 6 மணித்தியாலங்கள் இருளில் இருக்க வேண்டிய அவலத்தை எதிர்கொண்டனர்.

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி அளவில் மின்சாரம் திடீரென தடைப்பட்டது. இருப்பினும் மக்கள் வழமை போல மின்சாரம் தடைப்பட்டுள்ளதென நினைத்திருந்தனர்.

ஆனால் துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேசம் எங்கும் கன மழையுடன் கூடிய இடி மின்னல் தாக்கம் அதிகரித்துக் காணப்பட்டது.

இந்த நிலையில் புளியங்குளம் பகுதியில் உள்ள பிரதான மின்சார இணைப்பின் மீது மின்னல் தாக்கியதாகவும் இதனால் மின்சாரம் தடைப்பட்டதாகவும் மின்சார சபை ஊழியர்களினால் அறியமுடிந்தது.

மின்னல் தாக்கத்தால் மக்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு உடன் விரைந்த மின்சாரசபை ஊழியர்கள் 6 மணித்தியாலம் திருத்த வேலைகளை மேற்கொண்ட பின்னர் இரவு 9.30 மணிக்கு மின்சாரம் கிடைக்கப்பெற்றது. அன்றையதினம் ஏற்பட்ட இடி மின்னலினால் மக்கள் உறைந்துபோயுள்ளனர். (க-415)

## இலங்கையின் இரட்டை வேடமே சர்வதேச அழுத்தத்துக்கு காரணம்

### குற்றம் சாட்டுகிறது ஜே.வி.பி.

கொழும்பு,ஏப் 24
இலங்கை அரசு கடைப்பிடித்துவரும் இரட்டை வேடக் கொள்கையே இலங்கை மீதான சர்வதேச அழுத்தத்துக்குக் காரணம் என்று ஜே.வி.பியின் பிரசார செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டின்தேசியப்பிரச்சினை என்பது விளையாட்டு அல்ல எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தம் முடிந்த பின் முகாம்களில் உள்ள மக்களைப் பார்வையிட எமக்கு அனுமதி அளிக்கப்படவில்லை.பாதுகாப்புச் செயலாளருக்குக் கடிதத்துக்கு மேல் கடிதம் எழுதியும் எமக்கு அனுமதி அளிக்கவில்லை. ஆனால் இந்தியக் குழுவினருக்கு அங்கு செல்ல அனுமதி அளிக்கப்பட்டது.

இந்திய எதிர்கட்சித் தலைவர், அதாவது பக்கத்துவிட்டு நபர் வந்து எமது நாட்டுப் பிரச்சினையில் தலையிட அனுமதி உள்ளது.அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என இந்திய பிரதிநிதிகளிடம் அரச தரப்பினர் கூறுகின்றனர். இந்தியக் குழு சென்றதும் ஜனாதிபதி ஊடகப் பேச்சாளர் பந்துல ஜயசேகர அப்படி உறுதி அளிக்கவில்லை என்கிறார்.

தனி ஈழக் கோரிக்கையை கருணாநிதி ஐ.நாவுக்கு முன் வைத்துள்ளார். இலங்கை அரசின் இரட்டை வேடம் காரணமாகவே வெளிநாடுகள் எமக்கு அழுத்தம் கொடுக்கின்றன-என்றார். (த)

# காணி பிரச்சினை குறித்து ஹக்கீமிடம் முறைப்பாடு

### தீர்வு பெற்றுத் தருவதாக மக்களிடம் உறுதி

மட்டக்களப்பு,ஏப்.24
ஏறாவூர்பற்று பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மங்களகம பகுதியிலுள்ள நெற்செய்கைக் காணிகளை குத்தகைக்குப் பெற்றவர்கள் தற்போது அவற்றைத் திருப்பித் தருவதற்கு மறுக்கின்றனர். இதுகுறித்து ஏறாவூர் பற்று பிரதேச செயலாளரிடம் பல தடவை முறையிட்டும் உரிய தீர்வுகள் கிடைக்கவில்லை. எனவே இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தாருங்கள் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீமிடம் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் கோரிக்கையை முன்வைத்தனர்.

காத்தான்குடி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மங்களகம காணி உரிமையாளர்கள் அமைச்சர் ஹக்கீமைச் சந்தித்து தமது பிரச்சினைகள் குறித்துப்



பேசியபோதே குறித்த கோரிக்கையை முன்வைத்தனர்.

இதுகுறித்துப் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

போர்நடைபெற்ற காலப் பகுதியில் மங்களகமவிலுள்ள எமது காணிகளில் விவசாயம் மேற்கொள்ள முடியாததொரு சூழ்நிலை ஏற்பட்டது. எனவே, அந்தப் பகுதியைச் சேர்ந்தோருக்கு குத்தகை அடிப்படையில் எமது காணிகளை நாம் கொடுத்திருந்தோம். தற்போது எமது காணிகளை அவர்களிடம் திரும்பக் கேட்ட போது அவற்றைக் கையளிப்பதற்கு மறுக்கின்றனர்.

இந்த விவகாரம் தொடர்பாக காணியின் நிர்வாக எல்லைக்குப் பொறுப்பான ஏறாவூர்பற்று பிரதேச செயலாளரிடம் பலமுறை முறையிட்டோம். ஆனால், குறித்த செயலாளர் இது குறித்து இதுவரை எந்தவிதமான தீர்வுகளையும் எமக்குப் பெற்றுத்தரவில்லை. எனவே, இந்த விவகாரத்தில் தலையிட்டு எமது காணிகளை மீளப் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்- என்றனர்.

இந்த விடயத்தைக் கேட்ட நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் குறித்த காணிகளை தான் விரைவில் பார்வையிடுவதோடு, இது தொடர்பாக அதிகாரிகளுடன் பேசி உரிய தீர்வைப் பெற்றுத் தருவ தாக உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாணசபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் யூ.எல்.எம்.என். முபீன், அக்கரைப்பற்று மாநகரசபையின் முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க் கட்சித் தலைவர் அஷ் ஷேய்க் எஸ்.எல்.எம். ஹனீபா மதனி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பிடி முறைமை மாறினால் மீனவர் பிரச்சினைகள் தீரும்

### தமிழ்நாடு மீனவர் விடுதலைக்கான கூட்டமைப்புத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.24

இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கும் இடம் மற்றும் முறையை மாற்றுவதன் மூலமே இந்திய - இலங்கை மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். இதனை அறிந்துள்ள இந்திய அரசு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

தமிழ்நாடு நிரபராதி மீனவர் விடுதலைக்கான கூட்டமைப்பின் தலைவர் யு.அருளானந்தம் இவ்வாறு யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கும் இடம், முறையை மாற்றியமைக்க வேண்டும்.

பாக்கு நீரிணைப் பகுதி ஆழம் குறைந்த மிகச் சிறிய கடல் பகுதியாகும்.

அதில் மீன்பிடிப்பதில் இரு நாட்டு மீனவர்களும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதன் காரணமாகத்தான் இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையில் பிரச்சினை எழுகின்றது.

இராமேஸ்வரத்திலிருந்து நூறு மைல் கடல் தூரத்தில் ஆழக் கடலில் துறைமுகம் அமைத்து அங்கு மீனவர்களைத் தங்கச் செய்து மீன்பிடிக்கும் வசதியை ஏற்படுத்த இந்திய அரசு திட்டமிட்டுள்ளது.

அதற்காக 62 கோடி ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆழக் கடல் பகுதியில் மீன்பிடிக்கக் கூடிய நிலைமை இதன் மூலம் உருவாக்கப்படும்.

அத்துடன் மீனவர்கள் 'பலநாள்' கலம் பயன்படுத்துவதற்கு வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அதற்கான நடவடிக்கையும் இந்திய அரசு எடுத்துள்ளது. இழுவை மடி படகு பயன்படுத்துவதற்குக் கடந்த ஐந்து வருடங்களாக அனுமதி வழங்குவதை அரசு நிறுத்தியுள்ளது.

இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையில் எந்த விதமான பிரச்சினைகளும் இருக்கக் கூடாது என்பதே எமது விருப்பம்.

கன்னியாகுமரி தொடக்கம் சென்னை வரையான 13 கடலோர மாவட்டங்களில் 8 ஆயிரம் விசைப்படகுகள் மீனவர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த மீனவர்கள் பல நாள் கலம் பயன்படுத்தி ஆழக் கடலில் மீன்பிடிக்கும் நிலைமை ஏற்பட்டதன் பின்னர் இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையில் பிரச்சினை எழுவதைத் தவிர்க்க முடியும்- என்றார். (ம-3)

## முல்லைத்தீவில் ஒருவர் கைது

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெடுங்கேணி பகுதியில் பெருந்தொகை துப்பாக்கி ரவைகளை தன்வசம் வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.இவரிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் இரண்டாயிரத்து 250 ரவைகள் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தின் தலைமை பொலிஸ் இன்ஸ்பெக்டர் உள்ளிட்ட குழுவினர் சந்தேகநபரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர். சந்தேகநபர் நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை நடராஜா

மண்டைதீவைப் பிறப்பிடமாகாவும் சுவிஸை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நடராஜா (பாலசுந்தரம்) 22.04.2012 ஞாயிற்றக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், பாலேந்திரா (ராசன்-சுவிஸ்), காலஞ்சென்றவர்களான இராஜேந்திரா (இந்தியா), மகேந்திரா (மோகன்) மற்றும் ரஜனி(சுவிஸ்), மாலினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கௌரி (சுவிஸ்), ஞானேஸ்வரன்(சுவிஸ்), கிருபாநிதி(கனடா), ஆகியோரின் பாசமிகு மாமனும், பாரிஜா, பவுத்திரா, நிசாந்தன், நிசாயினி. நிதுஜன், அபிராமி, திருமுருகன், திருக்குமரன், திருஅழகன், சிவகாமி ஆகியோரின் பாசமிகு பேரனும், வியாகரத்தினம் (பிரான்ஸ்) காலஞ்சென்ற

தருமராஜா செல்வமலர் (இலங்கை), சோமசுந்தரம் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2012) புதன்கிழமை மு.ப. 10 மணியிலிருந்து 14.00 மணிவரை நடைபெற்று, பி.ப. 15.00 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு - மகன் பாலேந்திரா (ராசன்)
021.9612589-0798632894
மருமக்கள் ஞானேஸ்வரன் (சுவிஸ்)
044.7800146-0764453182
கிருபாநிதி (கனடா) 06478529919.

## மரண அறிவித்தல்



### குணரட்ணம் உலகேஸ்வரி

டச்சுவீதி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், 504, மானிப்பாய் வீதி, ஒட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குணரட்ணம் உலகேஸ்வரி நேற்று (23.04.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா குணரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா- பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், துஷாரா, உருத்திரநாத் ஆகியோரின் அன்புத் தாயும், சஞ்சீவனின் அன்பு மாமியும், காலஞ்சென்ற தருமராசா மற்றும் பாலச்சந்திரன், லோகேந்திரன், ராஜேஸ்வரன், கருணேஸ்வரி, குகதாசன், ரகுநாதன், நவரஞ்சன் ஆகியோரின் சகோதரியும், நகுலேஸ்வரி, காலஞ்சென்ற பஞ்சநாதன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், கிருஸ்ணபிள்ளை, மனோன்மணி, காலஞ்சென்ற சேனாதிராசா, ஜெகதீஸ்வரி, குமாரவேலு, மித்திராதேவி, வாசுகி, ராஜினிதேவி, வசந்தகுமார், கௌசலா, ஜெயா, ஞானகுமார் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2012) செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

504, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

தகவல்: கு.உருத்திரநாத் (மகன்), ம.சஞ்சீவன்(மருமகன், Commercial Bank, கிளிநொச்சி)


## வீடு வாடகைக்குத் தேவை

நெல்லியடி, பருத்தித்துறை பிரதான வீதியில் வீடு வாடகைக்குத் தேவை. (சிறியதோ / பெரியதோ)

தொடர்பு - 0775151761



## வீட்டுடன் காணி விற்பனைக்கு

49/3, சிறாம்பியடி ஒழுங்கை, ஸ்ரான்லி வீதி (கொசி ஹொட்டல் அருகாமையில்) யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள 1½ பரப்பு 3 குளி அளவிலான வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை, நேரில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு - 0776618780,021 222 4495


## மரண அறிவித்தல்



Lion.
### வைரமுத்து சுந்தரமூர்த்தி

(முன்னாள் பொருளாளர், சாவகச்சேரி Lions Club)
(Rtd. Forman Vayangoda Textile Corporation)

டச்சு வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாக வும், இல. 31 5/2, வென்டவெற் பிளேஸ், தெஹிவளையை வதிவிடமாகவும் கொண்ட வைரமுத்து சுந்தரமூர்த்தி நேற்று (23.04.2012) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - சிதம்பரம்மா தம்பதியரின் அன்பு மகனும், சித்திராதேவியின் (இளைப்பாறிய ஆசிரியை, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும், நிமலன் (லண்டன்), சிவபாலன் (கனடா), கமலினி (சங்கானை), Dr. ஜெயந்தன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிசாந்தி, கவிதா, ஈசன் (ஈசன் ஜூவலரி, சங்கானை) ஆகியோரின் அன்பு மாமனும், அஸ்வின், ஆரபி, ஆரூசன், பிரவீனா, கிசானா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், சண்முகதாசன், மற்றும் மகேஸ்வரி தேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.ஜெயந்தன் (மகன்),
நா. ஈசன் (மருமகன்) சாவகச்சேரி.


இப்பொழுது நாம் கொக்குவிலிலும்

அகரம் கல்வி நிலையம்
(K.K.S வீதி கொக்குவில்)

தரம் 06 தொடக்கம் தரம் 11 வரையான
தமிழ் மொழி மூல / ஆங்கில மொழி மூல
வகுப்புக்கள்

ஆரம்பம் : 25.04.2012 மாலை 4.30 இல் இருந்து அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

"அகரம் குணதிசையின் ஒளிக்கீற்று"



விஸ்டம்
அணிநிலைக் கற்றல் வகுப்புக்கள்
(Group Classes)
இல. 401 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தரம் 9,10,11

ஆரம்பம்
25.04.2012 புதன்கிழமை மாலை 4.00

- தனிப்பாட அனுமதிகளும் உண்டு
- அனுமதி [illegible]
அனுமதிக்கு [illegible]

"புத்திசாலிகளின் தெரிவு அணிநிலை கற்றல் வகுப்புக்களே"





ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்
வாழும் கலை பயிற்சி - II
(சுதர்சன கிரியா, பிராணாயாமம், தியானம்)

அறிமுகவுரை

திகதி : 24.04.2012 மாலை 6.30
இடம்: மகேஸ்வரன் மண்டபம்
பயிற்சி நாள்கள் : 25.04.2012 - 27.04.2012 (மூன்று நாள்கள்)
நேரம் : காலை 5.45 - 8.00 மணிவரை
மேலும் விவரங்களுக்கு - 0779434879, 0776079220, 0771000750


## கண்ணீர் அஞ்சலி



எமது அச்சகக் குடும்பத்தைச் சேர்ந்த

### கந்தையா தவராசா (தேவா)

(ஸ்ரீ சாயி பிறிண்டேர்ஸ் உரிமையாளர்)

காலமானதையிட்டுக் கண்ணீர் மல்கி நிற்கிறோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்துக்கு எம் அனுதாபங்கள் உரித்தாகட்டும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கரிகணன் (தனியார்) நிறுவனம்
இல.429, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவப் பிரசன்னம் நீங்குமென நினைத்தும் பார்க்க இயலாதே

வடக்கில் இருந்து படையினரை வெளியேற்றுமாறு கோருவது நியாயமற்றது. தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் மட்டுமன்றி, நாடு முழுவதிலும் நாங்கள் படையினரை நிறுத்தி உள்ளோம். இது இலங்கையின் இறையாண்மையோடும் பாதுகாப்போடும் தொடர்புள்ள விடயம். ஆகையால் வடக்கில் நிலை கொண்டுள்ள படையினரை வெளியேற்றுவது முற்றிலும் சாத்தியமற்றது. படையினரை அங்கிருந்து வெளியேற்றி இந்தியாவுக்கா அனுப்ப முடியும்? - இவ்வாறு ''நெருப் பெடுத்திருக்கிறார்'' ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இந்தக் காரசாரமான, கடுப்பான, ஆவேசமான கருத்து, இலங்கை வந்திருந்த இந்தியத் தூதுக்குழுவினர் தமது ஐந்து நாள் விஜயத்தின் போது அவதானித்த, கேட்டறிந்த தகவல்களின் அடிப்படையில் வெளியிட்ட கருத்துக்கான பதிலே ஆகும்.

குறிக்கப்பட்ட இடங்களிலேயே படையினர் தளங்களை அமைத்துள்ளனர். அவர்கள் வெளிநாட்டு மண்ணில் நிறுத்தப் படவில்லை. இலங்கையிலேயே நிலை கொண்டுள்ளனர். -

போர் முடிவுற்ற பின்னர் வடக்கு, கிழக்கில் படையினர் வசமிருந்த பெரும் எண்ணிக்கையான பகுதிகளை விடுவித்துள்ளோம் - என்றும், இந்தியத் தூதுக்குழுவினரிடம் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மக்களின் வாழ்விடங்கள், ஆலயச் சூழல்களில் படையினர் நிலை கொண்டிருப்பதனையும் அந்த இடங்களில் இருந்து இராணுவத்தினரை அகற்ற வேண்டும் என்ற மக்களின் விருப்பத்தையும் தூதுக்குழுவினர் எடுத்தியம்பிய போதிலும், அது காதில் விழாதது போன்று, ஜனாதிபதி தமது இறுக்கமான நிலைப்பாட்டையே உரத்துக் கூறினார்.

ஒட்டுமொத்தத்தில், இந்தியா என்ன அமெரிக்கா உட்பட்ட எந்தப் பலம் மிக்க, அதிகாரம் மிக்க, வல்லரசு வந்து சொன்னாலும் வடக்கு, கிழக்கிலிருந்து இராணுவத்தை அரசாங்கம் வெளியேற்றாது. மீண்டும் ஒரு தடவை ஆயுதப் போராட்டம் முகிழ்க்காதிருக்க இரண்டு மாகாணங்களிலும் படையினர் காலம் காலமாக நிலை கொண்டிருக்க வேண்டும் என்பது இன்றைய ஆட்சியாளரின் நிரந்தரக் கொள்கையாக வகுக்கப்பட்டுள்ளது.

எனினும், தமிழ்ப் பகுதிகளுக்கு விஜயம் செய்து உண்மையான நிலையை, - இராணுவப் பிரசன்னமும் தலையீடும் அபரிமிதமாக இருப்பதனை - பாதிப்புறும் மக்கள் மூலம், அவர்களிடமிருந்து அறிந்தவற்றை வெளிப்படுத்தி, சுட்டிக் காட்ட வேண்டும் என்ற நியமத்தின் பிரகாரம், சுஷ்மா சுவராஜ் குழுவினர் ''நெற்றிக்கு நேரே'' ஜனாதிபதியிடம் புட்டுக் காட்டி உள்ளனர்.

அதுமட்டுமன்றி, வடக்கு, கிழக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களால் மக்களின் வாழ்க்கையில் உண்டாக்கப்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் வடக்கில் இராணுவ நிலைகளைக் குறைக்க வேண்டும் என்று, சுஷ்மா கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் வலியுறுத்தியமையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையே.

தமிழ்ப் பிரதேசங்களில் எழுந்து, உயர்ந்துள்ள காணி விவகாரம் குறித்தும் தாம் மக்களிடமிருந்து நேரில் தெரிந்து கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

தமிழகத்தில் மொத்தம் 98,000 இலங்கைத் தமிழ் அகதிகள் (அகதி முகாம்களில் 68,000 பேரும் முகாம்களுக்கு வெளியே 30,000 பேரும்) தங்கி உள்ளதாக தெரிவித்த இந்தியத் தூதுக்குழு, அவர்கள் தமது தாயகம் திரும்புவதற்கு உகந்த ஏது நிலையை இலங்கை அரசு விரைந்து செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

அவர்கள் தாயகம் (இங்கு) திரும்புவதானால் வடக்கு, கிழக்கில் இராணுவத்தினரின் பிரசன்னம் நீக்கப்பட வேண்டும் அல்லது குறைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை இந்தியா கையில் ஏந்தும் என்பதனை இந்திய நாடாளுமன்றத் தூதுக்குழுவின் விஜயம் வெளிப்படுத்தி உள்ளது, துலக்கி உள்ளது. அதுவும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

இதற்கு மத்தியில், தமது அரசு பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டியதால், முப்பது வருடங்களின் பின்னர் இலங்கை மக்கள் அழுவதை நிறுத்தி உள்ளனர்; உயிரிழப்புகளும் தடுக்கப்பட்டுள்ளன என்று கூறும் நாட்டின் தலைவர் -

இலங்கையின் அரச படைகள் தமது நாட்டிலேயே நிலை கொண்டுள்ளன, வேற்று மண்ணில் அல்ல. அவ்வாறிருக்க வடக்கிலிருந்து அவற்றை அகற்ற வேண்டும் என்று யார் கேட்டாலும், கோரினாலும் அது சாத்தியம் இல்லை. நாட்டின் பாதுகாப்புத் தேவைகளைக் கருதியே அவை நிலை கொண்டுள்ளன. - என்று அறுத்து, உறுத்துத் தெரிவித்துள்ளார்.

வடக்குக்கும் கிழக்குக்கும் ஆற்றுவதற்கெனத் திட்டமிட்டுள்ள பல ''கைங்கரியங்களை'' அரசு கைவசம் வைத்துள்ள இத்தருணத்தில், வடக்கிலிருந்து இராணுவத்தை முற்றாக நீக்குவது என்பது யார் சொல்லியும் நடைபெறாத, நிரந்தரமாக ஒப்பேறாத ஒன்றாகவே வடிவெடுக்கும்.

இதற்கு மேல் ''என்னத்தைச் சொல்ல''? இந்தியாவிலிருந்து என்ன, வேறு எங்கிருந்தென்ன, இங்கு வரும் தூதுக்குழுக்கள் கேட்டோம், கண்டோம், செல்கிறோம் என்று கையசைத்துப் போகும் நிலையே தொடரும்...

தமிழர்களின். பூர்வீகப் பிரதேசங்களை, அவற்றின் தொல்பொருள் ஆதாரங்களை எல்லாம், தாம் திட்டமிட்டவாறு, மாற்றியும் அழித்தும் துடைத்த பின்னர் -

அவர்கள் இப்போதுள்ள தமிழர் பூமிக்குச் சொந்தமானவர்கள் அல்லர் என்று நிறுவும் நயவஞ்சகமும் கயமையும் பூர்த்தியாகும் வரை -

இராணுவப் பிரசன்னம் தேவை என்ற சமன்பாட்டை கையில் எடுத்துள்ள ஆளும்சாரார் உலகின் எந்தக் கொம்பனுக்கும் செவிசாய்க்கும் நிலையில் இல்லையே...

# வாகனச் சாரதிகளுக்கு புள்ளித்திட்டத் தண்டனை

### சாரதி அனுமதிப் பத்திரமும் ரத்தாகலாம்

கொழும்பு, ஏப்.23

வாகனச் சாரதிகள் வாகனத்தைச் செலுத்தும் விதத்தின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கான திட்டம் ஒன்று விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று இலங்கை மோட்டார்த் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

விசேட தினங்களில் அதிக விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன. இவற்றில் பெரும்பாலானவை போதையில் வாகனம் செலுத்துதல் மற்றும் கவனயீனமாக வாகனம் செலுத்துதல் போன்ற காரணங்களால் ஏற்படுகின்றன என்று அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நிலையில் வாகனச் சாரதிகளுக்கு வழங்கவுள்ள புள்ளி அடிப்படையிலான தண்டனைகள் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சாரதிகள் வாகனம் செலுத்துவதில் உள்ள குறைகளைக் கண்டுபிடிக்கும் முகமாக 22 புள்ளிகள் வருடம் ஒன்றுக்கு வழங்கப்படவுள்ளன.

இதன் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படுமிடத்து ஒரு வாகனச் சாரதி 24 புள்ளிகளைப் பெறுமிடத்து குறித்த சாரதிக்கு சாரதி அனுமதிப் பத்திரம் ஒரு வருடத்துக்கு இரத்துச் செய்யப்படும்.

இந்த நிலையில் ஒரு சாரதி 18 புள்ளிகளும் அதற்குக் குறைவாகவும் பெறுமிடத்து அடுத்த வருடத்துக்கு அந்தச் சாரதிக்கு 6 மாதங்களுக்கான சலுகை ஒன்று வழங்கப்படும்.

இந்தச் சலுகையில் குறித்த சாரதிக்கு வழங்கப்படும் அடுத்த வருடத்துக்கான புள்ளியில் 6 புள்ளிகள் சலுகையாக வழங்கப்படும்.

இதேவேளை, ஒரு சாரதி விபத்தை ஏற்படுத்தும் பட்சத்தில் குறித்த இடத்தில் நிற்காது செல்லுதல் மற்றும் குறித்த விடயம் தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவிக்காது செல்லுதல் போன்ற குற்றங்களுக்காக 10 புள்ளிகள் குற்றப் புள்ளிகளாக வழங்கப்படும்.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம)

# இலங்கைக் கடற்படையினரும் மாலைதீவுக் கடற்பயிற்சியில் பங்கேற்பு

கொழும்பு, ஏப்.24

மாலைதீவுக் கடலில் நேற்று ஆரம்பமாகியுள்ள கடற்பயிற்சியில் இலங்கைக் கடற்படையினரும் பங்குபற்றவுள்ளனர் என்று கடற்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதிவரை இந்தப் பயிற்சிகள் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, இலங்கை மற்றும் மாலைதீவு கடற்படையினர் இணைந்து நடத்தும் இந்தக் கடற்பயிற்சியில் கலந்துகொள்வதற்காக கரையோரக் கண்காணிப்புக் கப்பலான எஸ்.எல்.என்.எஸ். சாகர மாலைதீவு நோக்கிப் பயணித்துள்ளது.

நாடுகளிடையே நட்புறவை வலுப்படுத்தல், பரஸ்பர செயலாற்றுகையை விருத்தி செய்தல் என்னும் நோக்கங்களுக்கு அமைய இந்தப் பயிற்சி நடத்தப்படுகிறது.

இந்தப் பயிற்சியின்போது கடல் ஆராய்ச்சி, மீட்பு வேலைகள், கடல் மாசுபடுத்தலை தடுத்தல் என்னும் விடயங்களில் கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாடுகள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அமைந்துள்ளதால் கடலில் பயணிப்போருக்கு இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது மூன்று நட்பு நாடுகளினதும் கடற்படையினரினதும் கடமையாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

# இத்தாவில், வேம்பொடுகேணியில் ஒரு பகுதியிலேயே குடியமர்வு

பளை, ஏப்.24

பளைப் பிரதேசத்தில் இதுவரை மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளின் ஒரு பகுதியில் மீள் குடியமர்வு எதிர் வரும் 15 ஆம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாவில் கிராம அலுவலர் பிரிவில் இத்தாவில் சந்தியிலிருந்து முருக மூர்த்தி கோயில் வரையுமான வீதியின் கிழக்குப் புறத்திலும், வேம்பொடுகேணி கிராம அலுவர் பிரிவில் இத்தாவில் சந்தியிலிருந்து நவுணவெளி அம்பாள் ஆலயத்துக்குச் செல்லும் வீதியின் கிழக்குப் புறத்திலும் நவுணவெளி அம்பாள் ஆலயச் சுற்றாடல் வரையுமான பகுதிகளிலேயே மீள் குடியமர்வு இடம் பெறவுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை முகமாலையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இவ்வாறு தெரிவிக்கப்

**பளைப் பிரதேசத்தில் மீள் குடியமர்வு எதிர் வரும் 15 ஆம் திகதி நடைபெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது.**

பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், பளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன், முகமாலைப் பிரிவு கட்டளைத் தளபதி, வெடிப் பொருள் அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள ஹலோ டிரஸ்ற் நிறுவனப் பொறுப்பதிகாரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ம-9)

### மினிபஸ் நடத்துநர்களுக்கு பிணை

இ.போ.ச.முல்லைத்தீவு சாலை நடத்துநரைத் தாக்கிய மினிபஸ் நடத்துநர்கள் இருவரையும் சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று பிணையில் விடுவித்தது.

மீசாலையிலிருந்து சாவகச்சேரி வரை மினிபஸ்ஸை முந்த விடாமல் வந்த இ.போ.ச. பஸ்ஸை சாவகச்சேரி பஸ் நிலையத்தில் வழி மறித்த மினிபஸ் நடத்துநர்கள் இ.போ.ச. நடத்துநரை கம்பியால் தாக்கியுள்ளனர். இதனால் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மினிபஸ் நடத்துநர்கள் இருவரையும் நேற்று பொலிஸார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

இவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் பிரதி வெள்ளிக் கிழமைகளில் நீதிமன்றில் கையொப்பமிடுமாறும் உத்தரவிட்டு வழக்கினை மே 14 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

(ம-9)

# வலுவிழந்தோருக்கு சுய தொழில் பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப்.24

யாழ்.முறைசாரக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் யாழ். வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் 47 பயனாளிகள் சுய தொழில் வேலைவாய்ப்புக்கான பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்.மாவட்டம் உட்பட ஏனைய வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளும் இந்தப் பயிற்சியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். வலுவிழந்தோர் உளரீதி யாகப் பாதிப் படையாமல் சுயமாகத் தொழிலை மேற்கொள்ளக் கூடிய திறன்களை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

உள்ளூர்ப் பொருள்களைப் பயன்படுத்தி உற்பத்திப் பொருள்களை தயார் செய்தல் மற்றும் தையல், கணினி போன்ற பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

ஆறு மாதகாலம் கொண்ட பயிற்சிக்காலத்தில் தொழில் திறன்களை வழங்குவதுடன் அதற்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் முன்வந்துள்ளது.

வலுவிழந்தோர் சங்கத் தில் ஏற்கனவே பயிற்சி பெற்ற பயனாளிகள் தற்போது விற்பனை நிலையம் அமைத்து பொருள்களை சந்தைப் படுத்தி வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (ம-14)

## அரச சார்பற்ற நிறுவனங்களின் திட்டங்களை ஆராயக் குழு

யாழ்ப்பாணம், ஏப்.24

யாழ்.மாவட்டத்தில் உள்ள எட்டு பிரதேச செயலர் பிரிவுகளில் அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களை மதிப்பீடு செய்ய ஜனாதிபதி செயலணியைச் சேர்ந்த அதிகாரிகள் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

இவர்கள் நேற்று முதல் இத்தகைய கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர். எதிர்வரும் 27 ஆம் திகதி வரை இவர்கள் அந்தந்த பிரதேச செயலகங்கள் ஊடாக வேலைத்திட்டங்களை மதிப்பீடு செய்யவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தெல்லிப்பழை, கோப்பாய், வேலணை, ஊர்காவற்றுறை, சங்கானை, சாவகச்சேரி, பருத்தித்துறை, செம்பியன்பற்று ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களே மதிப்பீடு செய்யப்படும் என்று தெரிய வந்துள்ளது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா கற்பகபுரம் மக்கள் அடிப்படை வசதிகளின்றி அவலம்

## கிணறுகளும் இல்லை, மின்சாரமும் இல்லை மலம் கழிக்க பற்றைகளைத் தேடும் நிலை

இரண்டு வருடத்துக்கு முன்னர் பம்பை மடுக் காட்டுப் பகுதியை அழித்து சிறீ ரெலோ இயக்கக் கட்சியினர் இங்குள்ள மக்களுக்கு காணிகளை வழங்கினர். ஆனால் அடிப்படை வசதிகள் தான் இல்லை.

நெளுக்குளம், ஏப்.24

வவுனியா கற்பகபுரத்தில் வாழுகின்ற மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி மிகவும் மோசமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இங்குள்ள வீதிகள் புனரமைக்கப்படாமையால் மழை காலங்களில் போக்குவரத்துச் செய்ய முடியாத அவல நிலையே காணப்படுகின்றது.

மேலும் மின்சார வசதியும் இல்லை. போதுமான மலசல கூட வசதிகளும் இல்லை. மக்கள் வாழ்வதற்கு இலாயக்கற்ற குடிசைகளே இங்கு காணப்படுகின்றன. நீர்த்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய கிணறுகள் அமைக்கப்படாமையால் இங்குள்ள மக்கள் நீண்ட தூரம் சென்று பொதுக் கிணறுகளில் நீர் பெற வேண்டிய அவல நிலை காணப்படுகின்றது.

மலசல கூட வசதிகள் போதுமான அளவு இல்லாததால் பலர் அண்மையில் காணப்படும் பற்றைகளைப் பயன்படுத்துகின்றனர். இதனால் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் தோன்றியுள்ளன.

பிரதான வீதியைத் தவிர ஏனைய இடங்களுக்கு மின்சாரம் வழங்கப்படாமையால் இரவு வேளைகளில் களவுகள் இடம்பெறுகின்றன. இதனால் மக்கள் அச்சத்துடனேயே பொழுதைக் கழிக்கின்றனர்.

மண் வீதியூடாகவே இங்கு வசிக்கும் மக்கள் பயணம் செய்கின்றனர். சிலர் பாதைகள் இல்லாததால் கம்பி வேலிகளுக்குள்ளால் செல்வதையும் காணக்கூடியதாக உள்ளது.

இரண்டு வருடத்துக்கு முன்னர் பம்பைமடுக் காட்டுப் பகுதியை அழித்து சிறீ ரெலோ இயக்கக் கட்சியினர் இங்குள்ள மக்களுக்கு காணிகளை வழங்கினர். ஆனால் அடிப்படை வசதிகள் தான் இல்லை.

மழைகாலங்களில் பாடசாலைகளே இவர்களுக்குத் தஞ்சமளிக்கின்றன. அரச உதவிகளும் மிகக் குறைவாகவே இவர்களுக்கு கிடைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-402)

## முன்பள்ளி ஆசிரியைகளுக்கு 10 மாத டிப்ளோமா கற்கை

### மல்லாவியில் ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.24

துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட முன்பள்ளி ஆசிரியைகளுக்கான 10 மாத கால டிப்ளோமா கற்கைநெறியின் ஆரம்ப நிகழ்வு மல்லாவி மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

35 ஆசிரியைகள் இந்த டிப்ளோமா கற்கைநெறியைத் தொடர்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வு கல்வி அமைச்சின் வடக்கு மாகாண முன்பள்ளிக் கல்விப் பணிப்பாளர் செல்வி கே.தம்பையா தலைமையில் இடம்பெற்றது. 'ஒபர்' நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் 'ஆறுதல்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆறுதல் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலால கற்கைநெறியை ஆரம்பித்து வைத்தார்.

துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் எஸ்.குணபாலன், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினிவெனிற்றன், 'ஒபர்' நிறுவனப் பணிப்பாளர் செல்வி சூரியகுமாரி ஆகியோர் இந்த ஆரம்ப நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (ஒ-3)

## மின்சாரம் கிடைக்காவிட்டால் போராட்டம் நடத்துவர் மக்கள்

### எச்சரிக்கிறார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

நெளுக்குளம், ஏப்.24

வவுனியாவில் மின்சாரமின்றி இருளில் மூழ்கியிருக்கும் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதில் தாமதம் ஏற்படுமாயின் மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பர்.

-இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன்.

வவுனியாக் கிராமங்களில் அடிப்படை வசதிகளின்றி ஆயிரக்கணக்கான மக்கள் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். இவர்களை அண்மையில் சந்தித்தேன்.

அரசு வீதிகளைப் போடுவதோடு மக்களின் பிரச்சினை தீர்ந்து விடுவதாக நினைக்கின்றது. வீதிகளுக்கு அப்பால் குடிசைகளுக்குள் மக்கள் அனுபவிக்கும் துயரைக் கண்டும் காணாமல் பாராமுகமாக இருக்கிறது. ஆயிரத்து 335 குடும்பங்கள் வாழுகின்ற பழைமை வாய்ந்த கிராமங்களுக்கு மின்சாரம் இதுவரை வழங்கப்படவில்லை. 25 இக்கும் மேற்பட்ட கிராமங்கள் மின்சார ஒளியின்றி இருளில் மூழ்கியுள்ளன. குளங்கள் புனரமைக்கப்படவில்லை.

விவசாயிகளுக்கு உரிய மானிய வசதிகள் போதியளவில் இல்லை. விவசாயப் பொருள்களுக்குரிய கட்டுப்பாட்டு விலைகள் இல்லை. இதனால் அன்றாடம் அவர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

## வவுனியா பொது வைத்தியசாலையில் செயற்கை இடுப்பு மாற்று சிகிச்சை

வவுனியா,ஏப்.24

வவுனியா பொது வைத்தியசாலையில் செயற்கை இடுப்பு மாற்று சத்திர சிகிச்சை வெற்றி கண்டுள்ளதாக வவுனியா பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எஸ்.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நவீனமுறையில் வவுனியா பொது வைத்தியசாலையில் எலும்பு முறிவுக்கான சிகிச்சை இடம்பெற்று வருகிறது. இவ்வாண்டு 52 பேர் எலும்பு முறிவுச் சிகிச்சை மூலம் பயன்பெற்றுள்ளனர்.

பல்வேறு வகைகளில் சிகிச்சைகள் இடம் பெற்றுள்ளன. அண்மையில் இருவருக்கு செயற்கை இடுப்பு மாற்றுச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வெற்றிகரமாக அவர்களது உடல் தகுதி பேணப்பட்டுள்ளமை மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எமது வெற்றிகரமான செயற்பாடுகளில் ஒன்றாக டெங்கு நோயை இவ்வாண்டில் முற்றாக நீக்கியுள்ளமை விசேட அம்சமாகும்.

தொடர்ச்சியான அர்ப்பணிப்பு மிகுந்த வைத்திய சமூகத்தினால் மட்டுமே இவ்வாறு சேவையாற்ற முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

## வவுனியா - ஓமந்தைக்கு இடையே பாதுகாப்பற்ற ரயில் கடவைகள்

### எவ்வேளையும் விபரீதம் ஏற்படலாம்

வவுனியா, ஏப்.24

வவுனியாவில் பாதுகாப்பற்ற ரயில் கடவைகளால் விபத்துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

வவுனியாவுக்கும் ஓமந்தைக்கும் இடையில் எட்டுக்கும் மேற்பட்ட பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் காணப்படுகின்றன. ரயில் வருவது தொடர்பான சமிக்ஞைகள் சில வேளைகளில் கிடைப்பதில்லை. இதனால் இதுவரை நான்கு விபத்துக்கள் வவுனியாவில் இடம்பெற்றுள்ளன. ஐந்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

தொடர்ந்தும் விபத்துக்கள் இடம்பெறாது இருப்பதற்குரிய நடவடிக்கைகளைப் பொலிஸாரும், ரயில்வே போக்குவரத்துப் பிரிவினரும் எடுக்க வேண்டுமெனத் தமது ஆதங்கத்தை பொது மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர். (க-402)

## அனுமதியின்றி மணல் ஏற்றியவருக்குத் தண்டம்

கிளிநொச்சி திருவையாறுப் பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிய இருவர் கைது செய்யப்பட்டு தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி திருவையாறுப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற இருவரை கிளிநொச்சிப் பொலிஸார் கடந்த 19ஆம் திகதி கைதுசெய்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர். இவர்கள் இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் மணலும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (க-6)

## அலங்கார உற்சவம்

கிளிநொச்சி கண்டாவளை கோணங்குளம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று முற்பகல் 10 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து ஒன்பது நாள்கள் திருவிழா நடைபெற்று பத்தாம் நாளாகிய எதிர்வரும் 3 ஆம் திகதி அத்த நட்சத்திரத்தில் அஷ்டோத்திர சங்காபிஷேகம் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (க-6)

## புதுக்குடியிருப்பு மருத்துவமனை இடமாற்றத்துக்கு மக்கள் எதிர்ப்பு

வைத்தியசாலை, சந்தை என்பவற்றை நிரந்தரமாக இடம் மாற்றுவ தற்கு நடவடிக் கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

வவுனியா,ஏப்.24

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வைத்தியசாலை, பொதுச் சந்தை என்பவற்றை இடம்மாற்றும் உத்தேச திட்டம் தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு வைத்தியசாலை, பொதுச் சந்தை என்பன நீண்டகாலமாக அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் பயன்பாடு மிகுந்தவையாகக் காணப்பட்டன.

கடந்த காலப் போர் அனர்த்தத்தின் போது, வன்னிப் பகுதியிலுள்ள அனைத்து பிரதேச மக்களுக்கும் சிகிச்சை அளித்த முக்கிய களமாக புதுக்குடியிருப்பு வைத்தியசாலை விளங்கியது.

இறுதிப் போரின் போது மக்கள் பல இடங்களுக்கு இடம்பெயர்ந்தது போல இந்த வைத்தியசாலையும் இடம்பெயர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

முற்றாக அழிக்கப்பட்ட இந்த வைத்தியசாலை தற்போது மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டதும் தற்காலிக இடங்களில் இயங்கி வருகிறது. அதைப்போன்று புதுக்குடியிருப்பு சந்தையும் கோம்பாவில் பகுதியில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலை, சந்தை என்பவற்றை நிரந்தரமாக இடம் மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிய வருகின்றது.

மிகவும் பழைமை வாய்ந்த, மக்களுக்குச் சேவையாற்றிய இவற்றை வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யும் நடவடிக்கைகளை உடன் நிறுத்துவதற்கு இந்தப் பகுதியைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் மற்றும் புத்திஜீவிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-400)

## விடுதியில் தங்காத மருத்துவர்; நோயாளருக்கு அசௌகரியம்

வவுனியா, ஏப்.24

நெடுங்கேணிப் பிரதேச வைத்தியசாலையின் உதவி மருத்துவ அதிகாரி தமது விடுதியில் தங்கியிருந்து சேவையாற்றாததால் நோயாளர்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவர் வவுனியாவைச் சொந்த இடமாகக் கொண்டவர் என்பதால் தினமும் மாலை வேளையில் வவுனியா சென்று விடுகின்றார்.

இதனால் வைத்தியசாலைக்கு இரவு வேளையில் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வைத்தியசாலையின் அம்புலன்ஸிலேயே இவர் வீடு செல்வதால் அவசர நோயாளிகளை வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு மேலதிக சிகிச்சைக்கெனக் கொண்டு செல்ல முடியாத நிலைமையும் தோன்றியுள்ளது.

முன்னர் இந்த வைத்தியசாலையில் பணியாற்றிய வைத்தியர்கள் விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சை அளித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த வைத்தியர் நெடுங்கேணி வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டு ஆறு மாதங்களே ஆகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (க-400)



தரைதுறைப்பற்றில் புதிதாக அமைக்கப்பட்ட கால்நடை வைத்திய நிலையத்தின் திறப்பு விழாவின்போது கொடியேற்றும் வைபவம் இடம்பெறுகின்றது. (415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதகல் சம்பில்துறைக் கடலில் படகுகளை சேதமாக்கும் பாறை

## அகற்றித் தருமாறு மீனவர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.24

மாதகல் சம்பில்துறை படகுத் தரிப்பிடத்துக்கு படகுகளைக் கொண்டு வருகையில் அங்கு வளர்ந்துள்ள முருகைக் கற்பாறைகளால் படகுகள் சேதமடைந்து வருகின்றன என்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதன்போதே மீனவர்கள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு கோரினார்கள்.

**முருங்கைக் கற்களை அகழ்வது தொடர்பில் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆகியவற்றின் ஆலோசனைகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கூறப்பட்டது.**

மாதகல் சம்பில்துறை படகுத் தரிப்பிடத்தில் கடற்கரைக்குப் படகுகளைக் கொண்டு வருகையில் முருகைக் கற்பாறைகள் வளர்ந்திருப்பதனால் படகுகள் சேதமடைவதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனை அடுத்து மேற்படி முருங்கைக் கற்களை அகழ்வது தொடர்பில் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆகியவற்றின் ஆலோசனைகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் அங்கு தெரிவித்தார்.

மேலும் நவாலி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள கல்லுண்டாய் வெளிப் பகுதியில் திண்மக் கழிவுகள் அகற்றுதல் தொடர்பிலும் பொதுமக்களால் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காகப் பிரதேச சபை, மாநகரசபை மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அந்தப் பகுதி மக்கள் ஆகியோரை உள்ளடக்கிக் கலந்துரையாடல் மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-5)

# சாவகச்சேரி நகர ஊழியர் நேற்றுப் பணிப் புறக்கணிப்பு

## தலைவர் வீட்டில் இடம்பெற்ற தாக்குதலைக் கண்டித்து

தென்மராட்சி, ஏப்.24

சாவகச்சேரி நகரசபைத் தலைவரின் வீட்டில் இடம்பெற்றஅடாவடியைகண்டித்து நேற்று சபை உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள் ஒரு மணி நேரம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரை சகல தர உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு அலுவலகத்துக்கு வெளியே நின்றனர்.

போராட்டத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருவர் தவிர்ந்த ஏனைய அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

தலைவரின் வீட்டில் இடம்பெற்ற தாக்குதலைக் கண்டித்து துண்டுப்பிரசுரமும் உறுப்பினர்களால் விநியோகிக்கப்பட்டது.

போராட்டத்தில் ''நகரத்தின் தலைவருக்குப் பாதுகாப்பு இல்லையெனில் எமக்கு ஏது பாதுகாப்பு?'', ''மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவருக்கு மரண அச்சுறுத்தல் விடுப்பது எதற்கு?'', ''நகர பிதாவின் வீட்டுக்கு விழுந்த அடி நகர மக்களாகிய எமக்கு விழுந்த அடி'', ''நகரபிதாவின் வீடு தாக்கப்பட்டதைக் கண்டிக்கின்றோம். தாக்கியவர்களை உடனடியாகக் கைது செய்'', ''மக்களின் அபிலாசைகளை வன்முறையால் அடக்க முடியாது'' போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளுடன் ஊழியர்கள் போராட்டத்தில் பங்குபற்றினர்.

இது தொடர்பாகச் சாவகச்சேரி நகர சபை ஊழியர்கள் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உள்ளூராட்சி தேர்தல் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல்கள், அடாவடித்தனங்களின் தொடர்ச்சியாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட நகரசபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மீது பல்வேறு அச்சுறுத்தல்களும் அடாவடித்தனங்களும் வடைபெற்று வருகின்றன.

சாவகச்சேரி நகரசபையின் நடவடிக்கையைக் குழப்பும் வகையில் திட்டமிட்டுப் பல்வேறு நடவடிக்கைகள் சில தரப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு உச்சநிலையாக நகரசசபைத் தலைவருடைய வீடு அடித்துச் சேதமாக்கப்பட்டதுடன் அவரது மோட்டார் சைக்கிளும் பெற்றோல் ஊற்றிக் கொளுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைதி திரும்பிவிட்டது என்று கூறுகின்ற நிலையில் நகரத்தில் வாழ்கின்ற நகர சபைத் தலைவருக்கு பாதுகாப்பு இல்லையென்றால் சாதாரண மக்களுடைய பாதுகாப்பு எவ்வாறு இருக்கும்.

போதிய பின்புலம் இல்லாது இவ்வாறான செயல்களை செய்ய முடியாது என்பதை நாம் உணர்கின்றோம். இத்தகைய செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இத்தகைய செயலை செய்தவர்களை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதன் மூலம் எமது மக்களின் பாதுகாப்பையும் நீதியையும் உறுதிப்படுத்துமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரி நிற்கின்றோம்- என்றுள்ளது. (ம-9)

## மாட்டு வண்டியில் ம. எண்ணெய்

யாழ்ப்பாணம், ஏப்.24

யாழ்.கரையோரப் பகுதியில் மீண்டும் மாட்டு வண்டில் மூலமான மண்ணெண்ணெய் வியாபாரம் மும்முரமாக நடைபெறுகிறது.

மண்ணெண்ணெயின் விலை அதிகரித்ததை அடுத்து மாட்டு வண்டில் மூலமான மண்ணெண்ணெய் வியாபாரம் கரையோரப் பகுதிகளில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

தற்போது இந்த மாட்டு வண்டில் மற்றும் லான்ட் மாஸ்ரர் மூலமான மண்ணெண்ணெய் வியாபாரம் தினமும் இடம்பெற்று வருகின்றது. (த-17)



பண்ணை வீதி ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு 'காப்பெற்' வீதியாக மாற்றப்படுகின்றது. இந்த வேலைகள் இரண்டு நாள்களில் பூர்த்தியாகலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதை அடுத்து ஊர்காவற்றுறை வீதியை 'காப்பெற்' வீதியாக மாற்றுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ம-7)

# தேசிய வைத்திய மாநாடு யாழ்ப்பாணத்தில் சனியன்று

யாழ்ப்பாணம், ஏப்.24

வடமாகாண ஆயுர்வேத பாதுகாப்புச் சபை இணையத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு வடமாகாண சித்த ஆயுர்வேத சுதேச வைத்தியர்கள் கலந்து கொள்ளும் தேசிய வைத்திய மாநாடு யாழ்ப்பாணம் ஆயுர்வேத மருத்துவ நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இணையத் தலைவர் வைத்திய கலாநிதி செல்வ மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடபகுதி சுதேச வைத்தியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மூலிகை மருந்து உற்பத்தி, வேலை வாய்ப்பு, பாரம்பரிய சுதேச வைத்தியர்களின் மேம்பாடு குறித்த கலந்துரையாடலும் இடம்பெறும்.

வடமாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்டங்களிலும் இருந்து ஐம்பதுக்கும் அதிகமான சுதேச வைத்தியர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர். (த-7)

# மரக்கறி, மீன் சந்தைகளில் அதிகாரிகள் திடீர் பாய்ச்சல்

## முத்திரையிடப்படாத தராசுகள் சிக்கின

யாழ்ப்பாணம், ஏப்.24

கல்வியங்காடு, குருநகர் மரக்கறி மற்றும் மீன் சந்தைகளில் யாழ். செயலக நிறுத்தல் அளவைப் பிரிவினர் திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

சந்தைகளில் இவ்வாண்டுக்கான முத்திரையிடப்படாமல் பயன்படுத்தப்பட்ட நிறுத்தல் அளவைக் கருவிகள் இந்தச் சோதனையின் போது சிக்கிக்கொண்டன. 14 இற்கு மேற்பட்ட வியாபாரிகள் இவ்வாறான நிறுத்தல் அளவைக் கருவிகளைப் பயன்படுத்தியமை கண்டறியப்பட்டதாக யாழ். செயலக நிறுத்தல் அளவைப் பிரிவினர் தெரிவித்தனர்.

மீன் மற்றும் மரக்கறி வியாபாரிகளே இந்தக் கருவிகளை முத்திரையிடாமல் பயன்படுத்தியமை கண்டறியப்பட்டது. பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்தே இந்தத் திடீர் சோதனைமேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இந்தச் சந்தைகளில் உள்ள கோழி இறைச்சி விற்பனை நிலையங்களிலும் முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டமை கண்டறியப்பட்டதாகவும் இந்த வியாபாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் நிறுத்தல் அளவைப் பகுதி அதிகாரி ஒருவர் கூறினார். மேலும் பல சந்தைகளில் முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவைக் கருவிகள்பயன்படுத்தப்படுகின்றமை தொடர்பாகத் தமக்குப் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இது குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (த-17)

# மகேந்திரபுரம் பகுதிக்கு மின்சார விநியோகம்

கொழும்புத்துறை, ஏப்.24

கொழும்புத்துறை மகேந்திரபுரம் பகுதிக்கு மின்சார விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இந்த மின் விநியோகத்தை மின்சார சபை வழங்கியுள்ளது.

இடம்பெயர்ந்து 15 ஆண்டுகளுக்குப் பின்னர் மீளக்குடியமர்ந்துள்ள இந்தப் பகுதிக்கு வழங்கப்பட்டுள்ள மின்சாரம் 6 மாதங்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படும் என மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**இடம்பெயர்ந்து 15 ஆண்டுகளுக்குப் பின்னர் மீளக்குடியமர்ந்துள்ள இந்தப் பகுதிக்கு வழங்கப்பட்டுள்ள மின்சாரம் 6 மாதங்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படும்**

கொழும்புத்துறை துண்டிச் சந்தியில் இருந்து மகேந்திரபுரம் வரையிலான வீதிக்கு மின் விளக்குகள் பொருத்தப்பட்டு ஒளிரவிடப்பட்டுள்ளன.

இதேவேளை, மகேந்திரபுரம் கிராமத்தின் உள்ளக வீதிகள் தார் ஊற்றிப் புதிதாக அமைக்கப்பட்டமையாலும் மின் விநியோகம் கிடைத்தமையாலும் மக்கள் மீளக் குடியமர்வதில் ஆர்வம் காட்டி வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (த-135)



நெல்லியடி விக்னேஸ்வரா வீதியில் கிரிப்பல்லிச் சந்திப் பகுதியில் கழிவுகள் கொட்டப்படுவதால் அந்தப் பகுதி மக்கள் உட்பட வீதியால் செல்வோரும் பெரும் சிரமம் அடைகின்றனர். கழிவுப் பொருள்களை நாய்கள், காகங்கள் இழுத்து வீதியில் போடுவதால் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-253)

# 60 கி.மீ. தூரத்துக்கு யாழ்ப்பாணத்தில் 'காப்பெற்'

யாழ்ப்பாணம்,ஏப்.24

மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்குச் சொந்தமான வீதிகளில் யாழ்.மாவட்டத்தில் 60.87 கிலோ மீற்றர் நீளமான வீதிகளுக்கு 'காப்பெற்' இடும் வேலைத் திட்டங்கள் இடம் பெற்று வருகின்றன. யாழ். மாநகர சபை, பருத்தித்துறை நகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை, சாவகச்சேரி நகரசபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு உட்பட்ட வீதிகளே இவ்வாறு சீர்செய்யப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி மன்றத் திட்டம் ஒன்று தொடக்கம் மூன்று வரையான வீதி அபிவிருத்தித் திட்டம் மூலம் யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட 35.28 கிலோ மீற்றர் நீளமான வீதிகளுக்கு 'காப்பெற்' போடப்படுகிறது.

உள்ளூராட்சித் திட்டம் நான்கு மூலம் பருத்தித்துறை நகரசபைக்கு உட்பட்ட 7.46 கிலோ மீற்றர் நீளமான வீதிகளுக்கு 'காப்பெற்' இடப்படுகிறது. உள்ளூராட்சித் திட்டம் ஐந்து மூலம் வல்வெட்டித்துறை நகரசபைக்கு உட்பட்ட 8.25 கிலோ மீற்றர் நீளமான வீதிகளும், உள்ளூராட்சித் திட்டம் ஆறின் மூலம் சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட 9.88 கிலோ மீற்றர் நீளமான வீதிகளும் 'காப்பெற்' இடப்படுகின்றது. (த-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமாண உறுதியில் மாற்றம்

## சூகி கட்சியினர் பதவியேற்க மறுப்பு



மியன்மார் தேர்தலில் வென்ற ஆங்சான் சூகி மற்றும் அவரது கட்சி உறுப்பினர்கள் பதவியேற்பு உறுதிமொழியில் மாற்றம் செய்யக் கோரி பதவியேற்க மறுத்துள்ளனர். மியன்மாரில் இந்த மாதம் முதலாம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற இடைத் தேர்தலில் முக்கிய எதிர்க்கட்சியான தேசிய ஜனநாயகக் கட்சித் தலைவர் ஆங் சான் சூகி காவ்மு தொகுதியில் போட்டியிட்டார்.

45 இடங்களில் போட்டியிட்ட அவரது கட்சியினர் 44 இடங்களில் வெற்றி பெற்றனர். இது மக்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், சூகி மற்றும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவரது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்றத்தில் பதவியேற்க இருந்தனர்.

ஆனால், அவர்கள் திடீரென ஒரு நிபந்தனை விதித்து போர்க்கொடி தூக்கியுள்ளனர். பதவியேற்பு பிரமாண உறுதிமொழியில் அந்த நாட்டு அரசியல் சட்டத்தைப் பாதுகாப்பதாக கூறப்பட்டிருக்கிறது. இதை அரசியல் சட்டத்தை மதிப்பதாக என்று மாற்ற வேண்டுமென்றும், இல்லாவிட்டால் பதவியேற்க மாட்டோம் என்றும் சூகி கோரியுள்ளார்.

ஏனெனில், அரசியல் சட்டத்தைப் பாதுகாப்பதாகக் கூறி உறுதிமொழி ஏற்றால், அதை எதிர்வரும் நாள்களில் தங்களது போராட்டங்களுக்குத் தடை விதிக்க பயன்படுத்தலாம் என்று சூகியின் கட்சியினர் அஞ்சுகின்றனர். சூகி கட்சியினர் தேர்தலில் போட்டியிடும்போது, அரசியல் சட்டத்தை மதிப்பதாக என்று கூறியே உறுதிமொழி ஏற்றனர். அதன்படியே இப்போதும் அனுமதிக்க வேண்டுமென்று கோரியுள்ளனர்.

### பங்களாதேஷில் கலவரம் இருவர் சாவு

பங்களாதேஷின் செல்வாக்கு மிகுந்த தேசியவாதக் கட்சித் தலைவர் காணாமற் போயுள்ளார். அதனைத் தொடர்ந்து அங்கு கலவரம் ஏற்பட்டது. இதில் இருவர் உயிரிழந்தனர் என்று பங்களாதேஷ் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பங்களாதேஷின் வடமேற்குப் பகுதியில் செல்வாக்கு மிகுந்த கட்சியாக தேசியவாதக் கட்சி செயற்பட்டு வருகிறது. இந்தக் கட்சியின் தலைவர் இலியாஸ் அலி, கடந்த ஐந்து தினங்களுக்கு முன் காணாமற் போனார்.

இதனையடுத்து ஆளும் கட்சி இலியாஸ் அலியின் தேசியவாதக் கட்சித் தொண்டர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலவரத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கலவரத்தை கலைப்பதற்காக பங்களாதேஷ் பொலிஸார் இறப்பர் வெடிகுண்டு மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர். இந்தச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்தனர் என்று பங்களாதேஷ் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# நேருக்கு நேர் மோதின ரயில்கள்

## நெதர்லாந்தில் 125 பேருக்கு காயம்



பயணிகளை ஏற்றிச் சென்ற இரு ரயில்கள் விபத்துக்குள்ளானதில் நெதர்லாந்தில் 125 பேர் காயமடைந்தனர். அவர்களில் 13 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

நெதர்லாந்தின் ஸ்பொடடிக் நகருக்கு அருகில் உள்ள ரயில் நிலையத்திலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயிலுடன் மற்றைய ரயில் மோதியுள்ளது.

இந்த விபத்தில் பலர் எலும்பு முறிவுக் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். விபத்துக் குறித்து விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என்று நெதர்லாந்துப் பொலிஸ் பேச்சாளர் எட் கிராவ்கி தெரிவித்தார். (ந)

# 6 வயது மகனை உயிருடன் புதைத்துக் கொன்ற தந்தை

சீனாவில் வீட்டுப்பாடம் செய்யாத 6 வயது மகனை அடித்து உயிருடன் மண்ணில் புதைத்து, அவரது தந்தை கொலை செய்துள்ளார்.

சீனாவின் யுன்னான் மாகாணத்தைச் சேர்ந்த லீ என்பவர் தனது ஆறு வயது மகன் வீட்டுப்பாடத்தைச் சரியாகச் செய்யவில்லை என்பதனை அறிந்து மகன் என்றும் பாராமல் நெஞ்சில் எட்டி உதைத்து, தூக்கி சுவற்றில் அடித்து வீசி எறிந்துள்ளார். இதில் பலத்த காயமடைந்த மகன், மயங்கி விழுந்தான்.

மகனை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்குப் பதிலாக அங்குள்ள மலைப்பகுதிக்குத் தூக்கிச் சென்று உயிருடன் மண்ணில் புதைத்து கொலை செய்தார்.

அந்தவேளை மகனைத் தேடி வந்த அவனது நண்பர்கள் மண்ணில் புதைக்கப்பட்டதைப் பார்த்து விட்டனர். ''அவர்களிடம் வெளியே சொன்னால் உங்களையும் கொலை செய்து விடுவேன்'' என்று லீ மிரட்டியுள்ளார்.

இதுகுறித்து பொலிஸாருக்கு தகவல் தெரியவந்ததையடுத்து உடனடியாக லீயைக் கைது செய்தனர். புதைக்கப்பட்ட சிறுவனின் சடலத்தை வெளியே எடுத்து பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பினர் பொலிஸார். (ந)

# தப்பிச் சென்ற 143 கைதிகள் திரும்பினர் சிறைக்கு

பெஷாவர்,ஏப்.24

பாகிஸ்தானின் பஸ்தூன் மலைப்பகுதில் பன்னூ என்ற இடத்தில் உள்ள சிறைச்சாலையைத் தகர்த்து கடந்த 15ஆம் திகதி தலிபான் தீவிரவாதிகள் 348 இற்கும் மேற்பட்ட கைதிகளைத் தப்பியோட வைத்தனர். அந்தக் கைதிகளில் 143 பேர் தற்போது சிறைக்குத் திரும்பியுள்ளனர். 35 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மாகாண உள்துறைச் செயலர் ஆசம் கான் தெரிவித்தார்.

மேற்குறித்த சிறைச்சாலையில் தீவிரவாதிகள் உள்ளிட்ட பல்வேறு கைதிகள் சிறை வைக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் கடந்த 15ஆம் திகதி தலிபான் தீவிரவாதிகள் அங்கு திடீரென தாக்குதல் நடத்தினார்கள். ரொக்கெட் குண்டுகள், கை குண்டுகளை வீசி சிறைச்சாலையைத் தகர்ந்தது, அங்கு சிறை வைக்கப்பட்டிருந்த தமது அமைப்பைச் சேர்ந்தவர்களை விடுவித்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் மரண தண்டனைக் கைதிகள் 21 பேர் உட்பட மொத்தம் 384 கைதிகள் தப்ப வைக்கப்பட்டனர்.

சிறையை உடைத்துத் தப்பிச் சென்றவர்களைப் பிடிக்க பாகிஸ்தான் பொலிஸார் தீவிரமாக முயற்சித்து வருகின்றனர். இந்தநிலையில் தப்பிச் சென்ற 384 கைதிகளில் இதுவரை 108 பேர் தாங்களாகவே சிறைக்குத் திரும்பியுள்ளனர்; 35 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தப்பியோடியவர்களைப் சிறைப் பிடிக்க 4 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன என்று மாகாண உள்துறைச் செயலர் ஆசம் கான் தெரிவித்தார். (ந)


60ஆவது பிறந்தநாள் வாழ்த்து

திருமதி சுப்பிரமணியம் சகுந்தலாதேவி
(தேவி)

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த
திருமதி சுப்பிரமணியம் சகுந்தலாதேவி அவர்கள்
இன்று (24.04.2012) தனது அறுபதாவது
அகவையினைக் காணும் இவ் இனிமையான நாளில்
அவரை சீரும் சிறப்பும் பெற்று மேன்மேலும்
பல்லாண்டு பல நூற்றாண்டு மகிழ்வுடன் வாழ
அன்புடன் வாழ்த்துகின்றோம்.

அன்புடன் வாழ்த்தும்
கணவர்.பிள்ளைகள்
மருமக்கள்.பேரப்பிள்ளை



ராஜ்மணி பந்தல் சேவை
நீர்வேலி வடக்கு
நீர்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா - ரஷ்யா கூட்டுப் பயிற்சி

சீனாவும் ரஷ்யாவும் இணைந்து நேற்றுமுன்தினம் முதலாவது கப்பற்படைப் பயிற்சிகளை மேற்கொண்டன. இது ஆசிய வலயத்திலும் இந்தியா, அமெரிக்கா நாடுகளிடையேயும் அதிருப்தியையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தொடர்ந்து ஆறு நாள்களாக சீனாவின் கிழக்குக் கடற்கரையிலுள்ள குயிங்டாவோ மற்றும் ஷான்டோங் மாகாணத்தில் மஞ்சள் கடலில் இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது என்று சீனாவின் உத்தியோகபூர்வ செய்திகள் தெரிவித்துள்ளன.

அதிகரித்து வரும் சீனாவின் ஆதிக்கத்தை ஈடு செய்யும் முகமாக ஏற்கனவே ஜப்பான் பில்லியன் டொலர்களைச் செலவு செய்து மெகோங் கழிமுகத்தினூடாக தாய்லாந்து, வியட்நாம், கம்போடியா, லாவோஸ் மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளில் தனது நிலையை ஸ்திரப்படுத்தியிருந்தது.




இதற்காக ஜப்பானின் அரசு மியன்மாருக்கு கொடுக்க வேண்டியிருந்த 3.5 பில்லியன் டொலர் கடனையும் ரத்து செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2005ஆம் ஆண்டு முதல் சீனாவும் ரஷ்யாவும் இணைந்து இராணுவப் பயிற்சியை மேற்கொண்டு வந்தாலும் தம்மை அர்ப்பணித்துக் கப்பற் படைப் பயிற்சியை மேற்கொள்வது இதுவே முதல் தடவை என்று சீனாவின் அரச பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சீனாவின் கப்பற் படையைச் சேர்ந்த பேச்சாளர் அரச தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில்'' சீனாவின் 16 இராணுவக் கப்பல்களும் இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்களும் ரஷ்யாவின் 4 போர்க் கப்பல்களும் பயிற்சிக்காகப் பயன்படுத்தப்பட்டன. அத்துடன் எதிர்காலத்தில் இரு தரப்பும் இராணுவத் தந்திரோபாயங்களையும் தொழில்நுட்பத்தையும் ஆழமாகப் பங்கிட்டுக் கொள்ள உள்ளன'' என்றும் கூறியுள்ளார்.

### சர்ச்சைக்குரிய பகுதியிலிருந்து

# தென்சூடான் படைகள் வெளியேறின



கம்பாலா, ஏப்.24

சூடான் எல்லையில் உள்ள சர்ச்சைக்குரிய எண்ணெய் வளம்மிக்க ஹெக்லிக் பகுதியிலிருந்து, தென் சூடான் தனது படைகளை முற்றிலும் வெளியேற்றியுள்ளது.

சூடானில், 20 ஆண்டுகளாக நீடித்த உள்நாட்டுப் போரில் 15 லட்சம் பேர் உயிரிழந்தனர். ஐ.நா. தலையீட்டை அடுத்து கடந்த ஆண்டு தென் சூடான், தனி நாடாக உருவானது. சூடான் மக்கள் விடுதலை இயக்கத்தினர் தற்போது தென் சூடானை ஆட்சி செய்து வருகின்றனர்.

இருநாட்டு எல்லையில் உள்ள ஹெக்லிக் என்ற இடத்தில், எண்ணெய் வளம் அதிகமாக உள்ளது. இதை தங்களிடம் ஒப்படைக்கும்படி சூடான் அரசு தென் சூடானிடம் கோரி வந்தது. இதற்கு தென் சூடான் மறுப்புத் தெரிவித்ததால், இரு நாடுகளுக்கிடையே போர் மூண்டது.

ஹெக்லிக் பகுதியிலிருந்து தென் சூடான் தனது படையை வெளியேற்றவில்லையென்றால், அந்த நாட்டுடன் போர் நடக்கும் என்று சூடான் அதிபர் ஓமர் அல் பஷீர் எச்சரித்திருந்தார். போர் நடந்தால் தென் சூடானுக்கு ஆதரவளிப்போம் என்று உகண்டா தெரிவித்திருந்தது. நிலைமை மோச மடையும் நிலையில் ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச் செயலர் பான் கி மூன், சர்ச்சைக்குரிய ஹெக்லிக் பகுதியிலிருந்து தென் சூடான் தனது படைகளை வெளியேற்ற வேண்டும், என்று கூறியிருந்தார்.

சூடான் நாட்டுடன் நடைபெற்ற பேச்சைத் தொடர்ந்து, மூன்று நாள்களுக்குள் தன்னுடைய படைகளை வெளியேற்றுவதாக தென் சூடான் அதிபர் சால்வா கிர் உறுதியளித்துள்ளார். அதிபர் சல்வாகிரின் உத்தரவுப் படி படைகளை முற்றிலும் வெளியேற்றிவிட்டதாகவும் , இருப்பினும் சூடான் படையினர் தொடர்ந்து குண்டு வீசி வருகின்றனர் என்றும் தென் சூடான் இராணுவத் தளபதி குற்றஞ் சாட்டியுள்ளார்.

### ஆஸி. நாடாளுமன்ற அவைத் தலைவர் பதவி விலகினார்



ஆண் ஒருவருக்கு பாலியல் தொல்லை கொடுத்தார் என்ற குற்றம் சுமத்தப்பட்டதை தொடர்ந்து ஆஸ்திரேலிய நாடாளுமன்ற அவைத் தலைவர் பீற்றர் ஸ்லிப்பர் தனது பதவியை தற்காலிகமாக ராஜினாமாச் செய்துள்ளார்.

முன்னாள் அரசு ஊழியர் ஒருவருக்குத் தொல்லை கொடுத்தார் என்றும் அரச பணத்தை முறை தவறிப் பயன்படுத்தினார் என்றும் ஸ்லிப்பர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆனால் இந்த இரண்டு குற்றச்சாட்டுகளையுமே ஸ்லிப்பர் மறுத்துள்ளார். இந்த விவகாரம் காரணமாக ஸ்லிப்பர் முழுமையாகப் பதவி விலக நேருமானால், நாடாளுமன்றத்தில் ஏற்கனவே மிகச் சிறியதாக அமைந்துள்ள தொழிற்கட்சி அரசின் பெரும்பான்மை பலம் குறைவடையும் என்று கூறப்படுகிறது.

# ஐ.நா. கண்காணிப்பாளர்களை சிரியாவில் அதிகரிக்கத் தீர்மானம்

### பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்டது

சிரியாவில் ஐ.நா. கண்காணிப்பாளர்களை அதிகரிக்க பாதுகாப்புச் சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதன்படி சிரியாவில் தற்போதுள்ள 30 போர் நிறுத்த கண்காணிப்பாளர்களை 300 ஆக அதிகரிக்க பாதுகாப்புச் சபை அங்கத்துவ நாடுகள் இணங்கியுள்ளன. இவர்கள் எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு கண்காணிப்புப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் 15 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன.

சிரிய படை மற்றும் எதிர்த்தரப்பினருக்கு இடையிலான வலுவில்லாத போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க ஐ.நா.வின் சிறு கண்காணிப்புக் குழுவொன்று அங்கு இயங்கிவருகிறது.

இந்த நிலையில் சிரியாவில் அரச எதிர்ப்பாளர்கள் வலுவாக உள்ள ஹோம்ஸ் நகருக்குச் செல்ல ஐ.நா. போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்களுக்கு சிரிய அரசு அனுமதி அளித்துள்ளது. அங்கு மோதல்கள் நீடித்துவரும் நிலையில் கண்காணிப்பாளர்கள் சென்றுள்ளனர். இந்த நிலையிலேயே கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை இணக்கம் தெரிவித்துள்ளது.

# பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலில் சர்கோஸிக்குப் பின்னடைவு

பிரான்ஸ் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் அதிபர் நிகோலஸ் சர்கோஸிக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பிரான்ஸில் ஜனாதிபதியாக இருக்கும் நிகோலஸ் சர்கோஸியின் பதவிக்காலம் முடிவடைகிறது. எனவே புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெறுகிறது. இதில், தற்போதைய ஜனாதிபதி நிகோலஸ் சர்கோஸி, சோசலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பிராங்காய்ஸ் ஹோலண்ட் உள் பட பலர் போட்டியிடுகின்றனர். அதிபர் தேர்தலுக்குரிய வேட்பாளராகத் தற்போது 10



பேர் களத்தில் உள்ளனர்.

இந்தத் தேர்தலில், எவருக்கும் 50 சதவீத வாக்குகள் கிடைக்காவிடில், அடுத்த மாதம் 6ஆம் திகதி, இரண்டாவது கட்டத் தேர்தல் நடைபெறும். பொருளாதார மந்த நிலை, வேலை வாய்ப்பின்மை, வரி விதிப்பு உள்ளிட்ட விடயங்களை முன்னிறுத்தி, இந்தத் தேர்தலில் எதிர்க்கட்சியினர் பிரசாரம் செய்தனர்.

தனக்கு மீண்டும் வாய்ப்பு அளித்தால், பிரான்ஸ் மேலும் வலுவுள்ளதாக மாறும் என்று அதிபர் சர்கோஸி உறுதியளித்துள்ளார். வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், சர்கோஸியை எதிர்த்துப் போட்டியிட்டபிராங்காய்ஸ் ஹோலண்ட் முன்னிலையில் உள்ளார் என்று கூறப்படுகிறது.

பிரெஞ்சு காலனித்துவ ஆதிக்கத்தில் இருந்த நாடுகளிலும் நேற்றுமுன்தினம் தேர்தல் நடத்தப்பட்டது.

# பெண்களைத் தாக்கிய ஜப்பானியக் கரடிகள்



ஜப்பானில் டோக்கியோ உயிரியல் பூங்காவில் இருந்து தப்பி குடியிருப்புப் பகுதிக்குள் நுழைந்த கரடி, பலரைத் தாக்கியது. இதில் 2 பெண்கள் உயிரிழந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர். ஜப்பானின் வட பகுதியில் உள்ள உயிரியல் பூங்காவில் இருந்து தப்பிய 2 கரடிகள் மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் பகுதிக்குள் நுழைந்தன.

வீடுகளுக்கு அருகே கரடிகள் நடமாடுவதை பார்த்த மக்கள் அலறியடித்து ஓடினர். 2 பெண்களை கரடிகள் பலமாகத் தாக்கின. இதில் இருவரும் உயிரிழந்தனர். மேலும் ஏராளமானவர்கள் இந்த தாக்குதலில் காயமடைந்துள்ளனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸாரும் வனத்துறையினரும் கரடிகளைப் பொறி வைத்துப் பிடித்து மீண்டும் உயிரியல் பூங்காவில் ஒப்படைத்தனர்.



ஈரான் தலைநகர் தெஹ்ரானில் நடந்த இராணுவ அணிவகுப்பின்போது, அந்நாட்டு பிரதமர் நவ்ரி அல்-மாலிகியை (இடது), அந்தநாட்டுத் துணை அதிபர் முகமது ரெஜா ரஹிம் சந்தித்துப் பேசினார்.

# கனடாவில் பனிப்புயல் எச்சரிக்கை

கனடாவின் ஒண்டேரியோ பகுதியில் இதமான வெப்பம் குறைந்துள்ளது. இன்னும் சில தினங்களில் பனிப்புயல் வீசப்போவதாக 'என்விரான்மெண்ட் கனடா' என்ற வானிலை அமைப்பு தெரிவித்துள்ளது.

மெக்ஸிகோ வளைகுடாவில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடக்கு நோக்கி ஒண்டேரியோவுக்குள் வீசும்போது பனி, பனிக்கட்டி மழை மற்றும் மழை, எனப் பல பரிமாணங்களில் வெளிப்பட வாய்ப்பு உள்ளது. இந்நிலை இன்று வரை நீடிக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

ஒண்டோரியோவின் தென்மேற்கு மற்றும் மத்திய தென் பகுதிகளில், வாடைக் காற்று மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும். வெப்பநிலை 7 டிகிரி10 டிகிரி என்கிற சராசரி வெப்பத்தை விடக் குறைவாக இருக்கும். எனினும் காற்றின் வேகம் இன்று தணியக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொட்டும் பனியானது கிங்ஸ்டன், ஒட்டாவா, பீட்டர்பரோ, ஹேமில்டன் மற்றும் டொரொண்டோவில் ஆகிய பகுதிகளில் பரவலாக இருக்கும். ஹேலியர்டன் பீட பூமியில் உறைபனி 5 முதல் 10 சென்ரிமீற்றர் வரை படர்ந்திருக்கும். ஒண்டேரியோவின் மத்திய தென் பகுதியில் ஒன்று அல்லது இரண்டு சென்ரிமீற்றர் வரை பனி உயர வாய்ப்புள்ளது. லேக் தூய ஜீன் பகுதியில் 20 சென்ரிமீற்றர் உயரத்துக்குப் பனி படரும்.

கிழக்குப் பகுதியில் முதலில் சில சென்ரிமீற்றர் வரை உயரும் பனி மழையானது பின்பு 25 சென்ரிமீற்றர் வரை உயர்ந்து அந்தப் பகுதி முழுவதையும் குளிர்விக்கும். எச்சரிக்கை விடும் அளவுக்கு இப்பனி ஆபத்தானது இல்லை என்றாலும் இந்தக் காலகட்டத்துக்கு தற்போதைய பனியின் அளவு அதிகமாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியாக மீண்டும் கலாம்



டில்லி,ஏப்.24

இந்தியாவின் ஜனாதிபதியாக தமிழகத்தைச் சேர்ந்தவரும், விஞ்ஞானியுமான அப்துல்கலாமை மீண்டும் பதவியில் அமரச் செய்ய அ.தி.மு.க., சமாஜ்வாடி கட்சி (முலாயம்சிங்), திரிணாமுல் காங்கிரஸ் (மம்தா) ஆகியன சம்மதம் தெரிவித்துள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஜூலை மாதத்துடன் ஜனாதிபதி பிரதீபா பாட்டிலின் பதவிக் காலம் முடிவுக்கு வருகிறது. இதனையடுத்து நடக்கவிருக்கும் தேர்தலில் யாரை ஜனாதி பதி வேட்பாளராக நியமிக் கலாம் என்று காங்கிரஸ் வட்டாரத்தில் பரபரப்பாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே., அந்தோணி, அமீது அன்சாரி ஆகியோரது பெயர்கள் பரிசீலனையில் உள்ளன.

இதற்கிடையில் விஞ்ஞானி அப்துல்கலாமை மீண்டும் ஜனாதிபதியாக்க அ.தி.மு.க., சமாஜ்வாடி, திரிணாமுல் காங்கிரஸ் என்பன விரும்புகின்றன. என்றும் தெரிவிக்கப்படுகிறது. பா.ஜ., காலத்தில் கலாம் ஜனாதிபதியாக இருந்து நற்பெயர் பெற்றவர் என்பதாலும், சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதாலும், அரசியலுக்கு அப்பாற்பட்டவர் என்பதாலும் இவருக்கு மேலும் ஆதரவு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மகாராஷ்டிரா முன்னாள் முதல்வரும், தற்போதைய மத்திய எரிசக்தி துறை அமைச்சருமான சுஷீல் குமார் ஷிண்டேவும் இந்தத் தகவலை உறுதி செய்துள்ளார். கலாமை ஜனாதிபதியாக்கிட மேற்கூறிய கட்சிகள் மத்தியில் கருத்தொற்றுமை நிலவியிருப்பதாகத் தெரிவித்தார் ஆளும் கூட்டணியில் உள்ள தேசியவாதக் கட்சித் தலைவரும், மத்திய அமைச்சருமான சரத் பவாரும் அரசியலுக்கு அப்பாற்பட்டவர் ஜனாதி பதியாக வேண்டும் என்று கருத்துத் தெரிவித் துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

# சாயி பாபாவின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று

## புட்டபர்த்தியில் விசேட நிகழ்வுகள்



புட்டபர்த்தி, ஏப்.24

மகாசமாதியடைந்த சத்ய சாயி பாபாவின் முதலாம் ஆண்டு நினைவு தினமான இன்று செவ்வாய்க்கிழமை புட்டபர்த்தியில் உள்ள மகா சமாதியில் மகா ஆராதனை மற்றும் சாயிபாபா பற்றிய புத்தக வெளியீட்டு விழா நடைபெறும்.

இந்த நிகழ்ச்சியில் ஆந்திரா மாநில ஆளுநர் எல்.நரசிம்மன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களும், உலகமெங்கும் இருந்து வருகை தந்துள்ள சாயிபாபா பக்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதனைமுன்னிட்டு இரண்டு நாள் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. முதல்நாள் நிகழ்வு ஆந்திரா மாநிலம் அனந்தபூர் மாவட்டத்தில் உள்ள புட்டபர்த்தியில் நேற்றுக் காலை 8 மணிக்கு குல்வந்த் மண்டபத்தில் வேத பாராயணம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து 'தெய்வத்துடனான அனுபவம்' என்ற தலைப்பில் பல்வேறு முக்கிய பிரமுகர்கள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

தொடர்ந்து இன்று காலை 8 மணிக்கு வேத பாராயணமும், சாய் பல்கலைக்கழக மாணவர்களின் 'குருவந்தனம்' சிறப்பு நிகழ்ச்சியும் நடைபெறும். தொடர்ந்து சாய் அறக்கட்டளையைச் சேர்ந்தவர்களின் அறிக்கை வாசிக்கப்படும். பின்னர் பகவான் சத்ய சாயிபாபா பற்றிய புத்தக வெளியீட்டு விழா நடைபெறும். பத்மஸ்ரீ டொக்டர் ஜி.வெங்கட்ராமன் எழுதிய இந்த புத்தகத்தை மாநில ஆளுநர் எல்.நரசிம்மன் வெளியிட்டுவைப்பார். தொடர்ந்து பஜன் மற்றும் மங்கல ஆரத்தி இடம்பெறும்.

# அதிக பணியாளர்களுள்ள விமானம் நிலையம் டில்லி

டில்லி,ஏப்.24

ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட பணியாளர்களை கொண்ட டில்லி விமான நிலையம் உலகிலேயே அதிக பணியாளர்களைக் கொண்ட விமான நிலையமாக உள்ளது என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

பொருளாதார ஆய்வு நிறுவனம் ஒன்று நடத்திய கணக்கெடுப்பில் இது கண்டறியப்பட்டுள்ளது. அமெரிக்காவின் அட்லாண்டா சர்வதேச விமான நிலையம் அதிக பணியாளர்களைக் கொண்டுள்ளது. இதற்கு அடுத்த கட்டமாக சுமார் 5 லட்சத்து 16ஆயிரம் நேரடிப் பணியாளர்களை டில்லி விமான நிலையம் கொண்டுள்ளது. தேசி யத்தில் இது 0.11 சதவீதமாகவும், மாநில அளவில் இவை 8.47 சதவீதமாகவும் உள்ளது. கடந்த ஓராண்டாக உலகில் உள்ள சர்வதேச விமான நிலையங்களான புடா பெஸ்ட், சிட்னி, ஹொங்கொங், நியூ யோர்க் ஸ்டேட், விர்ஜினியா, மியாமி, துபாய், டெட்ராய்ட் உட்பட பல்வேறு விமான நிலையங்கள் கணக்கில் கொள்ளப்பட்டது. மேலும் டில்லி விமான நிலையத்தில் டெர்மினல் 3 கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. அது நிறை வடையும் நிலையில் சுமார் 6 லட்சத்து 14 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும் மறை முகமாகவும் பணி வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

# எம்.ஜி.ஆருக்கு சிகிச்சை அளித்த வைத்தியர் சாவு



தமிழ்நாடு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். கழுத்தில் பாய்ந்த தோட்டாவை அகற்றி சிகிச்சையளித்த பிரபல வைத்தியர் சத்திய நாராயணா உயிரிழந்துள்ளார்.

உடல் நலக்குறைவு காரணமாக கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு இவரது உயிர் பிரிந்தது.

கடந்த 1967ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் திகதி சக நடிகர் எம்.ஆர். ராதாவால் எம்.ஜி.ஆர். சுடப்பட்டார்.

கழுத்தில் குண்டு பாய்ந்த அவரை அரசு பொது மருத்துவமனைக்குக் கொண்டு வந்தனர். பிரபல வைத்தியர்கள் பலரும் எம்.ஜி.ஆருக்கு அறுவைச் சிகிச்சை செய்யத் தயங்கி ஒதுங்கியிருந்தனர்.

அந்தவேளை வைத்தியர் சத்திய நாராயணா இதை சவாலாக எடுத்துக் கொண்டு, எம்.ஜி.ஆருக்கு அறுவைச் சிகிச்சை செய்து கழுத்தில் இருந்த துப்பாக்கி தோட்டாவை அகற்றினார்.

நன்கு குணம் அடையும் வரை எம்.ஜி.ஆருக்கு இவரே சிகிச்சை அளித்தார்.

வைத்தியர் சத்திய நாராயணா (வயது 99) காது, மூக்கு, தொண்டை சிகிச்சைகளுக்கு சிறப்புக்குரிய நிபுணர் ஆவார்.

# வட்டி வசூலிப்பதை மத்தி 3 ஆண்டு நிறுத்த வேண்டும்

## மம்தா ஆவேசக் குரல்



கொல்கத்தா, ஏப்.24

கடனுக்கான வட்டித் தொகையை மேற்குவங்க அரசு திருப்பிச் செலுத்த கால அவகாசம் அளிக்க வேண்டும் என்ற தமது கோரிக்கையை மத்திய அரசு 15 நாளுக்குள் ஏற்க வேண்டும் என்று மம்தா பானர்ஜி கெடு விதித்துள்ளார்.

சில்லறை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீட்டை அனுமதிப்பது, தேசிய தீவிர வாதத் தடுப்புநிலையம் ஆகிய விவகாரங்களில் மத்திய அரசுக்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் மேற்கு வங்காள அரசு செலுத்த வேண்டிய கடனுக்கான வட்டி நிலுவை தொடர்பாக மத்திய அரசுக்கு இப்போது அவர் கெடு ஒன்றை விதித்துள்ளார்.

இது தொடர்பாக மம்தா பானர்ஜி தெரிவித்ததாவது:

மேற்கு வங்காளத்தில் முன்பு ஆட்சியில் இருந்த இடதுசாரி அரசு ரூ.2 லட்சம் கோடி கடன் மிகுதியை வைத்துவிட்டுச் சென்றுள்ளது. இதற்கான வட்டிச் சுமையும் அதிகரித்து விட்டது. இந்த வட்டித் தொகையை வசூலிப்பதை 3 ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கிடமும், நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜியிடமும் ஏற்கனவே பல முறை கோரிக்கை விடுத்துள்ளேன். ஆனால் இன்னும் பதில் வரவில்லை. வட்டித் தொகையை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் அரசு உள்ளது. எனவே மத்திய அரசு இன்னும் 15 நாள்களுக்குள் எனது கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும்- என்றார் அவர்.

# அன்னா குழுவிலிருந்து முஸ்லிம் தலைவர் நீக்கம்



நொய்டா, ஏப்.24

சமூக ஆர்வலர் அன்னா ஹசாரேவின் குழுவில் இருந்த ஒரே முஸ்லிம் தலைவரான முப்தி ஷமீம் கஸ்மி குழுவில் இருந்து நீக்கப்பட்டார்.

எதிர்வரும் ஜூன் மாதம் 3ஆம் திகதி டில்லியில் நடை பெறவிருக்கும் பேரணி குறித்து அன்னா ஹசாரே குழுவினர் நேற்றுமுன்தினம் நொய்டாவில் ஆலோசனை நடத்தினர்.

இதில் பங்குபெற்ற குழு உறுப்பினரான முப்தி சமீம் கஸ்மி முறைகேடாக கூட்ட நிகழ்ச்சியை தன்னுடைய கைபேசியில் பதிவு செய்திருந்தார். அதையடுத்தே அவர் ஆலோசனைக் கூட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார். ஆனால் தன்னை யாரும் நீக்கவில்லை என்றும் தான் தான் குழுவில் இருந்து வெளியேறினார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர் களிடம் தெரிவித்ததாவது:-

இந்த அமைப்பு முஸ்லிம் மக்களுக்கு எதிரான அமைப்பு. அன்னா ஹசாரே குழுவில் நான் ஒருவன் மட்டும் தான் முஸ்லீம். நானும் தற்போது அந்தக்குழுவிலிருந்து வெளியேறி விட்டேன். அன்னா ஹசாரே குழுவினருக்கு முஸ்லிம்கள் தேவை இல்லை என்று குற்றம் சாட்டினார். (வ)

# பிரிட்டனின் கௌரவ விருதுக்கு இந்திய பேராசிரியர்கள் தெரிவு

லண்டன்,ஏப்.24

பிரிட்டனின் கௌரவமிக்க றோயல்சொசைட்டி விருதுக்கு இந்திய பேராசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 1660ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட றோயல் சொசைட்டி அமைப்பு அறிவியல் துறையில் சிறந்து விளங்குவோருக்கு உதவி மற்றும் கௌரவத்தை வழங்கி வருகிறது.

அல்பர்ட் ஐன்ஸ்டீன், ஸ்டீபன் ஹாகிங், ஐசக் நியூட்டன் உட்பட ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட அறிவியியலாளர்களுக்கு இந்த அமைப்பு உதவிகளை வழங்கியுள்ளது.

இதில் நோபல் பரிசு பெற்ற 80 பேர் உதவிகளைப் பெற்றுள்ளனர். இந்த உதவி அவர்களின் வாழ்நாள் முழுவதும் தொடரும்.

இந்தநிலையில் இந்த வருடத்துக்காக லண்டன் இம்பீரியல் கல்லூரியின் இயற்பியல் பேராசிரியர் தேஜிந்தர்சிங் விர்தீ, மரபியல் துறையில் ஆராய்ச்சி செய்த பெங்களூர் உயிர் அறிவியல் தேசிய மையத்தின் தலைவர் கிருஷ்ண சாமி விஜய ராகவன், அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழக கணிதத் துறை பேராசிரியர் சந்திர சேகர் பாலசந்திர கரே, டெக்சாஸ் பல்கலைக் கழக பேராசிரியர் வித்யாசாகர், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் சங்கர் பாலசுப்பிரமணியன், பிரிஸ்டோல் பல்கலைக் கழக பேராசிரியர் வீரேந்தர் குமார் அகர்வால் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (வ)

# தூத்துக்குடி கடல் பகுதியில் கேரள மீனவர் அத்துமீறல்

தூத்துக்குடி,ஏப்.24

மீன்களின் இனப்பெருக்கத்தை முன்னிட்டு விதிக்கப்பட்ட மீன் பிடித்தடையைச் சாதகமாகப் பயன்படுத்தி தூத்துக்குடி கடல் பகுதியில் கேரள மீனவர் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தூத்துக்குடி உள்ளிட்ட தமிழக கடலோர மாவட்டங்களில் மீன்களின் இனப்பெருக்கத்தை முன்னிட்டு கடந்த 14ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 29 ஆம் திகதி வரை 45 தினங்கள் விசைப் படகுகள் மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் விசைப்படகுகள் மீன் பிடிக்க கடலுக்குச் செல்லவில்லை. இதனால் ஆழ்கடல் பகுதியில் படகுகள் நடமாட்டம் இருக்காது. நாட்டுப் படகுகளும் ஒரு குறிப்பிட்ட தொலைதூரத்துக்கு மேல் செல்ல முடியாது. கேரள மாநிலத்தில் இந்தத் தடை ஜூன், ஜூலை மாதங்களில் விதிக்கப்படுகிறது. இதனால் தற்போது கேரள விசைப்படகு மீனவர்கள் தமிழக கடல் எல்லைக்குள் புகுந்து தங்கி கடல் மீன் பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக தூத்துக்குடி, நெல்லை, குமரி ஆகிய மாவட்ட கடல் பகுதிகளில் கேரள படகுகள் அத்துமீறி வந்து சுருக்கு மடி வலைகளுடன் மீன் பிடித்து செல்வதாக மீனவர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

ஏர்வாடி, காயல்பட்டினம் ஆகிய பகுதிகளில் இருந்து கிழக்கில் சில கேரள விசைப்படகுகள் இரவில் மீன் பிடித்துக் கொண்டிருந்துள்ளன. இதனை நாட்டு படகு மீனவர்கள் பார்த்துள்ளனர். இதுகுறித்து தூத்துக்குடி மாவட்ட விசைப்படகு மீனவர் சங்கத் தலைவர் பார்த்தீபன் தெரிவித்ததாவது:-

தமிழகத்தில் விதிக்கப்பட்டுள்ள தடைக் காலத்தை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி கேரள மீனவர்கள் அத்துமீறி வருகின்றனர். முன்பு இது குறைவாக இடம்பெற்று வந்தது. தற்போது அவர்களை யாரும் விரட்டிச் சென்று பிடிக்க முடியாது என்ற காரணத்தினால் அத்துமீறி வந்து வாரக் கணக்கில் தங்கி இங்கு கிடைக்கும் மீன்களைப் பிடித்துச் செல்கின்றனர். இதனால் குமரி, நெல்லை, தூத்துக்குடி ஆகிய மாவட்ட மீனவர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். இதனைத் தடுக்க மீன்துறை, கடலோரக் காவல் படை நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (வ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(3)

### தவறுகள் தீயில் எரிந்து போகட்டும்

எடுத்ததெற்கெல்லாம் கவலைப்படுகிறவர்கள், எதற்குமே கவலைப்படாதவர்கள் என்று மனிதர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதல் பிரிவினர் கடுகை மலையாக்கிக் கலக்கம் கொள்வார்கள். அவர்களுடைய பகற்பொழுதுகள் பெருமூச்சிலும் இரவுகள் உறக்கமில்லாமலும் கழியும். இரண்டாவது பிரிவினரோ, 'காலனே, உன்னைக் காலால் மிதிப்பேன்' என்கிற ரகம்.

தோமஸ் அல்வா எடிசன் சிறந்த அறிவியல் மேதை. ஆயிரத்துக்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகளுக்குச் சொந்தக்காரர். ஒரு நாள் இரவு அவருடைய ஆய்வுகூடம் தீப்பிடித்துக் கொண்டது. பல இலட்சக்கணக்கான டொலர் மதிப்புள்ள கருவிகளும் ஆய்வுக் குறிப்பேடுகளும் தீயில் நாசமாயின.

ஆண்டுக் கணக்கில் மேற்கொண்ட உழைப்பின் பலன்கள் அவருடைய கண்ணெதிரிலேயே தீயில் எரிந்து கொண்டிருக்கின்றன.

எடிசனின் குடும்பத்தாரும், உதவியாளர்களும் அந்தத் தீயை அணைக்க முடியாமல் திகைத்து நின்றனர். அப்போது எடிசன் சொன்னார் 'எவ்வளவு அழகாய் எரிகிறது. இத்தனை உயரத்துக்கு ஓங்கி எரியும் தீயை நீங்கள் இதற்கு முன் கண்டிருக்க மாட்டீர்கள்' என்று. சுற்றியிருந்தவர்களுக்குப் பேசவே நா எழவில்லை.

ஆனால் எடிசனின் கண்கள் வியப்பை முழுமையாக வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. தம்முடைய உதவியாளர்களிடம் அவர் கூறினார், உண்மையில் எல்லாமே போய்விட்டதுதான். ஆனால் என்ன, நாம் முதலில் இருந்தே மறுபடியும் தொடங்குவோம். கவலையை விடுங்கள்' என்றார்.

வேறொரு விஞ்ஞானி என்றால் வாழ்க்கை அஸ்தமித்து விட்ட உணர்வே மிஞ்சியிருக்கும்.

கவலைக்குரியதாய் எதுவும் நிகழ்கிறபோது சொல்லிக் கொள்ளுங்கள், 'இது என் தவறுகளைத் திருத்திக் கொள்வதற்குக் கிடைத்த வாய்ப்பு' என்று. உங்களை இறுக்கத்துக்குள்ளாக்கும் சூழ்நிலைகளை நகைச்சுவை உணர்வோடு எதிர்கொள்ளுங்கள். இலேசாகி விடுவீர்கள்.

பெர்னாட்ஷா பெரிய மேதை. புகழ்பெற்ற படைப்பாளி. சதா சிந்தனை வசப்பட்டிருப்பவர். ஒரு சமயம் ரயில் நிலைய நகரும் படிக்கட்டில் கால் சறுக்கிவிட்டது. கிடுகிடுவென உருண்டார். சுற்றிலும் இருந்தவர்கள் திகைக்க, இவர் மட்டும் கையைக் காலைப் பிடித்துவிட்டுக் கொண்டோ, உடைகளின் தூசியை தட்டிவிட்டுக் கொண்டோ நிற்காமல் வெகு இயல்பாக எழுந்து நடக்க ஆரம்பித்தார். 'நான் வழக்கமாக இப்படித்தான், இப்படித்தான் போவது' என்கிற மாதிரி.

பெர்னாட்சாவைப் போல் நகைச்சுவையுணர்வு உடையவர்களுக்கு எதுவும் சாத்தியம்.

### லட்சம் போனால் என்ன?

லாஸ்வேகாஸ் நகரின் சூதாட்ட விடுதிகள் (casino) உலகப் பிரசித்தம். அங்கே சூதாடுகிறவர்கள் ஒரு மணி நேரத்தில் லட்சம் டொலர் சம்பாதிக்கவும், இழக்கவும் முடியும்.

மிஸ்டர் எக்ஸ் தமது மனைவியுடன் லாஸ்வேகாஸ் சென்று ஒரு ஹோட்டலில் தங்கினார். தொடர்ந்து மூன்று நாள்கள் சூதாடி, பணத்தை இழந்தார்.

'கையில் இருந்த காசைத்தான் தொலைத்து விட்டீர்கள், கிளம்புங்கள், ஊர் போய்ச் சேரலாம்'' என்று மனைவி சிடுசிடுத்தாள்.

'' கண்ணு, ஒரு மணிநேரம் பொறு. இதோ ஒரு மணி நேரத்தில் வந்து விடுகிறேன்'' என்று சொல்லி சூதாட்ட விடுதிக்குச் சென்றார் மிஸ்டர் எக்ஸ். அவருடைய கையில் ஐந்து டொலர்கள் மட்டுமே மிச்சம் இருந்தது.

சூதாட்ட மேசை முன்பாக நின்றவர் அந்த ஐந்து டொலரையும் சிவப்பில் வைத்தார். அன்று அதிர்ஷ்டம் அவர் பக்கம் இருந்தது என்றே சொல்ல வேண்டும். ஒரு மணி நேரத்துக்கெல்லாம் ஐந்து பத்து ஆகி, பத்து நூறு ஆகி, ஐம்பதினாயிரம் டொலர் சேர்ந்து விட்டது. கடந்த மூன்று நாள்களில் ஒரு லட்சம் டொலர்களை அவர் இழந்திருந்தார். அன்றைய ஆட்டத்தில் சரிபாதித் தொகை கைக்கு வந்துவிட்டது. 'இது தான் நேரம், இப்போதே கிளம்பி விடலாம்' என்று உள்ளுணர்வு சொன்னது. சிப் (chip) களைக் கொடுத்துப் பணமாக்கிக் கொள்ள கவுண்டருக்குச் சென்றார் அவர். ஆனால் அப்போது சைத்தான் அவருடைய மனதுக்குள் புகுந்துவிட்டது.

இன்னும் ஒரேயொரு ஆட்டம் ஆடுவோம். இன்னொரு ஐம்பதினாயிரம் கைக்கு வந்துவிடும் என்று எண்ணிக் கொண்டார். கையில் இருந்த ஐம்பதினாயிரம் டொலர்களைக் கறுப்பில் வைத்தார். அத்தனையும் ஒரே ஆட்டத்தில் தொலைந்து போனது.

அவர் வெளியே வந்தார். அதுவரை உடம்பு வியர்த்து, மனசு படபடத்துக் கொண்டிருந்தவர் நிம்மதியாக உணர்ந்தார். அறைக்குத் திரும்பியவரிடம் மனைவி கேட்டாள். என்ன ஆச்சு? என்று

ஐந்து டொலர்கள் தோற்றேன் என்றார் அவர். எக்ஸைப் போல் எதையும் இலகுவாக எடுத்துக் கொண்டால் ஏது கவலை?

### 'சங்கிலித் தொடராய் கவலைகள்!'

குழந்தையாக இருந்த நாம் வளரும் போது கூடவே கவலைகளும் வளர்ந்து விடுகின்றன. குழந்தைப் பருவத்தில் தாய் பக்கத்தில் இல்லை என்றாலே அழத் தொடங்கிவிடுவோம். காரணம் தனித்து விடப்பட்ட கவலை. நம் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டி வளர்க்கிறபோதே பயத்தையும் ஊட்டி விடுகின்றனர்.

முதல் முதலாய் பள்ளிக்குச் செல்கிற போது வீட்டுக்குத் திரும்புவோமா என்கிற கவலை, கொஞ்ச நாளில் ஆசிரியர் கொடுக்கிற 'ஹோம் வேர்க்கை' எப்படி முடிக்கப் போகிறோம் என்கிற கவலை.

-சி.எஸ்.தேவநாதன் (தொடரும்)

# சைவத்தின் தொன்மையை மாணவர்களுக்கு அறநெறிப் பாடசாலைகள் புகட்ட வேண்டும்

## இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம்,ஏப்.24

அறநெறிப் பாடசாலைகள் ஊடாக வளரும் மாணவ சமுதாயத்தினர் மத்தியில் சைவசமயத்தின் தொன்மைகளை எடுத்துக் கூற வேண்டும். இதன் மூலம் குன்றிப் போகும் சைவசமயப் பண்பாடுகளை நிலைநிறுத்த முடியும். இவ்வாறு வடமராட்சி இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மகிந்தினி விஜயகுமார் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய முன்றிலில் அமைக்கப்பட்ட அறநெறிப் பாடசாலையின் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே திருமதி மகிந்தினி விஜயகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பண்பாட்டின் மாற்றங்களால் இந்து சமயத்தின் பண்பாடுகள் பல மறைந்து வருவதுடன் மாணவ சமுதாயத்தினர் அவற்றைப் பின்பற்ற தயக்கம் காட்டுகிறார்கள்.

இதனால் சமுதாயத்தின் தொன்மைகளை மாணவர்கள் அறிந்து கொள்ள முடியாத நிலையும் ஏற்படுகிறது.

சமுதாயத்தின் தொன்மைகள் எந்தளவுக்கு மழுங்கடிக்கப்படுகின்றனவோ அந்தளவிற்கு மாணவர் மத்தியில் மத மாற்றம் இடம்பெறுவதற்கான வாய்ப்புகளும் உருவாகின்றன.

இதனை மாற்றி அமைக்க அறநெறிப் பாடசாலைகள் ஒவ்வொரு கிராமத்திலும் தேவைப்படுவதுடன், அந்தப் பாடசாலைகளூடாக சமயம் பற்றிய கருத்துக்கள் மாணவர்களுக்கு எடுத்துக் கூறப்படவேண்டும். மாணவர்கள் சமயப் பண்பாடுகளை மதித்து அதன் வழி தமது வாழ்வை நடத்துவதற்கு வழி காட்டவேண்டும்- என்றார்.

(எ-14-253)




யாழ்.நல்லூர் சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெற்ற எழுத்தாளர் முருகேசு ரவீந்திரனின் ''வாழ்க்கைப் பயணங்கள்'' எனும் சிறுகதை தொகுதி வெளியீட்டு விழா அண்மையில் நடந்தது. இதில் நூலின் சிறுகதை எழுத்தாளர் ரவீந்திரன் மற்றும் எழுத்தாளர் ந.சத்தியபாலன் உட்பட பலர் அமர்ந்திருக்கின்றனர் (எ)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஏப்.24

சிவத்தமிழ் மானிட விடியற்கழகம் ஆலயம் சார்ந்த சமூகப் பணிகளை மேற்கொள்வதற்கும் அறநெறிப் பாடசாலைகளை இயக்கும் முகமாகவும் ஒருங்கிணைப்பாளர்களுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இதற்கு விண்ணப்பிப்போர் க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தி அடைந்திருப்பதுடன் 18-40 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னதாக சிவத்தமிழ் அறநெறி மையம், சித்தி விநாயகர் கோயில், கண்டி வீதி கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பும்படி கோரப்பட்டுள்ளது. (எ)

# நிகழ்வுகள் மூலம் பண்பாடு அழியாது பாதுகாக்கப்படும்

## சமுர்த்தி வங்கி சங்க கட்டுப்பாட்டுச் சபையின் தலைவி

யாழ்ப்பாணம், ஏப்.24

நிகழ்வுகள் மூலம் மக்களின் சமூகப் பழக்க வழக்கங்கள், கலை கலாசார பண்புகள் வெளிக் கொண்டுவரப்பட வேண்டும். அப்பொழுதுதான் தமிழ் கலை கலாசார பண்பாடு, பாரம்பரிய பழக்கவழக்கங்கள் எவ்வளவு சிறந்தவை என்பதை இளைய சமூகத்தினர் தெரிந்து கொள்ள முடியும் என்று மல்லாகம் சமுர்த்தி வங்கிச் சங்க கட்டுப்பாட்டுச் சபையின் தலைவி திருமதி.ந.றஞ்சிதமலர் தெரிவித்தார்.

மல்லாகம் சமுர்த்தி வங்கிச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சித்திரைப் புத்தாண்டு கலாசார விளையாட்டு விழா கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை கிழக்கு சந்திர மௌலீஸ்வரர் ஆலய முன்றிலில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தலைமையுரை நிகழ்த்தும் போதே றஞ்சிதமலர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்த பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் மூலம் இளம் சமூகத்தினர் நெறிமுறை தவறாது வாழப் பழகிக் கொள்வர். இன்றைய நிகழ்வுகளை இளைய சமூகத்தினரே பொறுப்பேற்று நடத்தி வருவது அவர்கள் நல்லதொரு பாதையில் தமது எதிர்காலத்தை வழி நடத்திச் செல்வதற்கு வழிசமைக்கிறது. இப்படிப்பட்ட நிகழ்வுகளும் இளம் சமூகத்தினரின் சிறந்த செயற்பாடுகளும் அந்த சமூகத்தின் அபிவிருத்திக்கு முழுப் பங்களிப்புச் செய்யும் என்பது உண்மை.

ஆகவே எமது கலை கலாசார பாரம்பரிய பண்பாட்டு நிகழ்வுகளை தொடர்ந்து நடத்துவதன் மூலம் இளம் சமூகத்தினரை வேறு தப்பான சிந்தனைக்குச் செல்லவிடாது நல்ல சிந்தனையுள்ளவர்களாக மாற்றமுடியும்.

இதன் மூலம் எமது பாரம்பரிய கலை கலாசார பண்பாட்டு நிகழ்வுகளும் அழியாது பாதுகாக்கப்படும் என்பது உண்மை - என்றார். (எ)

# தோல்வி வெற்றிக்கான முதல்படி

## வலி. மேற்கு பிரதேச செயலர் தெரிவிப்பு

சங்கானை, ஏப்.24

தாச்சிப்போட்டி, கபடி, கிறிஸ் மரம் ஏறுதல், கயிறிழுத்தல் போன்ற எமது பாரம்பரிய விளையாட்டுக்களில் தொடர்ந்து எம்மவர்கள் ஈடுபாடு காட்டி வருவதை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன். உடல் ஆரோக்கியத்துக்கும், மனச் சந்தோஷத்துக்கும், பொழுதுபோக்குக்கும் இன்றைய நிகழ்வுகள் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன என்று வலி.மேற்கு பிரதேச செயலர் அ.சோதிநாதன் தெரிவித்தார்.

மானிப்பாய் பொலிஸாரின் அனுசரணையுடன் சங்கானை வர்த்தகர் சங்கமும், விழிப்புக் குழுவும் இணைந்து, சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்கானை கூடத்து அம்பாள் ஆலயத் திடலில் நடத்திய விளையாட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சோதிநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

போட்டி என்று ஒன்று வரும் போது ஒரு பகுதி வெற்றி பெற மற்றையது தோல்வியைத் தழுவ வேண்டிய நிலை ஏற்படும். அதற்காக தோற்றவர்கள் திறமையற்றவர்கள் என எண்ணக்கூடாது. சந்தர்ப்ப சூழ்நிலையால் திறமையிருந்தும் தோல்வியைச் சந்திக்கின்றார்கள். அதற்காக மனம் சலிப்படையக் கூடாது. தொடர்ந்தும் பங்குபற்றி வெற்றி இலக்கை நோக்கி நடைபோட முயற்சிக்க வேண்டும்- என்றார்.

வர்த்தக சங்கத் தலைவர் ச.சாம் பசிவம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்கொல்ம் பேட், யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சுபசிங்க பண்டார மற்றும் யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா உட்பட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

(எ-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:** 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# விடுதலைப் புலிகளின் அழிவு சிறுபான்மையினரின் தோல்வி

தம்புள்ளையில் உள்ள மசூதியை அகற்றுவதற்கான போராட்டத்தை சிங்கள பௌத்தர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் சொன்னவுடன் மசூதி அங்கிருந்து அகற்றப்படாத காரணத்தால் ஆத்திரமடைந்து அதனைத் தாக்கிச் சேதப்படுத்தியிருக்கிறார்கள்.

50 ஆண்டுகளுக்கும் மேலாக அந்த இடத்தில் மசூதி இருந்து வந்தது என்று முஸ்லிம்கள் கூறுகிறார்கள். இத்தனை காலமாக அதனை அப்புறப்படுத்த வேண்டும் என்று சிங்கள பௌத்தர்களுக்கு வராத தீவிர எண்ணம் இப்போது வந்திருக்கிறது.

மசூதியை அகற்றுவதற்காக சிங்கள பௌத்தர்கள் இரண்டு காரணங்களைக் கூறுகிறார்கள். முதலாவது, விகாரைக்குச் சொந்தமான காணியில் மசூதி அமைந்திருக்கிறது என்பது. இரண்டாவது, அந்தப் பகுதி புனிதப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டிருப்பதால் அதற்குள் மசூதி இருக்கக் கூடாது என்பது.

இந்த இரண்டு காரணங்களும் நீண்டகாலமாக இருந்து வந்தவைதான். ஆனாலும் மசூதியை அகற்றுமாறு இப்போதுதான் சிங்கள பௌத்தர்கள் நெருக்கடி கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஒருபடி மேலே போய் மசூதி மீது தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் முன்பாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலாளிகள் யார் என்பது மிகத் தெளிவாகத் தெரிந்தபோதும், தாக்குதலாளிகளை அடையாளம் காண்பிக்கத்தக்க ஒளிப்படங்கள் ஊடகங்களில் வெளியான போதும், ஒரு மதத் தலத்தைத் திட்டமிட்டுத் தாக்கியவர்களில் ஒருவர்கூட இதுவரை கைது செய்யப்படவோ விசாரணை செய்யப்படவோ இல்லை.

அதேநேரத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரிய திருக்கேதீச்சரம் என்ற இந்து ஆலயம் இருந்த இடத்தில் புதிதாக விகாரை அமைக்கிறார்கள், புத்தரின் பிரமாண்டமான சிலையை நிறுவுகிறார்கள். இராணுவத்தினரைத் தவிர சிங்கள பௌத்தர்கள் எவரும் குடியிருக்காத வடபகுதியின் பல இடங்களில் விகாரைகளைக் கட்டிஎழுப்புகிறார்கள். அதுவும் தனியாரின் காணிகளில் எந்த அனுமதியும் இல்லாது.

இவை எல்லாம், அதாவது சிங்கள பௌத்த மேலாதிக்க நடவடிக்கைகள் எல்லாம் போர் முடிந்த பின்னரே தீவிரம் பெற ஆரம்பித்துள்ளன. இதற்கான முழுமுதற் காரணம், சிங்கள பௌத்த அரசு ஒன்றே ஆட்சியில் இருக்கிறது; அது தமக்கு எதிராக எந்த நடவடிக்கைகளையும் எடுக்காது என்ற பௌத்த தீவிரவாதிகளின் நம்பிக்கை.

தமிழீழ விடுதலைப் புலிகள் போராட்டக் களத்திலிருந்து அகற்றப்பட்டதன் பின்னரே இவர்களுக்கு இந்த நம்பிக்கை வந்துள்ளது. அதனாலேயே அவர்கள் தமது பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை இலங்கை என்கிற நாடு முழுவதும் நிலைநாட்டுவதற்கு முயன்று நிற்கிறார்கள்.

இதன் மூலம் சொல்லப்படும் செய்தி, விடுதலைப் புலிகளின் அழிவு ஈழத் தமிழர்களுக்கு மட்டுமான பின்னடைவு அல்ல; அது மொத்த சிறுபான்மையினங்களுக்கும் மதங்களுக்குமான தோல்வி. களத்திலிருந்து புலிகள் அகற்றப்பட்டமை சிறுபான்மை இனங்கள் மொத்தத்தினதும் இருப்பையும் பாதுகாப்பையும் இலங்கையில் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது.

மக்களால் இது புரிந்துகொள்ளப்படும்போது புலிகளின் மீள் எழுச்சி அல்லது மற்றொரு ஆயுதப் புரட்சி தவிர்க்க முடியாததாகிப் போகும்.

# ஆசிரியம் தொழில் அல்ல; தொண்டு

**வே.தனபாலசிங்கம்**
*(கட்டுரையாளர்:- ஆசிரியராக, அதிபராக அரச சேவையில் 26 வருடங்கள் சேவையாற்றிய ஓய்வு பெற்ற புலமையாளன்)*

வடமாகாணக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர். அமரர். தி.மாணிக்கவாசகர். 1978 இல் கூறிய இரண்டு வாக்கியங்கள் முக்கியமானவை. ''ஆசிரியத்தொழில் மிகவும் புனிதமானது அது 'தொழில்' என்னும் ஊதிய நிலைக்கப்பால் 'தொண்டு' என்னும் சேவை நிலையில் வைத்துப் போற்றப்படுவது'' என்றார் அவர்.

ஆசிரியத் தொழிலின் இந்தப் புனிதத்தன்மை இன்று எவ்வளவுக்குப் போற்றப்படுகின்றது என்பதை ஆசிரியர்கள் சிந்திக்க வேண்டும். ''எழுத்தறிவித்தவன் இறைவன்'' என்றும் ''மாதா, பிதா, குரு தெய்வம்'' என்றும் தெய்வத்துக்கு முன் குருவை வைத்தும் பெரியோர்கள் கொடுத்த மதிப்புப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் செய்தல் மட்டும் ஆசிரியர்களது பொறுப்பல்ல. நாட்டில் ஒழுக்க சீலர்களை உருவாக்குதல், எமது பண்பாட்டை வளர்த்தல் ஆகிய பொறுப்புக்களும் ஆசிரியர்களுக்கு உண்டு. ஒழுக்கம் உயிரினும் மேலானது என்று கற்பிக்கும் நாம் ஒழுக்கத்தைப் பேணுவது அதைவிட முக்கியம்.

ஆசிரியன் பிறப்பிலேயே ஆசிரியனாகப் பிறக்கின்றான் என்று எனக்குக் கற்பித்த பண்டிதர்கள் சொன்னார்கள்.

இலக்கணம் - மனிதர்களை உயர் நிலையில் வைத்துள்ளது. ஆசிரியர்களை இன்னும் கொஞ்சம் கூட மதிப்புக் கொடுத்து மக்கள் போற்றுகின்றார்கள். தென்னிலங்கையில் கண்டி மாவட்டத்தில் சிங்கள தமிழ்க் கலவன் பரி/ திருத்துவக் கல்லூரியில் சிங்கள மாணவர்கள் பரீட்சை எடுக்கப் போக முன் சிங்கள ஆசிரியரிடமும், தமிழ் ஆசிரியர்களிடமும் ஆசீர்வாதம் பெறுவர். சிங்கள மக்கள் ஆசிரியர்களையும், வைத்தியர்களையும் கடவுளாக மதிப்பதை அங்கு கண்டேன்.

இன்றைய பத்திரிகைகளைப் பார்க்கும் போது - வெட்கம், வெட்கம். மானம் எங்கே போகிறது? ஆசிரியத் தொழில் அறத்தை வளக்கும் தொழில். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் இந்த நான்கையும் அகற்ற முடியாவிட்டால் ஆசிரியப் பணியை விட்டு அவர் அகன்றிட வேண்டும்.

காம ஆசையை வழிப்படுத்த முடியாமல் தவறு செய்யும் ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்களுக்கு, மக்களுக்கு முன்னால் செல்ல வெட்கம் இல்லையா? இந்த நிலைகெட்ட ஆசிரியர்களை நினைக்க நெஞ்சு பொறுக்காத நிலையில் எண்பதாவது வயதில் இதனை எழுதுவதையிட்டு நான் மிகவும் கவலைப்படுகின்றேன்.

முன்பு பாடசாலை விடுமுறை காலத்தில் மாணவர் நன்மை கருதி ஓர் ஆண் ஆசிரியர் வகுப்பு வைத்துக் கற்பித்தால் அன்று ஒரு பெண் ஆசிரியரும் வந்து நிற்க வேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது. ஆசிரியர் சரி - அதிபர் சரி தன் பிள்ளை போன்றே மற்றவர்களின் பிள்ளைகளையும் மதிக்க வேண்டும்.

பாலூக்கத்தால் பிசகுவிடும் ஆசிரியர்களுக்கு சிந்திரப்பழங்குடை ஆயிரம் கொடுக்க வேண்டும் (இந்திரனுக்கு முனிவர் இட்ட சாபம் போன்று). அல்லது அறிவியல் முறையில் அவர் விரும்பும் உருவத்தை அமைத்து அதைப் பார்த்துக் கொண்டிரு என்று தண்டனை கொடுக்க வேண்டும். இவர்களை மாட்டு வண்டியில் ஊர்வலமாகவும் அழைத்துச் செல்ல வேண்டும். பெற்றோர்களே, பெரியோர்களே, கல்விமான்களே, கல்விப் பகுதியினரே சிந்தியுங்கள். நமது சமுதாயத்தில் நல்ல நிலை உருவாக என்ன செய்யலாம் என்று சிந்தியுங்கள். ✦

# ஒரு காளைக்கு மட்டும்தான் வாழும் உரிமை உள்ளதா?

**மு. தர்மலிங்கம்**
*(சமாதான நீதிவான்)*



அன்று நீதி கேட்டு முறையிட்ட பசு மாட்டுக்கு தனது மகனையே தேர்க் காலில் கொன்று நீதி வழங்கினான் மனுநீதிச் சோழன். ஆனால் இன்றோ முறையிடாக் காளை, இறைச்சிக்காக வெட்டப்படுவதைத் தடுத்து, அதற்கு உயிர்ப் பாதுகாப்பு வழங்கி நீதி செலுத்தப்பட்டிருக்கிறது.

2009 இல் வன்னி இறுதிப் போரின் கொத்துக் கொத்தாகக் குண்டுகள் வீசப்பட்டு எமது மக்கள் பல்லாயிரக் கணக்கில் கொன்று குவிக்கப்பட்ட கொடூரத்தையோ இரக்கமற்ற அரக்கர்களின் வன்புணர்வுகளையோ சொத்துக்கள் சூறையாடப்பட்ட அவலத்தையோ அங்கங்களை இழந்து தவிக்கும் அங்கவீனர்களையோ நினைக்குந்தோறும் இன்றும் நெஞ்சம் வேதனையில் வெதும்புகின்றது. இன்று ஐந்தறிவுக் காளை மாட்டைக் காப்பாற்றிய அரச அதிபர் அன்று வன்னி அதிபராக இருந்த வேளை ஆறறிவு வன்னியரைக் காப்பாற்றும் அதிகாரத்தைக் கொண்டிராமல் போனமை மக்களின் துர் அதிஷ்ரமே.

*''பழையன கழிதலும் புதியன புகுதலும்*
*வழுவல கால வகையினானே''*

என்ற நன்னூலாரின் சூத்திரம் இந்தச் சந்தர்ப்பத்தில் மனங்கொள்ளத்தக்கது.

எமக்கே உரிய பண்பாடு, கலாசாரம், விழுமியங்கள் ஆகியன காலப் போக்கில் படிப்படியாக மாற்றமடைந்துள்ளன அல்லது கைவிடப்பட்டுள்ளன என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இந்து மத தத்துவத்தின்படி இந்துக்கள் புலால் உண்பதில்லை. ஆனால் நடைமுறையில் நீண்டகாலமாகவே இந்து மதத் தத்துவம் புறந்தள்ளப்பட்டு இந்துக்களில் பலர் ஆடு, கோழி, மீன் ஆகியவற்றின் இறைச்சியை நுகர்கின்றனர். இன்றும் புலால் நீக்கி மரக்கறியை மட்டுமே உண்பர் சிலரே உளர்.

இந்து மதம் பசுவையும் காளையையும் புனிதப் பிராணிகளாக நோக்குகின்றது. அந்தவகையில் இந்துக்கள் நீண்ட காலமாகவே மாட்டிறைச்சியை வெறுத்து ஒதுக்கி வந்தார்கள். ஆனால் காலப்போக்கில் இந்துக்களில் சிறு தொகையினர் மாட்டிறைச்சியையும் புசிக்கத் தொடங்கினர். இந்த நுகர்வு மெல்ல மெல்லப் பெருகி இன்று இந்துக்களிலும் ஒரு குறிப்பிட்ட தொகையினர் மாட்டிறைச்சியை விரும்பி உண்கிறார்கள்.

பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபை ஆகியன மாட்டிறைச்சிக் கடை நடத்துவதற்கான அனுமதியை சம்பந்தப்பட்ட கடைக்காரருக்கு வழங்குகின்றன. பல இந்துக்களே மாட்டிறைச்சிக் கடைகளை நடத்துகிறார்கள்.

குறிப்பிட்ட நல்லினக் களை மாடு திருநெல்வேலிக் கால்நடைப் பண்ணையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டது. அந்த மாட்டைத் தொடர்ந்து பராமரிப்பதால் பயனில்லை என்பதால் மாடு விற்பனை செய்யப்பட்டது. மாட்டிறைச்சிக் கடை வைத்து வியாபாரம் செய்பவர் அந்த மாட்டை வாங்கியது அதனை உரிய முறையில் கொன்று விற்பனை செய்து இலாபம் அடைவதற்காகவேயாகும். அவர் அதனைக் காட்சிப்படுத்தி விளம்பரப்படுத்தியமை தமது வெற்றிகரமான வியாபாரத்துக்கே என்றும் கொள்ளமுடியும்.

விளம்பரம் செய்வது அவரது உரிமையாகும். அது தவறு என எந்த விதத்திலும் நியாயப்படுத்த இயலாது.

ஏனைய காளை மாடுகள் வெட்டப்படும் போது குறிப்பிட்ட இக்காளை மாடு வெட்டப்படுவதை மட்டும் தடுத்து நிறுத்தியமை வெட்டப்பட்ட ஏனைய காளை மாடுகளுக்குக் காட்டப்பட்டுள்ள மிகப்பெரும் பாரபட்சமாகும். எனவே, தனி ஒரு காளையை மட்டும் காப்பாற்றாது அனைத்துக் காளைகளையும் காத்தருளவேண்டும் எனக் கடவுளை வேண்டுவோம். ✦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் துடைப்பு அரசியலும் கபட நாடகமும்

அதிரன்

இந்திய எதிர்க் கட்சித்தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இந்திய நாடாளுமன்றக் குழுவினர் இலங்கைக்கான தமது பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று நாடு திரும்பிவிட்டனர். கடந்த ஒரு வார காலமாகப் பரபரப்பாகப் பேசப்பட்ட இந்தியக் குழுவின் பயணம் நடந்து முடிந்துவிட்டது. இலங்கை- இந்திய அரசியல் வட்டாரத்தில் மட்டுமல்ல உலக அரசியல் மட்டத்திலும் இந்தப் பயணம் மிக அவதானமாக நோக்கப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீதான தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களித்த பின்னர் இந்தியக் குழுவின் இந்தப் பயணம் நடைபெற்றிருக்கிறது. தீர்மானத்தை இந்தியா ஆதரித்தமையால் இலங்கை அரசு இந்தியா மீது கடும் கோபம் கொண்டிருந்தது. இந்தியாவுக்கும் இது பெரும் தர்மசங்கடமான நிலையைத் தோற்றுவித்திருந்தது. இந்தக் கோபத்தை எப்படித் தணிப்பது என்று புதுடில்லி ஆழமாகச் சிந்தித்தது. அதன் மூலம் நடைபெற்றதுதான் இந்த இந்தியக் குழுவின் வருகை.

இந்தியா மீது இலங்கை கொண்டிருக்கும் கோபத்தை ஆற்றுவதற்காகவே இந்திய மத்திய அரசு இந்தப் பயணத்தை ஒழுங்கு செய்திருக்கிறது என்று ஏற்கனவே இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழகத்திலும் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. இலங்கைக்கு அடிபணிந்து இந்தியா இந்தப் பயணத்தை ஏற்பாடு செய்ததன் மூலம் இலங்கையை சமாளிக்க முனைகிறது என்றும் கருத்துக்கள் எழுந்தன. இந்த நிலையிலேயே இந்த இந்தியக் குழுவின் பயணம் நடந்து முடிந்திருக்கிறது.

பயணம் முடிவடைந்துள்ள போதும் அதன் மூலம் கிடைத்த பெறுபேறு என்ன? என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வி.

நான்கு நாள்களில் சூறாவளிப் பயணத்தை மேற்கொண்ட இந்தியக் குழுவினர் பல தரப்பினரையும் சந்தித்துப் பேசியுள்ளனர். பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைத்தனர். இடைத்தங்கல் முகாம்களுக்குச் சென்று இடம்பெயர்ந்த மக்களைச் சந்தித்தனர். ஆயினும் இவற்றின் பெறுபேறுகள் என்ன என்பதை அந்தக் குழுவினர் தெளிவாக வெளியிடத் தவறிவிட்டனர் என்றே எண்ணத் தோன்றுகிறது.

இந்தியக் குழுவின் இந்தப் பயணத்தை முழுமையாக ஆராய்ந்தால் அதில் இலங்கைத் தமிழர்கள் பயனடையக் கூடிய உருப்படியான எந்தவொரு நடவடிக்கையும் இல்லையென்றே சொல்ல வேண்டும்.

இந்தியக் குழுவில் முன்னர் இலங்கை வர இருந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.கவும், கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.கவும் திடீரெனத் தமது உறுப்பினர்களை அந்தக் குழுவில் இருந்து விலக்கிக் கொண்டன. அவர்களின் அந்த முடிவு இப்போது பார்க்கப் போனால் சரியானது என்றே படுகிறது. இலங்கை வந்து மஹிந்த அரசை திருப்திப்படுத்தும் கண்துடைப்பு அரசியலைச் செய்ய விரும்பாமல் அதிலிருந்து விலகிக் கொண்டுவிட்டார்கள் அவர்கள். இங்கு என்ன நடைபெறப் போகிறது என்பதை ஏற்கனவே சரியாகச் சிந்தித்துச் செயற்பட்டமையால் ஈழத் தமிழர்களின் கண்டனக் கண்ணிலிருந்து தி.மு.கவும் அ.தி.மு.கவும் தப்பிப் பிழைத்துவிட்டன.

இந்தப் பயணம் முழுக்க முழுக்க இலங்கை அரசைத் திருப்திப்படுத்தும் ஒன்றாகவே அமைந்திருக்கிறது என்பது வெளிப்படை. இந்தியக் குழுவினர் வவுனியாவில் மனிக்பாம் இடைத்தங்கல் முகாமுக்குச் சென்று அங்கு தங்கியுள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிந்தனர். இதன்போது அங்கிருந்த மக்கள் தாம் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும் என்பதையே ஒட்டுமொத்தக் குரலில் தெரிவித்தனர். மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட செட்டிக்குளம் பகுதிக்கும் இந்தக் குழு சென்றது. அங்கும் மக்களைச் சந்தித்தது. அவர்களும் தமது தேவைகள் உரிய வகையில் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதையே தெரிவித்தனர். இதனைச் செவிமடுத்த இந்தியக் குழு ஜனாதிபதியுடனான சந்திப்பில் இது பற்றி நிச்சயம் எடுத்துக் கூறுவதாக உறுதியளித்திருந்தது. அதன் பின்னர் முல்லைத்தீவுக்குச் சென்ற அவர்கள் அங்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பொது மக்கள் எவரையுமே சந்திக்கவில்லை. இந்திய அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மட்டும் ஆரம்பித்து வைத்தனர். அதன் பின்பு யாழ்ப்பாணம் வந்த அவர்கள் இங்கு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார்கள். இந்தச் சந்திப்பின்போது இனப்பிரச்சினைக்கான தீர்வு விரைவுபடுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதற்குப் பதிலளித்த இந்தியக் குழுவினர் இது பற்றித் தாம் ஜனாதிபதியுடன் பேசுவதாகக் கூறினர். அவர்களுடைய பயணத்தின்போது தமிழர் தரப்பில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துக் கூறப்பட்ட அனைத்து விடயங்களையும் அந்தக் குழுவினர் அதிக அக்கறையுடன் கேட்டறியவில்லை. [illegible] மாகக் கருதி ''நாம் ஜனாதிபதியுடன் பேசுகிறோம்'' என்று மட்டுமே அவர்கள் பதில் கூறினார்கள். தமிழ் மக்களுக்கான தீர்வு எப்படி அமைய வேண்டும். அது பற்றி மக்களின் கருத்து என்ன? என்பன குறித்து அவர்கள் இங்கு எதுவுமே கேட்கவில்லை.

இந்தப் பயணத்தில் இந்தியக் குழுவின் தலைவி சுஷ்மா சுவராஜ் இலங்கை ஜனாதிபதி மஹிந்தவைப் போலவே சர்வதிகாரத்துடன் நடந்துகொண்டார் என்று விமர்சனங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தியக் குழுவில் 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர். அந்தக் குழுவின் தலைவியாக சுஷ்மா சுவராஜ் இருந்தார். இந்தியக் குழு பயணம் செய்த எந்தவொரு இடத்திலும் அந்தக் குழுவில் இடம் பெற்றுள்ள ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களை வாய் திறக்க சுஷ்மா சுவராஜ் விடவே இல்லை. கேட்ட கேள்விகள் அனைத்துக்கும் அவரே பதிலளித்தார். எந்த விடயமாக இருந்தாலும் நான்தான் அதுபற்றிக் கதைக்க வேண்டும். நீங்கள் வாயே திறக்கக் கூடாது என்று தனது தரப்பு உறுப்பினர்களுக்கு அவர் கண்டிப்பான உத்தரவையும் இட்டிருந்தார் போலும். அதனை வெளிப்படையாகவும் அவதானிக்க முடிந்தது.

யாழ். ரில்கோ ஹோட்டலில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு இடம்பெற்றது. அந்தச் சந்திப்பில் தமிழர் தரப்புப் பிரச்சினைகள் தொடர்பான பல்வேறு விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. [illegible] இந்திய [illegible] உறுப்பினர் சித்தன் அங்கு எழுப்பப்பட்ட பிரச்சினை ஒன்றுக்கு பதிலளிக்க முனைந்தார். ஆயினும் சுஷ்மா அதற்கு விடவேயில்லை. நான்தான் இந்தக் குழுவின் தலைவி. நானே பதிலளிக்கிறேன் எனக் கூறி சித்தனின் வாயைக் கட்டிவிட்டார். அவ்வாறே அந்தக் குழு சென்ற இடங்களிலெல்லாம் சுஷ்மா சுவராஜ் நடந்துகொண்டார். இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது இந்தக் குழுவின் பயணத்தின் நோக்கம் என்ன என்பதை உங்களால் இலகுவில் ஊகிக்கமுடிகிறது அல்லவா?

ஈழத் தமிழர்களில் இரக்கப்பட்டு இந்தியா ஜெனிவாவில் வாக்களிக்கவில்லை. தமிழக அரசியல் அழுத்தங்கள் காரணமாகவே அதனைச் செய்தது. அதேபோன்றே இந்த இந்தியக் குழுவின் பயணமும், தமிழர்களில் இரங்கி அவர்களின் பிரச்சினையை நேரடியாக அறிந்து அவற்றுக்குத் தீர்வு காண வேண்டும் என்பதற்கானது அல்ல. இலங்கை கொண்டிருக்கும் கோபத்தைத் தணித்து அதனை 'தாஜா' செய்வதே இந்தியக் குழுவின் இலக்கு. அந்த இலக்கை அவர்கள் செவ்வனவே செய்து முடித்துச் சென்றுவிட்டார்கள்.

இந்தியக் குழுவில் இடம்பெற்றிருந்த சுஷ்மா சுவராஜ், சுதர்சன நாச்சியப்பன் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பான தெளிவான பார்வையையும், அதுபற்றிய பூரணமான அறிவையும் கொண்டவர்கள் அல்லர். அவர்கள் இந்திய மத்திய அரசின் தாளத்துக்கு ஆடக்கூடிய நாட்டிய வித்தகர்கள். அதனால்தான் அவர்களை நம்பி இங்கு அனுப்பி வைத்தது இந்தியா. உண்மையாகவே ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இந்தக் குழுவில் உள்ளடக்கப்படவில்லை. நன்கு திட்டமிட்டு இந்தக் குழுவைத் தெரிவு செய்தது புதுடில்லி.

ஜனாதிபதியுடனான விருந்தை புறக்கணிப்பது என்று இலங்கை வரும் போது இந்தியக் குழு தீர்மானித்தது. அதுபற்றி ஊடகங்களுக்கும் அறிக்கை விட்டது. ஆயினும் இங்கு வந்து நடந்ததோ வேறு. தன்னுடன் வந்த உறுப்பினர்களை விட்டு விட்டு தனியே போய் ஜனாதிபதியுடன் உண்டு மகிழ்ந்திருக்கிறார் சுஷ்மா சுவராஜ். தமது பயணத்தின்போது தமிழர் தரப்பினால் கூறப்பட்ட பிரச்சினைகள் எதனையும் ஜனாதிபதியுடனான சந்திப்பில் அவர் வெளியிட்டதாகத் தெரியவில்லை. சாட்டுக்கு அரசியல் தீர்வை விரைவுபடுத்துங்கள். அதற்கான சாதக சமிக்ஞையை வெளியிடுங்கள் என்று மட்டும் ஜனாதிபதியிடம் அவர் கூறியிருக்கிறார். பதிலுக்கு ஜனாதிபதியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தெரிவுக் குழுவுக்கு வருமாறு இந்தியா வற்புறுத்த வேண்டும் என சுஷ்மாவிடம் தெரிவித்திருக்கிறார். அதற்குப் பதிலளித்த சுஷ்மா அதுபற்றி கூட்டமைப்பிடம் பேசிப் பார்க்கிறேன் என்று கூறியிருக்கிறார். ஜனாதிபதியுடனான சந்திப்பில் நடந்தது இவ்வளவும்தான்.

இந்திய மத்திய அரசின் இந்த ஏமாற்று நாடகம் இன்னும் முடிந்ததாக இல்லை. அதற்கு இந்திய நாடாளுமன்ற குழுவின் இந்தப் பயணம் ஒரு சிறந்த உதாரணம். மீண்டும் மீண்டும் ஈழத் தமிழர்களை ஏமாற்றும் தனது கைங்கரியத்தைச் செவ்வனவே செய்து கொண்டிருக்கிறது புதுடில்லி. புதுடில்லியை நம்பி ஈழத் தமிழர்களும் தொடர்ந்து ஏமாந்து கொண்டே போகிறார்கள். நொந்து நூலாகிப் போயிருக்கும் ஈழத் தமிழினத்தின் வேதனையையும் கண்ணீரையும் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இந்தியா ஆடும் இந்தக் கபட அரசியல் நாடகத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய தேவையும் தருணமும் இப்போது வந்திருக்கிறது. அதனை ஈழத் தமிழர் அரசியல் தலைமைகள் சரியாகப் புரிந்து கொண்டால் நல்லது. *



இந்திய மத்திய அரசு இந்த ஏமாற்று நாடகம் இன்னும் முடிந்ததாக இல்லை. அதற்கு இந்திய நாடாளுமன்ற குழுவின் இந்தப் பயணம் ஒரு சிறந்த உதாரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைப்படாதே சகோதரா!

வாழ்க்கையில் முன்னேற விரும்புகிறவர்கள் பிறர் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் இதற்கும் ஓர் எல்லை இருக்கிறது. அந்த எல்லையைத் துல்லியமாக அடையாளம் கண்டு கொண்டவர்கள் மட்டுமே பிறரால் பாதிக்கப்படாமல் மகிழ்ச்சியாக இருக்க முடியும். நினைத்த வெற்றிகளைக் குவிக்க முடியும். அளவுக்கு மீறிப் பிறரது விமர்சனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தால் குழப்பம் வரும். முன்னேற்றம் தடைப்படும்.

நமது தோற்றம், நாம் உடுத்திருக்கும் துணிகள், தலை அலங்காரம், பயன்படுத்தும் பொருள்கள், தனித்திறன்கள் இவற்றைப் பிறர் பாராட்ட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எல்லோருக்குமே இருக்கும். அதிலும் இளைய தலைமுறைக்குச் சற்று அதிகமாகவே இருக்கும். ஆனால் அது நடக்கவில்லை என்றால் தளர்ந்து போவதோ, முகமும் அகமும் வாடுவதோ சரிதானா? பாராட்டா விட்டாலும் பரவாயில்லை. பிறர் கேலி பேசிவிட்டால் தளர்ந்து போவது இளைய தலைமுறைக்குரிய இயல்பான விடயம். இதிலிருந்து வெளியே வாருங்கள் .

நம் மீது அக்கறையுடன் விமர்சிப்பவர்கள் விமர்சனத்தை மதிக்கலாம். ஆனால் எல்லோருடைய விமர்சனங்களையும் பொருட்படுத்த வேண்டியதில்லை. இந்த அணுகுமுறை நமது வெற்றி மாளிகையின் முக்கியமான படிக்கட்டு.

முற்றும் துறந்து முனிவராகப் போனால் கூட முட்டாள் உலகம் அவரை விடுவதில்லை. குறை சொல்லும் ...கேலி பேசும்... ஓர் உதாரணம் :

பட்டினத்தார் எத்தனை பெரிய துறவி? கோடிக்கணக்கான சொத்தை அப்படியே விட்டுவிட்டு வெளியேறிய கடும் துறவி. சோற்றாசை கூட இல்லாத சுத்தமான சந்நியாசி. அவரையே உலகம் என்ன பாடுபடுத்தியது தெரியுமா?

ஒருநாள் நடந்த களைப்பால் வயலில் படுத்திருந்தார் பட்டினத்தார். அறுவடை நடந்திருந்த வயல் அது. குச்சி குச்சியாய்ப் பூமியில் இருந்து கிளம்பி அறுபடாதிருந்த வைக்கோல் அவர் உடம்பில் குத்திக் கொண்டிருந்தது. அதைச் சட்டை செய்யாமல் படுத்திருந்தார். இருக்கும் போதே இறந்துபோனவர் போன்று இருந்தார்.

அந்த வழியாகப் போன இரண்டு பெண்கள் வரம்பு வழியாக நடந்து போக முடியாதபடி பட்டினத்தார் வரம்பு மீது தலைவைத்துப் படுத்திருந்தார். ஒருத்தி, ''யாரோ மகான்'' என்று அவரை வணங்கி வரம்பிலிருந்து இறங்கி நடந்தாள். மற்றொருத்தியோ, ''ஆமாம்...ஆமாம்...இவர் பெரிய சாமியாராக்கும்...தலையணை வைத்துத் தூங்குகிற சுகம் மாதிரி வரம்பு மேல் தலை வைத்துத் தூங்குகிறான் பார்... ஆசை பிடித்தவர்'' என்று கடுஞ்சொல் வீசினாள். அவர்கள் அங்கிருந்து போனதும் எழுந்து உட்கார்ந்த பட்டினத்தார், ''ஆஹா... நமக்கு இந்த அறிவு இது நாள்வரை இல்லையே'' என்று வருந்தி வரம்பிலிருந்து தலையைக் கீழே வைத்துப் படுத்தார்.

சற்று நேரத்தில் அந்த இரண்டு பெண்களும் அதே வழியாகத் திரும்பி வந்தனர். வரம்பிலிருந்து தலையைக் கீழே இறக்கி வைத்திருந்த பட்டினத்தாரைப் பார்த்து முதல் பெண் பரிதாபப்பட்டு, ''பார்த்தாயா நீ சொன்னதைக் கேட்டு உடனே கீழே இறங்கிப் படுத்துவிட்டார்...இப்போதாவது ஒத்துக் கொள்... இவர் மகான்தானே'' என்றாள்.

அவளோ, ''அடி போடி இவரெல்லாம் ஒரு சாமியாரா? தன்னைப் பற்றி யார் யார் என்ன என்ன பேசுகிறார்கள் என்று ஒட்டுக் கேட்கிறான்...அதைப் பற்றிக் கவலைப்படுகிறான். இவனெல்லாம் ஒரு சாமியாரா?'' என்று ஒரு வெட்டு வெட்டினாள். பட்டினத்தாருக்குத் தலை சுற்றியது.

எப்படி இருந்தாலும் உலகம் நம்மை விமர்சிக்கும். இது பேருண்மை.தரமானவர்களின் தரமான விமர்சனத்தை மதிக்க வேண்டும். விமர்சிக்க வேண்டும் என்கின்ற வெறியுடன் விமர்சிப்பவர்களின் விமர்சனத்தைப் புறக்கணியுங்கள். வெற்றி நிச்சயம்.



சுகி.சிவம்

# தமிழ் மன்னர்களால் அமைக்கப்பட்ட திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்மன்



கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த தமிழ் மன்னர்களால் அமைக்கப்பட்ட ஆலயங்களில் இந்த ஆலயமும் ஒன்று எனக் கூறப்படுகின்றது.

திருநெல்வேலி சிவன் வீதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம் யாழ்ப்பாண மன்னர்களால் அமைக்கப்பட்ட ஆலயங்களில் இன்றும் நல்ல நிலையில் மக்களால் பேணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. ஒரு சமயம் வயோதிபப் பெண் ஒருவர் இந்தப் பகுதியில் உள்ள மக்களிடம் நான் மதுரையில் இருந்து வந்துள்ளேன். இனி இங்குதான் இருக்கப் போகின்றேன் எனக் கூறியபடி அங்கு இருந்தவர்களிடம் கஞ்சிவாங்கிக் குடித்த பின் அருகில் இருந்த வேம்பு மரத்தின் கீழ் அமர்ந்திருந்தாராம். சிறிது நேரத்தில் அவர் திடீரென மறைந்து விட்டாராம் அந்த இடம் அந்தப்பகுதி மக்களுக்கும் வழிப்போக்கர்களுக்கும் மறக்க முடியாத அம்பாளின் அற்புதம் நிகழ்ந்த இடமாகவும் தென்பட்டதாம். இதனைத் தொடர்ந்து அவரின் சக்தியை வியந்தபடி அதே இடத்தில் அம்பாளுக்கு ஆலயம் ஒன்றை அமைக்க முன்வந்தனர்.

அதன்படி குறிப்பிட்ட வேப்ப மரத்தின் கீழ் பனை ஓலையால் வேயப்பட்ட சிறிய கோயிலை அமைத்து வழிபட்டு வந்தனர். காலம் காலமாக கோயில் பூசைகளும் இடம் பெற்று வந்துள்ளது. ஓலைக் கொட்டிலாக ஆரம்பிக்கப்பட்ட ஆலயம் பின்னர் தமிழ் மன்னர்களது ஆட்சிக் காலத்தில் செங்கற்களைக் கொண்ட ஆலயமாக விஸ்தரிக்கப்பட்டது.

ஆலயத்தின் பூசை வழிபாடுகள் ஆரம்ப காலம் தொட்டு நல்ல முறையில் இடம் பெற்று வந்ததாகவும் விவரம் அறிந்த பெரியோர்கள் கூறக் கேட்டதுண்டு.

> வயோதிபப் பெண் ஒருவர் இந்தப் பகுதியில் உள்ள மக்களிடம் நான் மதுரையில் இருந்து வந்துள்ளேன். இனி இங்கு தான் இருக்கப் போகின்றேன் எனக் கூறியபடி அங்கு இருந்தவர்களிடம் கஞ்சிவாங்கிக் குடித்தபின் மறைந்து போனார்.

படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்து கொண்டிருந்த முத்துமாரி அம்பாள் ஆலயத்தை அந்தண சிவாச்சாரியார்களான சிற்றம்பலம் முருகேசன் கந்தையா ஆகியோர் சிறப்பாக பராமரித்து பூசைகளை நடத்தி வந்ததாகவும் அதன் பின்னர் சிவஸ்ரீ சிவலோகநாதக் குருக்களின் நிர்வாகத்தில் ஆலயம் இருந்த சமயம் சிமெந்துக் கட்டடமாக அது புனரமைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. அவரது காலத்திலேயே மூலவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள கருவறையாகிய கர்ப்பக் கிரகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், தரிசன மண்டபம், ஸ்தம்ப மண்டபம் யாவும் ஒருங்கே அமைக்கப்பட்டு அழகுறக் கட்டப்பட்டது.

அவற்றுடன் உட்பிரகாரக் கோயில்களாக பிள்ளையார், துர்க்கை அம்மன், நாகபூஷணி, வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர், சந்தானகோபாலர் சனீஸ்வரன், வைரவர் சண்டேஸ்வரி ஆகிய பரிவார மூர்த்திகளுக்கும் தனித்தனி ஆலயங்கள் உள்வீதியில் அமைக்கப்பட்டுள்ளதுடன் பதி, பசு, பாசத்தை எடுத்துக்காட்டும் வகையில் சமய நெறிகளுக்கமைய ஆகம விதிப்படி கொடிமரம் நந்தி பலிபீடம் எல்லாமுமே அமைந்துள்ளதாக ஆலயத்தை நிர்வகிக்கும் சிவஸ்ரீ சி.கிருபாகரக் குருக்கள் தெரிவித்தார். பூசைகளை சகோதரர் சிவஸ்ரீ ராஜேந்திரக்குருக்கள் பொறுப்பாக கவனிப்பதாகவும் ஆலய பரிபாலனம் சிறப்பாக இடம்பெறுவதாகவும் வழிபடும் மக்கள் திருப்தி தெரிவிக்கின்றனர்.

சிவஸ்ரீ சிவலோகநாதக்குருக்கள் காலத்தில் இருந்து அவரது பிள்ளைகள் பாலசுப்பிரமணியக் குருக்கள், தேவராஜா ஐயா,இராஜேந்திரக்குருக்கள், கிருபாகரக்குருக்கள் ஆகியோர் ஆலயப்பணிகளில் ஈடுபட்டு வந்தனர். 1992 இல் நிர்வாகப் பொறுப்புக்களைக் கிருபாகரக் குருக்கள் ஏற்றுக் கொண்டார். மீண்டும் ஆலயப் புனரமைப்புக்கள் இடம்பெற்று கும்பாபிஷேகமும் நடத்தப்பட்டது.

1987 இல் தர்மகர்த்தாவாக இருந்து சிறப்பான இறைபணியை முன்னெடுத்த சிவலோக நாதக் குருக்கள் அமரத்துவம் பெற்றதை அடுத்து அவரது பிள்ளைகள் தந்தையாரின் பணியை தடங்கலின்றித் தொடர்ந்தனர்.

இவர்களது முயற்சியால் (1994 இல் உருவாக்கப்பட்ட இரண்டு சித்திரத் தேர்களும் 2002 ஆம் ஆண்டில் இராஜகோபுர திருப்பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதுடன்) தெய்வங்களின் உருவங்களும் ஆலயத்தில் பொருத்தமான இடங்களில் வரையப்பட்டு அடியார்களின் உள்ளத்தில் பக்தி நெறியை வளர்க்கவும் அக்கறை காண்பிக்கப்பட்டுள்ளன.

சித்திரை மாதத்தில் வரும் பூர நட்சத்திரத்தன்று மகா கும்பாபிஷேகம் இடம்பெற்ற நாளில் சகஸ்ர சங்காபிஷேகம், திருவூஞ்சல் தண்டிகை உற்சவங்களும் சித்திரை பௌர்ணமி நாளன்று சுமங்கலி திருவிளக்குப் பூசைகள் மற்றும் ஒவ்வொரு பூர நட்சத்திரத்தின் போதும் விசேட அபிஷேகம் அம்பாள் வீதியுலா என்பன சிறப்பு அம்சங்களாக இடம் பெறுகின்றன.

வைகாசி விசாகத்தின் போது அதிகாலை முதல் விசேட பொங்கல் விழா இடம் பெறுகின்றது. அன்றைய தினம் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கூடும் பக்தர்கள் பொங்கல் செய்வதில் ஆர்வம் செலுத்துவதைக் காணலாம். தீ மிதிப்பும் இடம் பெறும். வருடாந்த மகோற்சவம் ஆனி மாதத்தில் ஆரம்பமாகும்.

உற்சவத்தின் ஒன்பதாம் நாள் தேர் உற்சவம் இடம்பெறும் முத்துமாரி அம்பாள் தேரேறி வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கும் காட்சியைக் காண்பதற்கு உள்ளூரில் மட்டுமன்றி வெளிநாடுகளில் வதியும் புலம்பெயர்ந்த மக்களும் அதிகளவில் கூடுகின்றனர். ஆனி உத்தரத்தில் தீர்த்தத் திருவிழா நடைபெறுகின்றது.

ஒவ்வொரு மாதத்திலும் காணப்படும் விசேட தினங்களில் சிறப்பு பூசைகள் இங்கே இடம் பெறுவதால் அடியார்கள் கூட்டத்தைத் தினமும் அங்கே காணமுடிகின்றது.

எமது பண்பாட்டின் நிலைகளாக கலைவளர்க்கும் கோயில்களாக பண்டைக்காலம் முதலே ஆலயங்கள் விளங்கி வந்தன. இந்துக்களின் வாழ்க்கை நெறிகளுக்குக் காரணமாக உள்ள இவற்றினூடாக மக்கள் தமக்கு சுபீட்சமான வாழ்வு கிடைக்க இறையருளை வேண்டுகிறார்கள். திருநெல்வேலியும் அதைச் சார்ந்து காணப்படும் கிராம மக்களும் அருள்மிகு முத்துமாரி அம்மனின் நல்லாசியும் அருளாட்சியையும் கிடைக்கப்பெற்றதில் மகிழ்ச்சியுடன் அம்பாளது பாதங்களைத் தொழுகின்றனர். ✱

■ லக்ஸ்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு பல்கலை விருத்திக்கு இந்தியாவின் உதவி கிடைக்கும்

### சுதர்சன நாச்சியப்பன் எம்.பி. உறுதிமொழி

எருவில்,ஏப்.24

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப் படும் என்று இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நர்ச்சியப்பன் உறுதியளித்துள்ளனர் என்று துணைவேந்தர் கிட்ணன் கோவிந்தராஜா தெரிவித்தார்.

மட்டக்களப்பு வந்தாறுமூலைக்கு வருகை தந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பனுடன் தான் நடத்திய கலந்துரையாடலிலேயே இந்த உறுதிமொழியை அவர் வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரால் பல்வேறு வழிகளிலும் கிழக்குப் பல்கலைக்கழகம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் அரசால் ஒதுக்கப்படும் நிதி பல்கலைகழகத்தின் அபிவிருத்திக்குப் பொதுமானதாக இல்லை. ஆகவே அபிவிருத்திகளை மேற்கொள்வதற்குரிய நிதி வசதிகளை இந்தியா ஏற்படுத்தித் தர வேண்டும்.

**அரசால் ஒதுக்கப்படும் நிதி பல்கலை கழகத்தின் அபிவிருத்திக்குப் போதுமானதாக இல்லை. இதனால் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்குரிய நிதி வசதிகளை இந்தியா ஏற்படுத்தித்தர வேண்டும்.**

கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரேயொரு அழகியல் கற்கைப்பிரிவான கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விபுலானந்தர் இசைநடனக் கல்லூரியை அபிவிருத்தி செய்வதற்கும், அதன் தரத்தை உயர்த்துவதற்கும் ஏற்பாடுகள் செய்து தரவேண்டும்.

இந்தக் கற்கைப் பிரிவை இந்தியாவிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றுடன் இணைத்தல், புதிய கற்கைப் பிரிவுகளை ஆரம்பித்தல், ஆசிரிய வளப்பங்கீடு, கிழக்கில் உள்ள மாணவர்களுக்கு இந்தியாவில் பயிற்சிகளை வழங்குதல் போன்றவற்றுக்கான ஏற்பாடுகளை செய்து தரவேண்டும் என்று சுதர்சன நாச்சியப்பனிடம் கோரிக்கை விடுத்துள்ளேன்.

அதற்குப் பதிலளித்த அவர், இந்த விடயங்கள் தொடர்பான அறிக்கையைத் தனக்கு மிக விரைவாக கையளிக்குமாறும், அதன் பிரதியை இந்தியத் தூதருக்கும் கையளிக்குமாறும் தெரிவித்துள்ளார். இந்தக் கோரிக்கைகளைத் தான் உடனடியாக நிவர்த்தி செய்து தருவதாகவும் உறுதியளித்துள்ளார். இலங்கைக்கு வந்த இந்திய நாடாளுமன்றக் குழு கிழக்கு மாகாணத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-31)

## பாடசாலை நீர்த் தாங்கிகளை சுத்தப்படுத்துமாறு அறிவிப்பு

லிந்துலை,ஏப்.24

அனைத்து தமிழ், சிங்கள அரச பாடசாலைகளும் இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக நேற்று ஆரம்பிக்கப்பட்ட நிலையில் லிந்துலை பிரதேசத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளினதும் நீர்த் தாங்கிகளைச் சுத்தப்படுத்துமாறு நுவரெலியா மாவட்ட செயலாளர் டி.பி.ஜி.குமாரசிறி கேட்டுக் கொண்டுள்ளார்.

நீர்த் தாங்கியை சுத்தப்படுத்துவதற்கான அனுமதியை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியிடம் பெற்றுக் கொள்ளுமாறு லிந்துலைப் பிரதேசத்திலுள்ள அனைத்து பாடசாலை அதிபர்களிடமும் அவர் கேட்டுள்ளார்.

அண்மையில் நீர் அசுத்தமானதன் காரணமாக லிந்துலை பகுதியில் 500 இற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டனர். இதனால் பாதிக்கப்பட்டு இருவர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ச)

## கப்பம் கோரியவர் வசமாகச் சிக்கினார்

### மட்டு. நகரில் சம்பவம்

எருவில்,ஏப்.24

மட்டக்களப்பு நகரிலுள்ள வர்த்தகர் ஒருவரிடம் கடந்த ஒன்றரை மாதங்களாக கப்பம் கோரி வந்த ஒருவரை நேற்றுமுன்தினம் காலை மட்டக்களப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.


மட்டக்களப்பு, அரசடியிலுள்ள புதிய வீதியில் மரத்தளபாடம் விற்பனை செய்யும் வியாபார நிலையத்திலுள்ள அதன் உரிய மையாளர் முஸ்தபா லெவ்வை முகம்மது ரவூப் என்பவரிடம் கடந்த ஒன்றரை மாதங்களாக 5 லட்சம் ரூபாவை ஒருவர் கப்பமாகக் கோரி வந்துள்ளார்.

ஐந்து லட்சம் ரூபா தரவேண்டும் இல்லையேல் இங்கிருந்து அகன்று சென்று வேண்டும் என்று இந்த நபர் மரத்தளபாட உரிமையாளரை அச்சுறுத்தி வந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்த வியாபார நிலைய உரிமையாளர் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார். அதையடுத்து மட்டக்களப்பு பொலிஸாரும் இரகசிய பொலிஸாரும் விசாரணைகளை நடத்தி வந்தனர். இந்தநிலையில் கப்பம் கோரியவரை நேற்று முன்தினம் காலை மட்டக்களப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் ஆலோசனையின் பேரில், மட்டக்களப்பு பொலிஸ் நிலைய குற்றப்பிரிவின் விசாரணை பொறுப்பதிகாரி எஸ்.சாந்தகுமார் தலைமையில் நடைபெற்ற விசாரணைகளையடுத்து இவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ச-31)

## இராட்சத முதலை



கல்முனை,ஏப்.24

கல்முனை பிரதேசத்தில் 15 அடி நீளமுள்ள முதலை ஒன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வன பரிபாலன சபை அதிகாரிகளினால் பிடிக்கப்பட்டுள்ளது.

கல்முனை, பாண்டிருப்பு, தாளாவட்டான் சந்தியில் உள்ள பாழடைந்த கிணறு ஒன்றிலிருந்தே இந்த முதலை பிடிக்கப்பட்டுள்ளது. குறித்த கிணற்றில் முதலையைக் கண்ட பொதுமக்கள் கல்முனை பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்ததையடுத்து தொடர்ந்து பொலிஸாரின் உதவியுடன் வனபரிபாலன சபை அதிகாரிகள் முதலையைப் பிடித்து லொறியில் ஏற்றிச் சென்றனர். இந்தக் கிணறு உடைக்கப்பட்டு முதலை பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## உப தபால் நிலையத்தை அமைத்துத்தர கோரிக்கை

எருவில்,ஏப்.24

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஒலுவில் அஷ்ரப் நகர் கிராமத்துக்கு உப தபால் நிலையம் ஒன்றை அமைத் துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கிராமத்தில் சுமார் 250 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

எனினும் இந்த மக்களுக்கு என்று தபால் நிலையம் இல்லாததனால் தபால் சேவையைப் பெறுவதற்காக குறித்த கிராமத்திலிருந்து பிரதான வீதிக்கு நடந்து சென்று மக்கள் தங்களின் தபால் சேவையை நிறைவு செய்து கொள்கின்றனர்

எனவே இந்தக் கிராமத்துக்கு உப தபால் நிலையம் ஒன்றை அமைத்துத் தருமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-31)

## 345 மேம்பாட்டு திட்டங்களுக்கு அபிவிருத்திக் குழு அங்கீகாரம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று திங்கட்கிழமை காலை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. கூட்டத்தில் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள 345 கிராமிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு மாவட்ட அபிவிருத்திக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்நோக்கப்படும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், பொன்.செல்வராசா, சீ.யோகேஸ்வரன் என பலர் கலந்துகொண்டனர். (ச)

## மின்னல் தாக்கி இளைஞன் சாவு

திருகோணமலை,ஏப்.24

திருகோணமலை கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மீனவர்களில் ஒருவர் மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை திருகோணமலை - ஸ்ரீமாபுர பகுதியைச் சேர்ந்த சிலருடன் இந்த நபரும் மீன்பிடிக்கச் சென்ற வேளையில் இடம்பெற்றுள்ளது. இந்த நபர் மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் லக்மால் (வயது-24) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். (ச)

## வாய்க்காலில் குளித்தவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

மட்டக்களப்பு,ஏப்.23

அம்பாறை, நாவிதன்வெளி பிரதேசத்தில் வாய்க்காலில் குளிக்கச் சென்ற சலவைத் தொழிலாளி ஒருவர் தண்ணீரில் இழுத்துச் செல்லப்பட்டு மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக சவளக்கடைபொலிஸார் தெரிவித்தனர்.

தொழில் முடித்து வரும் வழியில் நாவிதன்வெளி வைக்கோல் தொழிற்சாலைச் சந்தியிலுள்ள வாய்க்காலில் நீராடியபோதே இந்தப் பரிதாபச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நாவிதன்வெளி, முதலாம் பிரிவைச் சேர்ந்த முருகன் கந்தையா (வயது- 58) என்ற தொழிலாளியே உயிலிழந்தவர் ஆவார்.

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை சவளக்கடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-25-31)

## மதுபானசாலையை எதிர்த்து குடாகம மக்கள் ஆர்ப்பாட்டம்




நுவரெலியா,ஏப்.24

பத்தனை - திம்புள்ள பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொட்டகலை - குடாகம பகுதியில் புதிதாக திறக்கப்படவிருக்கும் மதுபான சாலைக்கு எதிராக குடாகமை பிரதேச மக்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் வசிக்கும் மக்கள் ஈடுபட்டனர்.

பிரதான வீதியின் ஒரு பக்கத்தில் நின்ற மக்கள் தமது எதிர்ப்பை தெரிவித்தனர். அதைத் தொடர்ந்து அப்பகுதியில் அமைந்துள்ள மதுபான தீர்வை ஸ்தாபனத்துக்குச் சென்ற மக்கள் மனு ஒன்றையும் கையளித்தனர். எமது பிரதேசத்தின் சுமுகமான வாழ்க்கை நிலையை இந்த மதுபான விற்பனைச்சாலை சீர்குலைத்துவிடும் என்பதால் தமது கோரிக்கையை நிறைவேற்று மாறும், தவறினால் ஆர்ப் பாட்டம் மீண்டும் தொடரும் என்றும் மக்கள் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** மனம்தெளிவு பெறும். தெய்வீக விடயங்களில் நாட்டம் அதிகரிக்கும். இல்லறத் துணையின் கருத்துக்களில் தங்களுக்கு உடன்பாடு இல்லை என்றபோதும், ஏற்றுக்கொள்ளக் கூடிய சூழ்நிலையே ஏற்படும். அலுவலகப் பணிகளில் வேலைச் சுமை கூடும். எதிர்பார்த்த வரவுகள் தாமதமாகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதில் சிரமம் உண்டு.

**இடபம்:** உற்சாகம் கூடும். மனதில் நிலவும் குழப்பங்களுக்குத் தீர்வு காண்பீர்கள். தங்களை விமர்சனம் செய்தவர்களே பாராட்டும்படியான செயற்களை மேற்கொள்வீர்கள். பூர்வீகச் சொத்து தொடர்பான பிரச்சினைகளில் நல்ல முடிவை எட்டலாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெறுவீர்கள்.

**மிதுனம்:** இனிய சந்திப்புகளால் மன மகிழ்ச்சி கொள்வீர்கள். எதிர்பார்த்த பண வரவுகள் வரும். குழந்தைகளுக்காகச் செலவுகள் இருக்கும். உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் மாறும். அலுவலகப் பணிகளில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நீண்டநாள் எண்ணம் ஒன்று இன்று மாலை நேரத்தில் நிறைவேறும்.

**கடகம்:** எதிலும் கொஞ்சம் எச்சரிக்கையாகச் செயற்பட்டால் சாதனை படைக்கலாம். நெருங்கிப் பழகியவர்களிடம் வாக்குவாதங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். உறவினர் ஒருவரிடம் வாக்கு கொடுத்ததற்காக சிரமத்தோடு பணச் செலவுகளையும் மேற்கொள்ள வேண்டி இருக்கும்.

**சிங்கம்:** நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளில் தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். வீண் செலவுகள் கூடினாலும், வரவுகளால் அதைச் சமாளிப்பீர்கள். தொழில் சார்ந்த நடவடிக்கைகளில் தீவிரம் காட்டுவீர்கள். குடும்ப காரியம் ஒன்றைச் செய்ய மறந்து, அதிருப்திக்கு ஆளாவீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகளால் பாராட்டுக் கிடைக்கும்.

**கன்னி:** பிறர் யோசனை கேட்டு நடப்பதால் வீண் அலைச்சலைச் சந்திக்க நேரிடும். ஆடை, அலங்காரப் பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். தெய்வ வழிபாட்டில் திருப்தி காண்பீர்கள். தொழில் ரீதியான பயணம் மேற்கொள்வீர்கள். எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான திட்டங்களைப் பற்றிய சிந்தனை அதிகமாக இருக்கும்.

**நாளை**

சித்திரை 14 புதன்கிழமை 25.04.2012
திதி: சதுர்த்தி மு.இ. 08.44 வரை
நட்சத்திரம்: ரோகிணி கா.08.07 வரை
சுபநேரம்: 04.29- 05.59 வரை
ராகு காலம்: 11.59- 01.29 வரை

**துலாம்:** உங்களின் வீண் பேச்சுக்கள் மற்றும் வாக்குவாதங்களால், நல்ல வாய்ப்புகளைத் தவறவிட நேரிடலாம். சற்று யோசித்துச் செயற்படுங்கள். குடும்பத்தில் எதற்கெடுத்தாலும் குற்றம் காணும்போக்கு அதிகம் இருக்கும். கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள். வியாபாரத்தில் சற்று மந்தமான சூழ்நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்த காரியங்கள் அதற்கு நேர்மாறாக நடந்து அதிருப்தி அளிக்கலாம். சில காரியங்கள் தேவைதானா என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே, அதைச்செய்து முடிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். தொழிலில் அலைச்சல் கூடுதலாகும். வாகனங்களில் செல்லும்போது கவனம் இருக்கட்டும்.

**தனுசு:** எதிர்பார்ப்புகள் ஏமாற்றம் தந்த போதும், எதிர்பாராத உதவிகள் பயனுள்ளதாக இருக்கும். நண்பர் ஒருவரின் சந்திப்பு மனக் குழப்பத்துக்குத் தீர்வுகாண வைக்கும். பணி மற்றும் தொழில் சம்பந்தமான புதிய முயற்சிகள் வெற்றி தரும். பயணங்களால் மனநிறைவு ஏற்படும்.

**மகரம்:** சகோதரர்களால் உருவான பிரச்சினைகளைத் தீர்க்க முற்படுவீர்கள். நண்பர் ஒருவருக்காக நன்மை என்று நீங்கள் கருதிய செயல் அவருக்குப் பாதகமாக முடியும். விருந்து விசேடங்களில் பங்கேற்று அளவளாவி மகிழ்வீர்கள். ஆடை, ஆபரணங்கள் வாங்குவதாலும், வெளியூர் பயணங்களாலும் செலவுகள் இருக்கும்.

**கும்பம்:** பால்ய நண்பர்கள் உதவுவார்கள். பணப்பற்றாக் குறையை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினை தீரும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மீனம்:** பல்வேறான சிந்தனைகள் மனதில் நிலவும். திட்டமிட்டுச் செயற்படுங்கள். பணம் பல வழிகளிலும் வரும். எடுத்த வேலைகளில் எதிர்பாராத வெற்றி கிட்டும். உங்களின் முன்னேற்றங்களுக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். குழந்தைகளின் கல்விக்காக மேற்கொண்ட முயற்சிகளில் நல்ல பலன் காணலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | 8 | | | 1 | 3 |
| 1 | | | | | | | | |
| 3 | 8 | | 9 | 4 | | | | 6 |
| 7 | 1 | 9 | | 3 | 6 | | | 8 |
| | | 3 | 8 | | 4 | 9 | | |
| 5 | | | 2 | 1 | | 6 | 3 | 7 |
| 6 | | | | 5 | 7 | | 8 | 2 |
| | | | | | | | | 4 |
| 4 | 3 | | | 6 | | | | 9 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 7 | 1 | 8 | 2 | 9 | 4 | 3 |
| 8 | 4 | 9 | 5 | 3 | 6 | 7 | 2 | 1 |
| 3 | 1 | 2 | 7 | 4 | 9 | 6 | 5 | 8 |
| 9 | 6 | 1 | 3 | 2 | 8 | 4 | 7 | 5 |
| 2 | 7 | 5 | 9 | 1 | 4 | 8 | 3 | 6 |
| 4 | 3 | 8 | 6 | 7 | 5 | 2 | 1 | 9 |
| 5 | 8 | 3 | 4 | 9 | 7 | 1 | 6 | 2 |
| 1 | 9 | 4 | 2 | 6 | 3 | 5 | 8 | 7 |
| 7 | 2 | 6 | 8 | 5 | 1 | 3 | 9 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


தங்கத் திருநாளான
அக்ஷய திருதியை தினமான இன்று
காலை 7.00 மணிமுதல்
இரவு 9.30 மணி வரை திறந்திருக்கும்



தங்கத் திருநாளான இன்று (24.04.2012) செவ்வாய்க்கிழமை எம்மிடம் தங்க நகைகளை கொள்வனவு செய்யும் அன்பார்ந்த வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சிறப்பு அன்பளிப்பு பொருள்கள் வழங்கப்படும்.

தரம், நாணயம், உத்தரவாதம் கொண்ட நகைகளை கொள்வனவு செய்ய நாட வேண்டிய ஒரே இடம்

**மைதிலி நகைமாடம்**
89 V கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7902

**யாழ்.மைதிலி ஜுவலரி**
79 Z, செட்டியார் தெரு, கொழும்பு-11
0112396239

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


# பிறந்த தின விழா





13ஆம் திகதி சித்திரை மாதம் வருடப்பிறப்பன்று சனிக்கிழமை காலையில் பிறந்தவர்களான அனலைதீவு, ஆச்சிதுணை அருளகம் ஜேர்மனி முகாமையாளர்

**திரு. ஐயம்பிள்ளை நடராசாவும்**

**துணைவி**

**திருமதி பரமேஸ்வரி நடராசாவும்**

முறையே 66ஆவது 60 ஆவது பிறந்த தினங்களை ஜேர்மனியில் இருந்து வருகை தந்து வவுனியா சிவன் முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுடனும், வவுனியா அகிலாண்டேஸ்வரி அருளக குழந்தைகளுடனும், கொண்டாடினார்கள். அனலை வாழ் பெருமக்கள், பிள்ளைகளான துஷ்யந்தன் குடும்பம் (ஜேர்மனி), ஹரிசாந்தன் குடும்பம் (ஜேர்மனி), சசிகாந்தன் குடும்பம் (ஜேர்மனி), உமாசங்கர் (ஜேர்மனி) மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் இணைந்து கொண்டாடினார்கள்.

அனலைதீவு ஆச்சிதுணை அருளகம், ஜேர்மனி,
'ஆச்சிதுணை', அனலைதீவு.

(17350) (6.9.10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ரயிலில் மோதுண்டு ஒருவர் சாவு

கொழும்பு,ஏப்.24

கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்தில் ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 9.40 மணிக்கு இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் பாதுக்கை - மிரியகல்ல பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)



தென்கொரியாவுக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினரை அந்த நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் வரவேற்கின்றனர்.

## 500 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு எதிராக

கொழும்பு,ஏப்.24

நாட்டில் உள்ள பொலிஸ் நிலையபொறுப்பதிகாரிகளுக்கு எதிராகப் பொலிஸ் முறைப்பாட்டுப் பிரிவுக்கு மாதம் ஒன்றுக்கு 500 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கின்றன என்று பொலிஸ் தலைமையகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் 140 அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் பதவி நீக்கங்கள், இடமாற்றங்கள் என்பனவும் மேற்கொள்ளப்பட்டன என்றும் அவர் கூறினார். (ச-22)

# தம்புள்ளை பள்ளிவாசல் குறித்து பிரதமரின் பொய்யான அறிக்கை

### முஸ்லிம் தலைமைகள் அதிர்ச்சி, கொதிப்பு

கொழும்பு,ஏப்.24

தம்புள்ள மஸ்ஜித்துல் ஹாய்ரா பள்ளிவாசலை அகற்றிவிட்டு வேறு இடத்தில் அதை அமைக்குமாறு உத்தரவிட்டுள்ள பிரதமர் டி.எம். ஜயரத்ன, அதற்கு முஸ்லிம் அரசியல் தலைமைகள் இணக்கம் தெரிவித்ததாக பொய்யான அறிக்கை ஒன்றை வெளியிட்டமை அம்பலத்துக்கு வந்துள்ளது.

பிரதமர் செயலக ஊடகப்பிரிவு நேற்றுமுன்தினம் வெளியிட்ட அரச முத்திரையுடன் கூடிய அறிக்கை ஒன்றில், தம்புள்ளை பள்ளிவாசலை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு முஸ்லிம் தலைமைகள் இணங்கியுள்ளன என்று கூறப்பட்டிருந்தது.

கம்பளையில் நேற்றுமுன்தினம் காலை நடந்த கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

> 65 ஆண்டுகளாக இருந்து வரும் பள்ளிவாசலை அகற்ற பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகளின் இந்த முயற்சி, முஸ்லிம் அரசியல் தலைமைகள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் பிரதமரின் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது போன்று எந்த இணக்கப்பாடும் எட்டப்படவில்லை என்று முஸ்லிம் அரசியல்வாதிகள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முழுநாளும் தான் மட்டக்களப்பில் இருந்ததாகவும், அந்தக் கூட்டத்தில் பங்கேற்கவேயில்லை என்று பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

இதேவேளை, அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு கூட்டம் எதுவும் நடக்கவில்லை. இவ்வாறான கூட்டத்தில் தானோ, மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானாவோ கலந்து கொள்ளவில்லை என்று சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசியும் தெரிவித்தார்.

பல பரம்பரைகளாக தம்புள்ளை நகரில் முஸ்லிம் மக்கள் வழிபட்டு வரும் பள்ளிவாசலை அகற்றுமாறு கோருவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் கூறியுள்ளார்.

65 ஆண்டுகளாக இருந்து வரும் பள்ளிவாசலை அகற்ற பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகளின் இந்த முயற்சி, முஸ்லிம் அரசியல் தலைமைகள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரும், அரசும் பௌத்த பேரினவாத சக்திகளுடன் இணைந்து முஸ்லிம்களின் உரிமைகளைப் பறிப்பதாக கருதவேண்டியுள்ளது என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு ஆதரவாக நின்ற முஸ்லிம் நாடுகள் மத்தியிலும் இந்த விவகாரம் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு முஸ்லிம் நாடுகளின் தயவில் தான் தமக்குச் சார்பாக 15 வாக்குகளைப் பெற முடிந்தது. இதற்கு முஸ்லிம் அரசியல் தலைமைகள் கடுமையாக உழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(ச)

## கனத்தை மயானத்தில் ரகசியமாக சடலம் எரிப்பு

### வெள்ளை வான்களில் வந்தோர் கைவரிசை

கொழும்பு,ஏப்.24

பொறளை கனத்தை மயானத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் இரகசியமான முறையில் இனந்தெரியாத சிலர் சடலம் ஒன்றை எரித்துவிட்டுச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக லங்கா நியூஸ்வெப் இணையத்தளம் வெளியிட்டுள்ள தகவலில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

வழக்கமாக பொறளை கனத்தை மயானத்தில் இரவு 7 மணிக்குப் பின்னர் சடலங்களை எரிக்கும் பணிகள் இடம்பெறுவதில்லை. நேற்றுமுன்தினம் அதிகாலை சடலம் எரிக்கும் பணி இடம்பெற்றபோது மயானப் பகுதியில் இரண்டு ஜீப்களும், வெள்ளைவான்களும் நின்றதாக, அயலில் உள்ள ஒருவர் பொறளை பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து தாம் 1.40 மணிக்கு பொறளை பொலிஸாரிடம் முறையிட்டதாகவும், ஆனால், அந்த வாகனங்கள் அவ்விடத்திலிருந்து செல்லும் வரை பொலிஸார் அங்கு வரவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

பொறளை கனத்தையில் காணப்பட்டவர்கள் சாதாரண உடை அணிந்திருந்தனர் எனவும், ஆனால் அவர்களின் நடவடிக்கைகள் படையினரைப் போன்று காணப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். பொறளை பொலிஸ் அதிகாரி ஒருவர் இந்த முறைப்பாடு கிடைத்துள்ளதை ஒப்புக் கொண்டுள்ளார்.

கொழும்பு மாநகரசபையின் மேற்பார்வையில் இயங்கும் கனத்தை மயானம், இரவு 7 மணிக்குப் பின்னர் இயங்குவதில்லை. அதன் பின்னர் மயானத்தின் சாவி பிரதம பாதுகாப்பு அதிகாரியிடம் ஒப்படைக்கப்படும் என்று கொழும்பு மாநகரசபை அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார். கனத்தையில் நேற்று அதிகாலை சடலம் எரிக்கும் நடவடிக்கை இடம்பெற்றது பற்றி எந்த அறிக்கையும் கிடைக்கவில்லை என்று அவர் கூறியுள்ளார்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1988,1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பி. தலைவர் றோகண விஜேவீர உள்ளிட்ட பலரின் சடலங்கள் நள்ளிரவு நேரங்களிலேயே இரகசியமாக கனத்தை மயானத்தில் எரிக்கப்பட்டன. (ச)

## நீரிறைக்கும் இயந்திரங்களைத் திருடியவர் கைது

கொழும்பு,ஏப்.24

நீரிறைக்கும் இயந்திரத்தைத் திருடிய குற்றச்சாட்டில் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 13 நீரிறைக்கும் இயந்திரங்களைக் கைப்பற்றியுள்ளதாகவும் நீர் கொழும்பு பொலிஸ் விசேட குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி ஜகத் நிசாந்த தெரிவித்தார்.

சந்தேகநபர் வீடு ஒன்றில் நீரிறைக்கும் இயந்திரத்தை திருடியபோது பிடிபட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்தச் சந்தேகநபர் போதைப் பொருள் பழக்கத்துக்கு அடிமையானவர். இந்த நபர் பாடசாலை மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் போதைப் பொருளை விற்பனை செய்து வந்துள்ளதாக விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். சந்தேக நபர் பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## தபால் மூலம் போதைப்பொருள்: நடிகை ஏஞ்சலாவிடம் விசாரணை

கொழும்பு,ஏப்.24

நடிகை ஏஞ்சலா செனவிரத்னவின் பெயருக்கு போதைப்பொருள் அடங்கிய தபால் பொதியொன்று அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக அவரிடம் பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினர் வாக்கு மூலம் பெற்றுள்ளனர்.

அவரிடம் நான்கு மணித்தியாலங்கள் விசாரணை நடைபெற்றதாக பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவு வட்டாரம் தெரிவித்துள்ளது. அவரின் கையெழுத்து மாதிரிகளையும் அதிகாரிகள் பெற்றுள்ளனர்.

போதைப்பொருள் அடங்கிய தபால் பொதியில் குறிப்பிடப்பட்டிருந்த முகவரியிலுள்ள கொழும்புப் பிட்டி வீட்டில் தானும் தனது குடும்பத்தினரும் 7 வருடங்களுக்கு முன்னர் வசித்ததாக ஏஞ்சலா செனவிரத்ன தெரிவித்தார்.

இந்தப் பொதியை பெற்றுக்கொள்வதற்காக மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்திற்குச் சென்ற வெளிநாட்டு நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார். அங்கிருந்து தப்பியோடிய மற்றொரு வெளிநாட்டு நபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பொதியை பெறுவதற்கு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்துக்குச் சென்ற நபர்கள் சமர்ப்பித்த, தன்னால் வழங்கப்பட்டதாக கூறப்படும் கடிதத்தில் இருந்த கையெழுத்து போலியானது என்று அதிகாரிகளால் தீர்மானிக்கப்பட்டதாக [illegible] விரத்ன தெரிவித்தார். (ச)

## மதங்களுக்கு இடையில் அரசு முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சி

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.24

நாட்டில் மதங்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்த அரசு முயற்சித்து வருவதாக ஜே.வி.பி கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அரசியல் நோக்கங்க ளுக்காக சிலர் மேற் கொண்டு வரும் முயற்சிகளுக்கு மக் கள் ஒத்துழைப்பு வழங்கக் கூடாது என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

தம்புள்ளை பள்ளிவாசல் மீதான தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் புனிதப் போர் வெடிக்க மக்கள் காரணமாக அமைந்துவிடக் கூடாது . இனவாதப் போரால் நாடு மூன்று தசாப்த காலமாக எதிர்நோக்கிய துன்ப, துயரங்கள் போதுமானவை என்று அவர் கூறினார்.



பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை விடுத்து அரசும் அதன் அமைச்சர்களும் பிரச்சினையை மேலும் தூண்டும் வகையில் செயற்படுகின்றமை வருத்தமளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
21★ 01★ 1942

மறைவு
16★ 05★ 2010

அமரர்
**நடராசா சண்முகராசா**
திதி:- திருதியை

விண்ணில் நிலவு இல்லாத
நாள்கள் உண்டு....!
மண்ணில் மழை பொழியாத
காலமும் உண்டு....!
ஆனால் எம்முள்
உங்கள் நினைவுகள் இல்லாத நொடிகள் இல்லை
ஓம் சாந்தி

**தினம் தினம் உங்கள் துயரத்தால் வாடும்:**
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

தகவல்: சிறிதரன் (மருமகன்),
மதவடி லேன், கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (17341) (2-6-9)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்....



மலர்வு
16★ 08★ 1990

உதிர்வு
05★ 05★ 2011

திதி:- பூர்வபட்ச
திருதியை
(24.04.2012)

**அமரர் செல்வி கிருத்திகா நடராசா**

நிஜம் ஒன்று நிழலாகி
ஆண்டு ஒன்று ஆனதோ?
ஆறவில்லை எங்கள் மனது
உங்கள் அழகான முகமும்,
அமைதியான, அன்பான பேச்சும்,
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
என்றும் எங்கள் நினைவுகளில் நிலைத்து நிற்கும்.

கச்சாய் தெற்கு,
கொடிகாமம். (ஓ/1025) (2-6-9)
மீளாத்துயருடனே....
- குடும்பத்தினர்.

## அந்தியேட்டி அழைப்பு



தோற்றம்
17★ 02★ 1936

மறைவு
25★ 03★ 2012

**அமரர் சின்னையா பத்மநாதன்**

கடந்த 25.03.2012 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (24.04.2012) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில் (17351) (2-6-9)
- பிள்ளைகள்.

## தவறிவிட்டது

கடந்த (15.04.2012) அன்று நாகேந்திரம் கஜேந்திரன் (831342250 V) ஆகிய எனது தேசிய அடையாள அட்டை யாழ்ப்பாணம்-ஓமந்தைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தந்துதவுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

தொடர்புகளுக்கு : 0778359403

## வேலை ஆள்கள் தேவை

கணினி தெரிந்த அலுவலக உத்தியோகத்தர் இருபாலாரும் தேவை. நேர்முகப் பரீட்சை 25.04.2012 புதன்கிழமை காலை 9.00 - 12.00 மணிவரை நடைபெறும்.

CANADA JEYA SAJI, SUPER CENTER
114 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 0916

## ஆசிரியை தேவை

பாலர் பாடசாலை மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கு ஆசிரியை தேவை. யாழ்.மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- 0776340650

## தவறிவிட்டது

வைத்தியசாலை வீதி, சங்கானையைச் சேர்ந்த இராசரத்தினம் சுரேஸ்குமார் என்பவரது (912190447 V) இலக்க தேசிய அடையாள அட்டையுடன் கூடிய பேர்ஸ் சாவகச்சேரி எரிபொருள் நிலையத்துக்கு முன்பாகத் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0779905374 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

## காணி விற்பனைக்கு

வவுனியா மதவு வைத்த குளத்தில் தண்ணீர் வசதியுடைய வீட்டுடன் கூடிய 2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0774107900, 0750401024

## லொறி விற்பனைக்கு

27 xxxx இலக்கமுடைய இஸ்சுஸ் (ISUZU) நல்ல நிலையிலுள்ள லொறி விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 077 6702432

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

40 நாள் நிரம்பிய பூச்சி நீக்கப்பட்ட பொம்மேரியன் நாய்க்குட்டிகளும், 1 வயது பொக்சர் ஆண் நாய்க்குட்டியும் விற்பனைக்குண்டு.

V.S. சற்குணன்
25, பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம் , T.P : 021 222 7535

## வீடு விற்பனைக்கு

நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முன்பாக (50m) தூரத்திலுள்ள கடைத்தொகுதியும் சகல வசதியும் கொண்ட புதுவீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 0878998, 077 8853011
021 2262020

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து 2 மைல் தூரத்தில் மானிப்பாய் வீதியில் புதிதாகக் கட்டிய வீட்டின் மேல் வீடு, 2 அறை, 2 பாத்றூம், சமையல் அறை, கோல், கார் பார்க் ஆகியவற்றுடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0777656918, 021 221 3021

## வீடு வாடகைக்கு

யாழ்.கடற்கரை வீதியில் சகல வசதிகளுடன் கூடிய மாடிவீடு வாடகைக்குண்டு. முற்பணம் தேவையில்லை.
பெரிய நிறுவனங்களுக்கு,N.G.O நிறுவனங்களுக்கு, அலுவலகங்களுக்கு, களஞ்சிய சாலைக்கு, ஓய்வு விடுதி போன்றவையாகப் பாவிப்பதற்கு உகந்தது.
Holy Cross Hospital இற்கு அருகில் அமைந்துள்ளது.

தொடர்புக்கு: 021 222 7893

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில்
ஆசிரியராகக் கடமையாற்றும்
திருமதி சுமிதா உதயச்சந்திரன்
அவர்களின் பாசமிகு தந்தை

அமரர்
**இராசா சண்முகானந்தன்**
அவர்களின் மறைவுச் செய்தி
கேட்டுத் துயரடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி

[illegible]
[illegible]
வித்தியாலயம், ஊர்காவற்றுறை

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 06 | 05 |
| ★ | ★ |
| 06 | 05 |
| ★ | ★ |
| 1924 | 2011 |

அமரர்
**தங்கராசா நாகரத்தினம்**

திதி: 24.04.2012

எமக்கு உயிர் கொடுத்து-இந்த
உலகத்தில் வாழ வைத்த அன்னையே
பாசத்தின் உறைவிடமே,
பண்பிற்கு இலக்கணமே - ஆண்டு
ஒன்று ஆனாலும் உங்கள் ஆத்மா எங்களுடன்

- தானம்மா
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு.

## நீங்காத ஏழாம் ஆண்டு நினைவுகளில்...



தோற்றம்
10★ 09★ 1941

மறைவு
11★ 05★ 2005

திதி:- திருதியை (24.04.2012)

**அமரர் நடராசா கணேசராசா**
(Rtd.Laboratory Asst., Co - Operative Wholesale Establishment, Rtd Distillery / Ware House Officer, State Distilleries Corporation)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துள்
தெய்வமாகிய - எம் அப்பாவே
ஆண்டுகள் ஏழு ஆனாலும்
எம் வாழ்க்கைப் பயணத்தை
இன்று போல் என்றும்
தெய்வமாக விண்ணில் இருந்து
வழி காட்டுவீர்கள்
என்ற நம்பிக்கையுடன் வாழ்கின்றோம்!

உங்கள் நினைவுகளுடன்:
- மனைவி பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய். (17161) (2-6-9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும், நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 | 25 |
| - | - |
| 10 | 03 |
| - | - |
| 1964 | 2012 |



**அமரர் செல்வி சுமதி பாலசுப்பிரமணியம் (சுவீற்றி)**

கடந்த (25.03.2012) அன்று ஆஸ்திரேலியாவில் சிவபதமடைந்த எங்கள் அன்புச் செல்வத்தின் பிரிவுத்துயரில் பங்கேற்று ஆறுதல் கூறி எல்லா வழிகளிலும் உதவி நல்கி உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் எமக்கு ஆறுதல் தந்த அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24.04.2012) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(17245) (2,6,9)

ஆலங்குழாய்,
சண்டிலிப்பாய்.
ம.குகேந்திரன் (மாமா - ஆஸ்திரேலியா),
நா. மாதவன் (சகோதரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓரளவு மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# தண்டிக்கப்பட, திருத்தப்பட வேண்டிய நாடு இலங்கை

## தா.பாண்டியன் கருத்து



ஒதுக்கப்படவும் தண்டிக்கப்படவும் திருத்தப்படவும் வேண்டிய நாடு இலங்கை என்று இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலர் தா.பாண்டியன் தெரிவித்தார்.

இதுகுறித்து திண்டுக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலக அரங்கில் மனித உரிமை மீறல் விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது, இந்தியத் தூதுக் குழுவினர், ராஜபக்ஷவைச் சந்தித்து விருந்து சாப்பிட்டுள்ளனர்.

தமிழகத்தில் உள்ள முக்கிய கட்சிகள் இடம் பெறாத தூதுக்குழு இலங்கை சென்று வந்துள்ளது. உலக அரங்கில் மனித உரிமை மீறல் விசா ரணை நடத்து கொண்டிருக்கும்போது, தூதுக் குழுவினர், ராஜ பக்ஷவைச் சந்தித்து விருந்து சாப்பிட்டுள்ளனர். ஊடகம் மற்றும் பத்திரிகையாளர்களை இலங்கைக்கு அனுப்பி, அங்குள்ள நிலைமைகள் குறித்து அறிந்து வரச் செய்ய வேண்டும். அது தான் ஜனநாயக முறை.

ஒதுக்கப்பட, தண்டிக்கப்பட, திருத்தப்பட வேண்டிய நாடு இலங்கை. இங்கு தமிழர்கள் மனித உரிமைகளுடன் வாழ வேண்டும் என்பதுதான், இந்திய கம்யூனிஸ்ட் நிலை. புதுக்கோட்டை இடைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து, தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின் முடிவெடுக்கப்படும் -என்றார். (வ)

துப்பாக்கி தயாரிப்புக்காக

# இந்தியாவிலிருந்து இலங்கைக்கு செம்மரக் கட்டைகள் கடத்தல்

இராமநாதபுரம், ஏப்.24

துப்பாக்கி தயாரிப்பதற்காக தமிழகத்தி லிருந்து இலங்கைக்கு செம்மரக் கட்டை கடத்தப் படுவதா கக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து, கியூ பிரிவுப் பொலிஸார் மேலும் விசாரணையை தீவிரப்படுத்தியு ள்ளனர்.

ஆந்திராவிலிருந்து தமிழகத்துக்குக் கொண்டு வரப்படும் செம்மரக் கட்டைகள், இராமேஸ்வரம் வழியாக அதிகமாக இலங்கைக்கு கடத்தப்படுகின்றன. இலங்கையில் போர் முடிவுக்கு வந்தபின் திடீரென அதிகளவில், செம்மரக்கட்டைகள் கடத்தப்படுவது குறித்து, பல்வேறு சந்தேகங்கள் எழுந்த நிலையில், கியூ பிரிவுப் பொலிஸார் விசாரணையை முடுக்கி விட்டனர்.

தமிழகத்தில் கிலோ 800 - 1500 ரூபா வரை வாங்கப்படும் செம்மரக்கட் டைகள், இலங்கையில் 25 ஆயிரம் ரூபா வரை விலைபோகிறது என்று கூறப்படுகிறது. குறிப்பாக இலங்கையில் இவ் வகை மரங்களை அதிக விலை கொடுத்து வாங்கப் படுவதன் காரணம் குறித்து விசாரித்தனர்.

இதுகுறித்து கியூ பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது:-

செம்மரக்கட்டைகள் எதையும் தாங்கும் வலிமை மிகுந்தது. வெடி குண்டால் கூட தகர்க்க முடியாது. நாம் விசாரித்த வகையில், 50 சதவீத மானவை துப்பாக்கி தயாரிப்பதற்கு பயன்படுத் தப்படுவதாகவும் சிலர், வெளிநாட்டில் செம்மரக் கட்டை மூலம் மருந்து தயாரிக்கின்றனர் என்றும் தெரிவிக்கின்றனர். துப்பாக்கி தயாரிக்க எந்த வகையில் செம்மரக் கட்டை பயன் படும் என்பது குறித்து, சென்னை ஆவடி ஆயுதப் பயிற்சி நிலையத்தில் தகவல் சேகரிக்க உள்ளோம்- என்றார். (வ)

# சறுக்குமரம் ஏறியவர் வீழ்ந்து காயம்

யாழ்ப்பாணம், ஏப்.24

யாழ். பொலிஸாரின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் துரையப்பா விளையாட்டரங்குக்கு அருகிலுள்ள மைதானத்தில் இடம் பெற்ற புத்தாண்டு விழாக் கொண்டாட்டத்தின்போது சறுக்கு மரத்திலிருந்து வீழ்ந்த இளைஞர் ஒருவரின் எலும்புகள் முறிந்தன. அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (உ-15)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்.24

மூளாய் வதிரன் புலோ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (வ)

* * *

அளவெட்டி முத்துமாரி அம்பாள் ஆலய புனருத் தாரண நவகுண்ட பக்ஷ அட்டபந்தன கும்பாபிசேகம் நாளை புதன் கிழமை காலை 9.30 மணி தொடக்கம் முற் பகல் 10.30 மணி வரை உள்ள சுப நேரத்தில் இடம் பெறவுள்ளது.(வ)

* * *

கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 12 தினங்கள் திருவிழா இடம்பெறும். எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு தேர்த்திரு விழாவும் மறுநாள் சனிக்கிழமை பிற்பகல் 12.15 மணிக்கு தீர்த்தத் திரு விழாவும் இடம்பெறும். (வ)

* * *

மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலய வருடாந்த பெருந் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற் பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகவுள்ளது. தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் சனிக் கிழமை முற் பகல் 10மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (வ-29)

# ஆலயத் திருவிழாவை முன்னிட்டு போட்டிகள்

கொழும்புத்துறை,ஏப்.24

அரியாலை ஸ்ரீஞானவைரவர் கோயில் வருடாந்த அலங்காரத் திருவிழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையிலான திருமுறை மனனப் போட்டி, சமய அறிவுப்போட்டி என்பன நடைபெறவுள்ளன.

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோயில் இளைஞர் சங்கம் நடத்தும் மேற்படி போட்டிகள் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்திலும் ஆலய அன்னதான மடத்திலும் இடம்பெறும்.

தரம் 3,4,5 கீழ்ப்பிரிவு 6,7,8 மத்திய பிரிவு 9,10,11 க.பொ.த.உயர்தரம் முதலாம் வருடம் மேற்பிரிவு ஆகிய பிரிவுகளாகப் போட்டிகள் நடைபெறும் ஒவ்வொருபோட்டியிலும் முதல் பத்து இடங்களுக்கான பரிசில்கள் ஆலய வைரவர் சந்நிதிமான எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு வழங்கப்படவுள்ளன என்று இளைஞர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (வ-135)

# கோழிகளை வேட்டையாடும் நாய்கள்

தென்மராட்சி,ஏப்.24

சாவகச்சேரி கல்வயல் பகுதியில் அலையும் கட்டாக் காலி நாய்களுக்கு கோழிகள் இரையாகி வருவதால் அப் பகுதி மக்கள் பெரும் நஷ்டம் அடைந்து வருகின்றனர்.

கட்டாக்காலியாக அலையும் நாய்கள் மேய்ச்சலுக்குச் செல்லும் கோழிகளை வீதியில் வைத்துப் பிடித்து பற்றைப் பகுதியில் வைத்து தின்று தீர்த்து விடுகின்றன.

இதனால் கோழிகள் மாலை 4மணிக்கு திறந்து விட்டு 6மணி வரை மேய்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (ம-9)


# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 . 08 . 1940

மறைவு 24 . 04 . 2009

அமரர்

கணபதிப்பிள்ளை சுந்தரமூர்த்தி

அன்பின் ஊற்றாய்
எம்மை அரவணைத்து ஆளாக்கிய அப்பாவே
உங்கள் இன்பத் திருமுகம்
என்றும் எம் இதயத்தில்
நிழலாடும் ! ஆண்டுகள் மூன்று
நகர்ந்து மறைந்தாலும் அன்பு அப்பாவே
உங்கள் அழியாத நினைவுகள்
அன்றாடம் எம் மனதில் நின்றாடும்

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# கோழிக்குஞ்சு விநியோகம்

No.1பிறீமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். முன் கூட்டியே பதிவு செய்யவும்.


தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

# ஓராண்டு நினைவலைகள்



மண்ணில் 09 ★ 03 ★ 1938

விண்ணில் 06 ★ 05 ★ 2011

அமரர்

வைத்திலிங்கம் சிவசுப்பிரமணியம்

திதி : 24.04.2012

எங்கள் கண்கண்ட தெய்வமே !
அப்பா என்று அழைக்க
அன்புடனே எம்மை அரவணைத்தீர்
அன்பு மொழி பேசி ஆதரவாய் எமக்கிருந்தீர்
நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து வருடம் ஒன்று சென்றதப்பா
ஆனாலும் ஆறவில்லை எம்துயரம்
மீண்டும் இப்பூவுலகில் பிறப்பீர்கள் எம் அப்பாவாய்
கண்ணீரால் உங்கள் திருப்பாதத்தைக் கழுவுகின்றோம்
உள்ளத்தால் உங்களை நினைக்கின்றோம்
விழிகளில் நீர் ததும்ப கைகளினால் பூவெடுத்து
மலர்ப் பாதத்தில் மலர் தூவி உங்கள் நினைவோடு
இந் நாளில் நினைவு கூருகின்றோம்
மீளாத்துயிலில் நீங்களும் மீளாத்துயரில் நாங்களும்

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பென்ஸ் கார் ஆர்வலர்களால் Classic Car Forum உருவாக்கம்

மெர்சிடிஸ் பென்ஸ் கார்களின் உரிமையாளர்களும் ஆர்வலர்களும் இணைந்து Classic Car Forum என்ற அமைப்பொன்றை தொடங்கியுள்ளனர்.



இதுதொடர்பான ஒன்று கூடல் நிகழ்வு அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது.

இந்த ஒன்றுகூடலில் 170V முதல் W123, W126 ஆகிய தயாரிப்புகளின் உரிமையாளர்கள் கலந்துகொண்டனர். இதில் கிளாசிக் வகையின் உரிமையாளர்கள் துறைசார் அறிவையும் பகிர்ந்துகொண்டதன் மூலம் மெர்சிடிஸ் பென்ஸ் கார் வகைகளைச் சிறப்பாகப் பராமரிப்பதற்கும் திருத்தியமைப்பதற்கும் தேவையான நுணுக்கமான தகவல்களை அனைவரும் அறிந்துகொள்ளக்கூடியதாகவிருந்தது.

இந்நிகழ்வில் உரையாற்றிய இலங்கை மெர்சிடிஸ் - பென்ஸ் கிளப் தலைவர் சிதத் பெர்ணாண்டோ குறிப்பிடுகையில், ''கிளாசிக் ரகங்களின் ஆர்வலர்கள் இத்தகைய ஒன்றுகூடல்களின் மூலம் பெறும் அறிவைக்கொண்டு இவற்றின் பழைமையை பேணுவதன் மூலம் அதன் தனித்துவத்தை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்ல உதவும் என்ற எதிர்பார்ப்பில் மெர்சிடிஸ்- பென்ஸ் இந்த முயற்சியை முன்னெடுத்துள்ளது. எதிர்காலத்தில் இது தொடர்பாகத் தேவையான அனைத்துத் தொழில்நுட்பத் தகவல்களையும் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக இணையதளமொன்றை ஆரம்பிப்பதற்கும் திட்டமிட்டுள்ளோம்'' - என்றார்.

மெர்சிடிஸ்-பென்ஸ் சேவைகள் பிரிவின் பொது முகாமையாளரான தரங்க குணவர்தன இலங்கையில் உத்தியோகபூர்வ மெர்சிடிஸ்-பென்ஸ் விநியோகத்தர் என்ற ரீதியல் அசல் உதிரிப்பாகங்களை வழங்குவதிலும், வாகனங்களைத் திருத்தி மீள அமைப்பதிலும் எத்தகைய முன்னேற்றமான பங்கை வகிக்க முடியும் என்பது பற்றிய விளக்கமளித்தார்.

அங்கு உரையாற்றிய டீமோ தலைவர் ரஞ்சித் பண்டிதகே கிளாசிக் ரக வாகனங்களின் மேற்புறத்தை அழுத்தமாக்கும் சேவைக்கும் அது தொடர்பான திருத்த சேவைகளுக்குமான விசேட விலைக்கழிவுகள் கொண்ட பொதியை அறிமுகம் செய்துவைத்தார்.

(த)

# MDRT அனுபவ மாநாட்டில் செலிங்கோ லைவ் அதிகாரிகள்



மாநாட்டில் கலந்துகொண்ட அதிகாரிகள்

ஆயுள்க் காப்புறுதிச் சந்தையில் முன்னிலை வகிக்கும் செலிங்கோ லைவ்வின் 13 சிரேஷ்ட சந்தைப்படுத்தல் முகாமையாளர்கள் அண்மையில் தாய்லாந்து பேங்கொக்கில் இடம்பெற்ற '2012 மில்லியன் டொலர் வட்டமேசை' (MDRT) மாநாட்டில் பங்குபற்றினார்கள்.


உலகின் முன்னணி நிறுவனங்களிடமிருந்து தொழில் வாண்மையைப் பெற்றுக் கொள்ளவும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவும் இம்மாநாடு வாய்ப்பு வழங்கியது என்று செலிங்கோ லைவ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்தோடு தனிப்பட்ட தகவல்களைத் தெரிந்து கொள்ளவும் கருத்துப் பரிமாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும் பிரத்தியேக மூலோபாயங்களை மேற்கொள்ளவும் மேலும் தொழிலை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்குமான அனுபவங்களை 'மில்லியன் டொலர் வட்ட மேசை' (MDRT) தந்தது.

வர்த்தகத்தை வளர்த்தெடுப்பதற்கான புதுமையான யோசனைகள், ஒவ்வொரு நாளையும் வெற்றி கொள்ளுதல், பயன்தரக்கூடிய வாடிக்கையாளர் உறவை வென்றெடுத்தல், நம் கனவுலக வர்த்தகத்தை சிருஷ்டித்தல் போன்ற புதிய கருத்துகளை MDRT மாநாடு உள்ளடக்கியிருந்தது.

(த)

# அபான்ஸ் அறிமுகப்படுத்தும் Blu- Ray Disc Player




அபான்ஸ் நிறுவனம் பிலிப்ஸ் ரகத்தைச் சேர்ந்த Blu-Ray Disc Playerயை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த Player மிகக் குறைந்த விலையில் சந்தையில் கிடைக்கும் என அபான்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

Blu-Ray GߣEx DVDUS" பதிலாக வந்திருக்கும் புதிய தலைமுறை Disc வடிவமாகும். இதில் ஒளி, ஒலியை மிகத் தெளிவாக அனுபவிக்கலாம். 25 முதல் 50 எஆ வரையிலான அதிக எண்ணிக்கையிலான தரவுகளைச் சேமித்துவைக்கலாம். மிகத் தரமான விடியோ மற்றும் ஒலி அமைப்புகளுக்கு அப்பால் ஏனைய சிறப்பம்சங்களுக்கான பரந்த இடவசதியைக்கொண்டிருப்பது Blu-Ray யின் மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

உதாரணமாக நீங்கள் ஒரு சினிமாப் படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்போது அந்தப் படம் தொடர்பாகப் படத்தின் இயக்குநர் கூறியிருக்கும் தகவலைப் பார்க்க விரும்பினால் படம் ஓடிக்கொண்டிருக்கும் போதே இயக்குநரின் அந்தத் தகவலைப் பார்க்கலாம். படம் பின்னணியில் ஓடிக் கொண்டிருக்கும். படத்தை நிறுத்தி வைக்கவேண்டிய தேவை ஏற்படாது.

அனைத்து விதமான சிறப்பம்சங்களையும் கொண்ட இந்த Player நாடு முழுவதிலுமுள்ள அபான்ஸ் காட்சியறைகளில் 13,990 ரூபா விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது.

# கழிவறை நீரை குடி தண்ணீராக மாற்றுகிறார் பில்கேட்ஸ்



கழிவறை நீரைக் குடிநீராக மாற்றும திட்டம் ஒன்றை மைக்ரோசொப்ட் நிறுவுநர் பில்கேட்ஸ் ஆரம்பிக்கவுள்ளார். நானோ தொழில்நுட்ப நிபுணரான மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பேராசிரியை சாரா ஹெய்க் என்பவர் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளார்.

இம்பிரீயல் கல்லூரி மற்றும் லண்டன் - டர்காம் பல்கலைக்கழக அறிவியலாளர்களுடன் இணைந்து சாரா இப்பணியைச் செய்வார். இப்பணியின் தொடக்கத்திற்கு ஒரு லட்சம் டொலர் பில்கேட்ஸ் அறக்கட்டளையிலிருந்து வழங்கப்படும். உலக வறுமையை விரட்ட தான் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளில் ஒன்றே மேற்படித் திட்டமென்று பில்கேட்ஸ் கூரியுள்ளார்.

# CMA 'பிரகதி – 2012' மாநாடு இந்தியாவில் வெற்றிகரமாக நிறைவு

முகாமைத்துவ கணக்கியல் கல்வியை நாடும் மாணவர்களின் நலன்கருதி இலங்கையில் இயங்கும் CMA நிறுவனமும் இந்திய கேரள மாநில கொச்சின் நகரில் இயங்கும் ICA நிறுவனமும் இணைந்து அண்மையில் கொச்சினில் மாபெரும் மாநாடொன்றை நடத்தின.

'பிரகதி - 2012' என்ற தலைப்பிலான இந்த மாநாட்டில் CMAயின் மாணவர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். அதுபோல் இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டனர்.

(த)

# செலான் வங்கி வாடிக்கையாளர்களுடன் இணைந்து புதுவருடக் கொண்டாட்டம்

செலான் வங்கி சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டை நாடுமுழுவதுமுள்ள அதன் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் அல்லாதோர் ஆகியோருடன் இணைந்து கொண்டாடியது. அவர்களுக் குப் பல பரிசுகளையும் வழங்கியது.

'செலான் புதுவருட வைப்பு' மற்றும் 'செலான் டிக்கிரி பிளஸ்' கணக்குகளில் பலதரப்பட்ட பரிசுகளை வெல்லும் வாய்ப்புடன் சிறியவர்கள் மற்றும் பெரியவர்கள் ஆகியோர் இக்கொண்டாட்ட காலத்தில் வைப்புகளையும் செய்தனர்.

'செலான் புதுவருட வைப்பு' என்பது பண்டிகைக் காலத்துடன் ஒட்டிய விசேடமான 12 மாத வைப்புத் திட்டமாகும். 25,000 ரூபா அல்லது அதற்கு அதிகமான வைப்புக்கு ஒரு பிளண்டர் பரிசாக வழங்கப்படும். பிளண்டருக்கு மேலதிகமாக இத்திட்டத்தில் வைப்பிலிடப்படும் ஒவ்வொரு 5,000 ரூபாவும் மே 2012இல் இடம்பெறும் ஏப்ரல் மாதத்துக்கான 'பரிசு மேல் பரிசு' சீட்டிழுப்புக்கும் தகுதிபெறும்.

டிக்கிரி பிளஸ் கணக்கில் வைப்பிலிடப்படும் ஒவ்வொரு 5,000 ரூபாவும் வைப்பாளருக்கு ஒரு வோக்கி டோக்கியைப் பெற்றுக்கொடுக்கும். அதேபோல 20 ஆயிரத்துக்கு அதிகமான வைப்புகளுக்கு ஒரு விளையாட்டு பேட் (Game Pad ) வழங்கப்படும்.

செலான் வங்கியின் சந்தைப்படுத்தல் பிரதிப் பொது முகாமையாளர் திலான் விஜேசேகர தெரிவிக்கையில், ''சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டானது சகல இலங்கையரும் பொதுவான பாரம்பரியம் மற்றும் சந்தோஷமான கொண்டாட்டங்களில் ஒன்றிணையும் ஒரு விசேட தருணமாகும்.


# கடதாசிகளாக மாறும் யானைகளின் லத்தி

உலக சனத்தொகை அதிகரிப்புக்கு ஏற்ப பொருள்களின் தேவையும் அதிகரித்துக் கொண்டு போகின்றது. இத்தேவையை ஈடுசெய்வதற்காக பொருள் உற்பத்தியை அதிகரிக்கின்றபோது மூலவளப் பற்றாக்குறையை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

இன்று மூலவளப் பற்றாக்குறை பொருள் உற்பத்தியில் எதிர் விளைவுகளை ஏற்படுத்துவதை நாம் அறிகின்றோம்.குறிப்பிட்ட சில உற்பத்திகளுக்கான மூல வளம் குறைந்துகொண்டே செல்கின்றது. இதனால் மனிதன் மாற்று வழியைத் தேடவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளான்.

அவ்வாறான தேடலில் நல்ல பலனைத் தந்துகொண்டிருக்கும் மாற்று வழி ஒன்றைப் பற்றித்தான் இச்செய்தி கீழே கூறுகின்றது.கடதாசி உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள் புல் என்றே அனைவரும் அறிவோம். ஆனால்,யானைகளின் லத்தி கடதாசி உற்பத்திக்கு மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பது ஒரு சிலர்க்கு மாத்திரமே தெரியும்.

யானைகளின் லத்தியைக் கொண்டு இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் கடதாசி உற்பத்தி செய்யப்படுகின்றது.அதேபோல் இலங்கையிலும் இந்த உற்பத்தி இடம்பெறுவதுதான் மகிழ்ச்சிக்குரிய விடயம்.



யானைகளின் சரணாலயம் அமைந்துள்ள பின்னவலையில் அமைக்கப்பட்டுள்ள மக்சிமஸ் தனியார் நிறுவனம்தான் இந்த உற்பத்திச் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது.

தம்புள்ள, கிரிபிட்டிய, ... மற்றும் கொழும்பு போன்ற இலங்கையில் தொழிற்சாலைகளை அமைத்து 125 க்கு மேற்பட்டவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கி வரும் இந்நிறுவனம் பின்னவலையில் உள்ள சுமார் 65 பேர்க்கு மறைமுக தொழில் வாய்ப்பை வழங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமிக்கப்படும் யானையின் லத்தி இரண்டு நாள்கள் வெயிலில் உலர்த்தப்பட்டு அதில் உள்ள கிருமிகளை அழிப்பதற்காக அவிக்கப்படும். அப்போது லத்தியின் நிறம் மாற்றமடையும்.

பின்னர் அது வேறொரு இயந்திரத்தில் இட்டு கூழாக ஆக்கப்படுகின்றது. அந்தக் கூழுக்கு நிறம் சேர்க்கப்பட்டு அந்த நிறத்தின் அடிப்படையில் கடதாசிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.


இந்த வகைக் கடதாசிகளுக்கு அதிக கிராக்கி உண்டு. அமெரிக்கா, ஜப்பான் மற்றும் பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளுக்கு இந்தக்கடதாசி ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இந்தவகைக் கடதாசியால் உருவாக்கப்பட்ட குறிப்புப் புத்தகங்கள், நாளேடுகள்,பைகள் போன்றவை சந்தையில் உலா வருவதை நீங்கள் பார்க்கலாம். இதற்குத் தனிக் கிராக்கி உண்டு.

இந்தப் புதுமையான கண்டுபுடிப்பு கள் மூலம் எமது சுற்றுச் சூழல் சுத்தமாக வைக்கப்பட்டு மூல வளங்கள் பாதுகாகப்படுகின்றன. இவ்வாறான புதுக் கண்டுபிடிப்புகளை அரசும் ஊக்குவிப்பதன் மூலம் எமது நாட்டின் அபிவிருத்திக்குப் பலம் சேர்க்க முடியும்.

(த)

# மரண அறிவித்தல்



## நவரத்தினம் குலசேகரம்

**( ஓய்வுபெற்ற பொலிஸ் - உத்தியோகத்தர்)**

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி, வருணனை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் குலசேகரம் கடந்த (21.04.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான தருமலிங்கம் - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், கருணானந்த நாயகியின் (கருணா) அன்புக் கணவரும், தவேந்திரன் (சுரேஸ் - லண்டன்), ஜெயேந்திரன் (ஜெயா - லண்டன்), ஞானேந்திரன் (பிரபா - ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் , நாகரஞ்சினி, சசிரேகா, பவானி ஆகியோரின் அன்பு மாமனும், கிருஸ்னி, வினுஷ், நிஷான், தரணி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற மனோரஞ்சிதம் மற்றும் அரியரத்தினம், தவமணிதேவி, சிறிரங்கநாதன், குணரத்தினம், சிறிகாந்தா, யோகேஸ்வரி, பகவதி, ஜெயரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற விவேகானந்தனின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2012) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தீர்த்தாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்நிதி வீதி, வருணன், அச்சுவேலி.** **தகவல்: குடும்பத்தினர்.**

## தேவை


01. யாழ். நகர் பஸ் நிலையம் முன்பாக உள்ள பிரபல காகிதாதி விற்பனை நிலையத் துக்கு (Stationary) பொறுப்புடன் நிர்வாகிக்கக் கூடிய முன் அனுபவமுடைய ஒருவர் தேவை.

முன்னனுபவம் நிர்வாகத் திறமையின் அடிப்படையில் சம்ப ளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

02. பலசரக்கு விற்பனை நிலையத்துக்கும் பணியாளர்கள் தேவை.

**தொடர்புகளுக்கு : 0777769231**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



03.04.2012ஆம் திகதியன்று கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கல்விமாணிப் பட்டம் பெற்ற நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய ஆசிரியை

**திருமதி செல்வரதி சிவநாதன் (B.Ed)**

அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.

"ஓம் விராட் விஷ்வ பிரமனே நமஹ"

## இரண்டாவது பிறந்தநாள் அழைப்பு






செல்வன்

**கோ.சிதம்பரநாதன்**

தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று (24.04.2012) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து செல்வன் கோ.சிதம்பரநாதனை வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

39/4, மின்சார நிலைய வீதி,
3 ஆம் ஒழுங்கை.
(பஸ் நிலையத்திற்குப் பின்புறம்,
யாழ்ப்பாணம்)

தகவல்: லி.ஜெகன்.

## மணி விழா வாழ்த்து



60 ஆவது அகவை காணும்
(23.04.2012)

**உயர் திரு. மயில்வாகனம் நாகேஸ்வரன்**

( B.Com - H.N.D.A - A.A.T)
(உயர் தொழில்நுட்ப நிறுவன விரிவுரையாளர்)

மீசாலை மண் பெற்ற மேலான வித்தகனே பாசத்தின்
சிகரமே பார்போற்றும் உத்தமனே உதவிடும் கரங்களால்
உயர்ந்தவன் நீ சிரிப்பின் சிகரமே சிறப்புடனே
வாழ்ந்திருப்பாய் பல்லாண்டு

சேவைகள் தொடர வாழ்த்தும்
திரு. க. கமலேஸ்வரன் (பிரதம கணக்காளர் - கச்சேரி, மன்னார்)
திரு. சு. கணேசதாசன் (அதிபர் யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், திரு. ம. நாகேஸ்வரன் (T.P : 077 6105193)
மற்றும் நண்பர்கள்

## தாவரவியல் பூங்கா திறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 24

சத்தியசாய்பாபா மகா சமாதியடைந்த ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு இன்று மாலை 4 மணியளவில் மானிப்பாய் கனக சபை வீதியில் 'சத்தியசாயி ஞாபகார்த்த தாவரவியல் பூங்கா' திறந்து வைக்கப்ப டவுள்ளது. சர்வ மதத் தலைவர் பேராசிரியர் எஸ். லீலாக் கிருஸ்ணன் தலைமயில் இந்த பூங்கா திறப்பு நிகழ்வு நடைபெறும். (ந)

## விற்பனைக்கு

தரமான உழுந்து மொத்தமாக விற்பனைக் குண்டு. (5000 kg)

**தொடர்பு : 077 5151761**

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய், சந்தியில் சித்தன்கேணி வீதியில், சீரணி அம்மன் கோயில் எதிரில் 29.02 பேர்ச்சர்ஸ் காணி 4 அறைகளுடன் வீடு முற்றாக முடிக்கப்படாத நிலையில் உடனடி விற்பனைக்குண்டு.

**Suitable For Stores OR Institution**

**தொடர்பு : 077 3257019, 077 6463843**

## வீடு வாடகைக்கு

இல. 34, பலாலி வீதியில் (Farm School அருகில்) 5 Rooms, 3 Bath rooms பெரிய வளவுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

NGO போன்ற நிறுவனங்களுக்கு உகந்தது.

**Contact No: 0779396656, 0718561252**

## விற்பனையாளர் தேவை

மிதிவண்டி, மிதிவண்டி உதிரிப்பாக விற்பனையில் அனுபவமுள்ளவர்கள் உடன் தேவை.

தொடர்பு :
இல. 125ஏ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஓம் சாயிராம்

## A/L பொருளியல் நூல்

## பொருளாதார வளர்ச்சி

ஆசிரியர் : வே. கருணாகரன்



பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை
**24.04.2012**

## கோழிக்குஞ்சு விநியோகம்

No 1 பைரகா புறொயிலர் குஞ்சுகள் (25.04.2012) புதன்கிழமை பெற்றுக் கொள்ளலாம். பதிவுகளை மேற்கொள்ளவும்

திருமகள் களஞ்சியம்
750, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 2223270, 075 4985692

## தேவை

யாழ்.நகர் கே.கே.எஸ்.வீதியிலுள்ள பான்சிக் கடைக்கு வேலையாள்கள் தேவை. இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

**தொடர்பு:- 0777129998**

## கோழிக் குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 kg மேல் வளர்ச்சியடையக் கூடிய No - 1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 25.04.2012 புதன்கிழமை விநியோகிக்கப்படும். பதிவுகள் முன் கூட்டியே மேற்கொள்ளவும்.

ராஜீவ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
**T.P.No. 0776090926**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்

மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி
முதலாம் அரையாண்டு பரீட்சைகள் 2011

முகாமைத்துவ கற்கைள் வணிக பீடத்தின் மேற்படி மனித வள முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறிக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் 29.04.2012இல் ஆரம்பமாகும். பரீட்சைக்கான நேர அட்டவணையை முகா மைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலக அறிவித் தல் பலகையில் பார்வையிடலாம்.

**பதிவாளர்.**

## மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை புஸ்பம்
### (ஆசாரி)



புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும், 108/9, இராசவின் தோட்டம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை புஸ்பம் (22.04.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத் துரை - தங்கம்மா தம்பதியரின் அன்புமகனும், காலஞ் சென்றவர்களான சுப்பையா - வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும் சிவஞானத்தின் அன்புக் கணவரும், தர்மகுலராசா, தர்மகுலசிங்கம், தர்மகுலராணி, தர்ம குலதேவி, காந்தசொரூபி, வரதராஜா காலஞ்சென்ற இளங்கீரன் மற்றும் கலீதரன், கீதாஞ்சலி ஆகியோரின் அன்புத்தந்தையும் அருந்தவம், ஸ்ரீஈஸ்வரன், ஜெயராஜா, உத்தரதாசன், சாந்தினிதேவி, சிவசேகரம் ஆகியோரின் மாமனும் பரமலிங்கம், இராசலிங்கம், காலஞ்சென்ற இராசலட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரனும் வில்வரட்ணம், பராசக்தி, இரத்தினம், சண்முகம்,தர்மலிங்கம், நவரத்தினம், பாக்கியம், நாகம்மா ஆகியோரின் மைத்துனரும் சுதர்ஷினி, ராஜரமணன், பாலகீரன், சுகன்யா, சுவர்ணா, லவகீரன், லாவண்யா, லக்சனா, கோபிகா, வேணு கோபிகாந், பானுகோபிகாஷ், அனந்திகா, லக்ஷிகா, அனுஷ் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2012) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

108/9, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

## திருமதி நித்யகல்யாணி திருஞானசம்பந்தர்



யாழ். வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், தற்போது சிட்னி, ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நித்யகல் யாணி திருஞான சம்பந்தர் அவர்கள் (22-04- 2012) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சிவ பதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற திருஞான சம்பந்தரின் (இளைப்பாறிய D.L.O- யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர் களான பசுபதிசெட்டியார் - நாகலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வர்களான கனகசபை - மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மருமகளும், சாந்தினி (கொழும்பு), பசுபதீஸ்வரன் (கனடா), கிரிஜா (ஆஸ்திரேலியா), ரமேஷ்(செட்டி - லண்டன்), சிவஜா(ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும், சுந்தரலிங்கம், பராசக்தி, இந்திரஜித், ஹம்சகவிதா, சுரேஷ்குமார் ஆகியோரின் அன்பு மாமியும், தாரிணி, தர்மினி, வைஷ்ணவி, கீரன்,அரன், வரன், சாம்ரேஷ், சஷ்மிதா, ஆகாஷ், சிந்துஜா, கைலாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பாலசுப்ரமணியம், செந்தில்நாதன் மற்றும் மங்கையர்க்கரசி, கனகாம்பிகை, கௌரிநாயகி, வேங்கடநாயகி(சாரதா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற விக்னராஜா, Dr. மகேஸ்வரன், காலஞ்சென்ற தையல்நாயகி, கமலாதேவி ஆகி யோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிட்னி ஆஸ்திரேலியாவில் இன்று (24.04.2012)செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.30 தொடக்கம் 1.30 வரை இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்


26 - 4/2, 42 ஆம் ஒழுங்கை,
கொழும்பு - 06.
T.P.0112363139

தகவல்:
திருமதி சாந்தினி சுந்தரலிங்கம்.

வாடிக்கையாளர்களே!
அக்ஷய திருதியை முன்னிட்டு இன்று (24.04.2012) செவ்வாய்க்கிழமை புதிய நகைகளைக் கொள்வனவு செய்யும்போது புதியபொருள் சேரும் என்று ஒரு ஐதீகம் உண்டு. எனவே நீங் களும் எங்களிடம் தங்க நகை ஒன்றை வாங்கி அக்ஷய திருதியையின் பலனை அடைந்து கொள்ளுங்கள்

# பிரசாத் நகையகம்


நவீன அழகிய ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்



22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

...ன் நகை வியாபாரம்
177 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P:021- 222 5906

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சரசாலை தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் இல்ல மெய் வன்மைப் போட்டியில் வெற்றிபெற்ற இல்லத்துக்கான வெற் றிக் கேடயத்தை தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி வழங்குகிறார். (ம-9)



சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்திய மகளிர் தின விழாவில், யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (ம-100)

வேலணை பிரதேச செயலகங்களுக் கிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற வீராங்கனை ஒருவருக்கு வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் பரிசில் வழங்குகிறார்.

(ம-167)







கட்டாயக் கல்வி, சிறுவர் உரிமைகள் தொடர்பான செயலமர்வு உரும்பிராய் சந்திரோதய வித்தியசாலையில் பாடசாலை அதிபர் ஞா.அன்ரன் பிரேமதாஸ் தலைமையில் இடம்பெற்றபோது யாழ்.மாவட்ட மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ், யாழ்ப்பாண கல்வி அலுவலக முறைசாராக் கல்வி செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர். நிகழ்வில் கலந்துகொண்ட பெற்றோர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர். (14)



ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியை யாழ். கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் வி.செல்வ ராசா மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார். (ம-11)



அச்சுவேலி வடக்கு சரசாளி சித்திர வேலாயுதர் ஆலயத்தின் [illegible] ளையன் குழந்தை ஐயா ஞாபகார்த்த மண்டபத்துக்கான அடிக்கல்லை யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நட்டு வைக்கிறார். (ம-8)



யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கைதடி தொழிற் பூங்காவில் தங்கியுள்ள விழிப்புலனற்றோரின் அடிப்படைத் தேவைகளுக்கான ஒரு தொகை நிதியை ஓய்வுபெற்ற ஆசிரியை மயில்வாகனம் பரமானந்தசோதி வழங்குகிறார். (ம-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேசைப்பந்தாட்டத்தின் அரையிறுதி ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஏப்.24

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவையும் மேசைப்பந்தாட்ட அணியும் சீலாப் சொலுசன் பிறைவேட் நிறுவனத்தின் ஆதரவுடன் இணைந்து நடத்திய ஆண்கள், பெண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டி அரையிறுதி ஆட்டங்கள் நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

ஆண்களுக்கான அரையிறுதிப் போட்டியில் மோதிக் கொண்ட அணிகளின் விவரம் பின்வருமாறு:

யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரிக்கும் யாழ்ப்பாணம் பல் கலைக்கழக அணிக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் மூன்று ஒற்றையர் ஆட்டமும் ஒரு இரட்டையர் ஆட்டமும் இடம் பெற்றது.

முதல் ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 3:2 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. இதில் யாழ். பல்கலைக் கழக வீரன் ரூபசிங்காவும் யாழ்.இந்துக் கல்லூரி வீரன் விக்கினேஸ்வரனும் மோதிக் கொண்டனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வீரன் ரூபசிங்கா இரண்டாம் நான்காம் சுற்றுக்களை 11:8, 11:7 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி கொள்ள யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீரன் விக்கினேஸ்வரன் முதலாம் மூன்றாம் ஐந்தாம் சுற்றுக்களில் முறையே 12 :10, 11:6, 15:13 புள்ளிகள் என்ற அடிப் படையில் வெற்றி பெற்றார்.

இரண்டாம் ஒற்றையர் ஆட்டத் தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வீரன் ஜனகனும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீரன் தீபகுகனும் மோதிக்கொண்டனர்.

நான்கு சுற்றுக்கள் இடம் பெற்ற இந்தப் போட்டியில் முதல் சுற்றை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீரன் தீபகுகன் 12:10 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற அடுத்த மூன்று சுற்றுக்களையும் பல்கலைக்கழக் வீரன் ஜனகன் 13:11, 12:10, 13:11 புள்ளிகள் என்ற அடிப் படையில் வெற்றி பெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வீரன் டமிந்தாவும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீரன் செந்தூரனும் மோதிக் கொண்டார்கள். முதல் மூன்று நேர் சுற்றுக் களையும் யாழ்ப்பாணம் பல் கலைக் கழக விரன் டமிந்தா 12:10, 11:7, 13:11 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றார்.

நான்காவதாக இடம் பெற்ற இரட்டையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல் கலைக்கழக வீரர்களான ரூபசிங்கா - துஷ்யந்தன் இணையும் யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரி வீரர்களான விக்கினேஸ்வரன் யதீஸ்குமார் இணையும் மோதிக் கொண்டன.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வீரர்களான ரூபசிங்கா-துஷ்யந்தன் இணை முதல் மூன்று நேர் சுற்றுக்களை முறையே 11:8, 11:9, 11:7 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி கொண்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி 3:1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. (ங-86)

## வவுனியா மாவட்டத்தில் பெருவிளையாட்டு நாளை



வவுனியா,ஏப்.24

வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட பெருவிளையாட்டு போட்டிகள் நாளை புதன்கிழமை முதல் நடைபெறவுள்ளதாக பணிப்பாளர் எம்.எம்.சுபைர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் நாளை ஆண், பெண்களுக்கானஎல்லே சுற்றுப் போட்டி நகரசபை மைதானத்திலும், மறுநாள் ஆண்களுக்கான கிரிக்கெட் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திலும் பெண்களுக்கான போட்டி நகர சபை மைதானத்திலும் இடம் பெறவுள்ளது.

வலைப்பந்தாட்டம் எதிர் வரும் 27 ஆம் திகதி சைவப் பிரகாச மகளிர் கல்லூரியிலும்,

28 ஆம் திகதி சனிக் கிழமை ஆண், பெண்களுக் கான உடற்பயிற்சிப் போட்டியும்,

30 ஆம் திகதி ஆண், பெண்களுக்கான கபடி முஸ் லிம் மகாவித்தியாலய அஸ் ரப் விளையாட்டு மைதானத் திலும்,

மே 2ஆம் திகதி, 3 ஆம் திகதிகளில் ஆண், பெண் களுக்கான உதைபந்தாட் டம் நெளுக்குளம் கலை மகள் மகாவித்தியாலயத்தி லும்,

மே 04 ஆம் திகதி ஆண், பெண்களுக்கான பூப்பந் தாட்டம் வவுனியா நகர சபை மைதானத்திலும்,

7 ஆம் திகதி ஆண், பெண் களுக்கான கூடைப் பந்தாட் டம் நகர சபை மைதானத்தி லும்,

8 ஆம் திகதி ஆண், பெண் களுக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டி சைவப்பிரகாச மக ளிர் கல்லூரியிலும்,

9 ஆம் திகதி ஆண், பெண்களுக்கான கரப்பந் தாட்டம் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தி லும்,


10 ஆம் திகதி மேசைப்பந் தாட்டம், கரம் என்பன அல் இக்பால் முஸ்லிம் வித்தியா லயத்திலும் இடம் பெறவுள் ளது.

மாவட்ட மட்ட தடகளப் போட்டிகள் மே மாதம் 12, 14, 15 ஆகிய திகதிகளில் வவுனியா நகரசபை மைதா னத்திலும் இடம்பெறவுள் ளன. (ங-400 -402)

## கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பங்கள்

வவுனியா, ஏப்.24

மாவட்ட மட்ட கிரிகெட் சுற்றுப் போட்டிக்கு விண் ணப்பங்கள் கோரப்பட்டுள் ளது. வவுனியா மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தினால் நடத்தப்படவுள்ள கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள பதிவு செய்யப்பட்ட கழகங்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் த.கமலன், துடுப் பாட்ட சங்க செயலாளரிடம் ஒப்படைக்குமாறு வவுனியா மாவட்ட துடுப்பாட்ட சங் கம் கோரியுள்ளது. (ங-402)



நோயல்ஸ் வெற்றிக் கிண்ணத்துக்கான இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் சென்றல் அணி யும், நாலந்தாக் கல்லூரி அணியும் மோதிக்கொண்டன. (ங-86)

## ஹொக்கியில் வென்ற அணிகள்

யாழ்.பல்கலைக் கழக விளையாட்டு அவை நடத்துகின்ற யாழ்.மாவட்ட அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஹொக்கிப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

காலை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் யாழ்.ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்ட ஆட்டத்தில் யாழ்.ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் ஒல்ரோல்ட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிளாஸ்கோப்பர்ஸ் விளையாட்டு கழக அணி மோதிக் கொண்ட ஆட்டத்தில் ஒல் ரோல்ட் விளையாட்டுக் கழக அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மாலை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் யாழ்.பல் கலைக்கழக அணியை எதிர்த்து யாழ்.ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்ட ஆட்டத்தில் யாழ்.ஸ்ரார் விளை யாட்டுக் கழக அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஒல்கோல்ட் விளை யாட்டுக் கழக அணி மோதிக் கொண்ட ஆட்டத்தில் இரண்டு அணி களும் எதுவித கோல்களையும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (23)

# யாழ்.கல்வி வலய பெண்களுக்கான பெருவிளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்.கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 15,17,19 வயதுப் பிரிவு பெண்களுக்கான பெரு விளையாட்டுப் போட்டிகளின் வெற்றி பெற்ற பாடசாலையின் பெயர் விவரம் வருமாறு:-

**19 வயது பிரிவு**
**எல்லே**

உரும்பிராய் இந்துக் கல்லூரி- முதலாமிடம்,

சென்.ஜேம்ஸ் மகளிர் மகா வித்தியாலயம்- இரண்டாமிடம்,

புத்தகலட்டி ஸ்ரீவிஸ்ணு வித்தியாலயம்- மூன்றாமிடம்.

**15 வயதுப் பிரிவு**
**கபடி**

சென்.ஜேம்ஸ் மகளிர் மகா வித்தியாலயம் -முதலாமிடம்,

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி- இரண்டாமிடம்

**19 வயதுப் பிரிவு**
**கபடி**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி- முதலாமிடம்,

கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயம்- இரண்டாமிடம்,

நாவாந்துறை ஆர்.சி.ரி.எம்.எஸ் - மூன்றாமிடம்.

**15 வயதுப் பிரிவு**
**வலைப்பந்தாட்டம்**

யாழ்.இந்து மகளிர் கல்லூரி- முதலாமிடம்,

கொக்குவில் இந்துக் கல்லூரி - இரண்டாமிடம்,

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் - மூன்றாமிடம்.

**17 வயதுப் பிரிவு**
**வலைப்பந்தாட்டம்**

கொக்குவில் இந்துக் கல்லூரி- முதலாமிடம்,

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை - இரண்டாமிடம்,

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி - மூன்றாமிடம்.

**19 வயதுப் பிரிவு**
**வலைப்பந்தாட்டம்**

கொக்குவில் இந்துக் கல்லூரி- முதலாமிடம்,

யாழ்.இந்து மகளிர் கல்லூரி - இரண்டாமிடம்,

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல் லூரி- மூன்றாமிடம்.

**15 வயதுப் பிரிவு**
**கரப்பந்தாட்டம்**

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்- முதலாமிடம்,

அத்தியார் இந்துக் கல்லூரி- இரண்டாமிடம்,

அச்சுவேலி மத்திய கல்லூரி - மூன்றாமிடம்.

**17 வயதுப் பிரிவு**
**கரப்பந்தாட்டம்**

அத்தியார் இந்துக் கல்லூரி- முதலாமிடம், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் - இரண்டாமிடம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மூன்றாமிடம்.

**19 வயதுப் பிரிவு**
**கரப்பந்தாட்டம்**

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி முதலாமிடம்,

அச்சுவேலி மத்திய கல்லூரி - இரண்டாமிடம்,

அத்தியார் இந்துக் கல்லூரி- மூன்றாமிடம்.

**19 வயதுப் பிரிவு**
**உதைபந்தாட்டம்**

நாவாந்துறை ஆர்.சி.ரி.எம்.எஸ் - முதலாமிடம்,

உரும்பிராய் இந்துக் கல்லூரி- இரண்டாமிடம்,

ஊரெழு கணேச வித்தியாலயம் - மூன்றாமிடம்.

**19 வயதுப் பிரிவு**
**கூடைப்பந்தாட்டம்**

கொக்குவில் இந்துக் கல்லூரி - முதலாமிடம்,

திருக்குடும்பக் கன்னியர் மடம்- இரண்டாமிடம்,

யாழ். இந்து மகளிர் கல்லூரி- மூன்றாமிடம்.

**15 வயதுப் பிரிவு**
**மேசைப்பந்தாட்டம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி - முதலாமிடம்,

யாழ். இந்து மகளிர் கல்லூரி - இரண்டாமிடம்,

உரும்பிராய் இந்துக் கல்லூரி - மூன்றாமிடம்.

**19 வயதுப் பிரிவு**
**மேசைப்பந்தாட்டம்**

கொக்குவில் இந்துக் கல்லூரி- முதலாமிடம்,

யாழ்.இந்து மகளிர் கல்லூரி - இரண்டாமிடம்,

உரும்பிராய் இந்துக் கல்லூரி - மூன்றாமிடம்.

**15 வயதுப் பிரிவு**
**சதுரங்கம்**

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை- முதலாமிடம்,

யாழ்.இந்து மகளிர் கல்லூரி- இரண்டாமிடம்,

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி- மூன்றாமிடம்.

**19 வயதுப் பிரிவு**
**சதுரங்கம்**

யாழ்.இந்து மகளிர் கல்லூரி - முதலாமிடம்,

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை - இரண்டாமிடம்,

கொக்குவில் இந்துக் கல்லூரி- மூன்றாமிடம்.

**15 வயதுப் பிரிவு**
**பூப்பந்தாட்டம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி - முதலாமிடம்,

யாழ்.இந்து மகளிர் கல்லூரி - இரண்டாமிடம்,

கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயம்- மூன்றாமிடம்.

**19 வயதுப் பிரிவு**
**பூப்பந்தாட்டம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி -முதலாமிடம்,

யாழ்.இந்து மகளிர் கல்லூரி - இரண்டாமிடம்,

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை- மூன்றாமிடம்.

**15 வயதுப் பிரிவு**
**கரம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி -முதலாமிடம்,

யாழ்.இந்து மகளிர் கல்லூரி - இரண்டாமிடம்,

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை- மூன்றாமிடம்.

**19 வயதுப் பிரிவு**
**கரம்**

யாழ்.இந்து மகளிர் கல்லூரி - முதலாமிடம்,

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி -இரண்டாமிடம்,

கொக்குவில் இந்துக் கல்லூரி- மூன்றாமிடம்.

**19வயதுப் பிரிவு**
**ஹொக்கி**

கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயம் -முதலாமிடம்,

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை- இரண்டாமிடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமநிலை




இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விறுவிறுப்பான போட்டியில் மன்செஸ்டர் யுனைட்டட் கழகம் இறுதி 7 நிமிடங்களில் 2 கோல்களை கோட்டை விட்டு எவேர்ட்டன் கழகத்திற்கெதிராக சம நிலை முடிவைப் பெற்றுக் கொண்டது. இந்தப் போட்டி யிலேயே எவேர்ட்டன் கழகம் இறுதிநேரத்தில் அற்புதமாக ஆடி சமநிலை முடிவைப் பெற்றது.

போட்டி ஆரம்பித்து 34 ஆவது நிமிடத்தில் எவேர்ட்டன் கழகம் கோலொன்றை அடித்த போதி லும், 41 ஆவது நிமிடத்தில் வெய்ன் றூனி கோலொன்றை அடித்து முதற்பாதியில் இரு அணிகளும் தலா ஒரு கோலுடன் காணப்படுவதை உறுதி செய்தார். முதற்பாதியின் பின்னர் அதிரடியாக ஆடிய மன்செஸ்டர் யுனைட்டட் 57 ஆவது நிமிடத்தில் வெல்பெக் அடித்த கோல் மூலமும், 61 ஆவது நிமிடத்தில் நனி அடித்த கோல் மூலமும் 3-1 என்ற முன்னிலையைப் பெற்றது. ஆனால் 67 ஆவது நிமிடத்தில் எவேர்ட்டனில் நெவிலி கோலொன்றை அடித்து 3-2 என்ற கோல் நிலையை ஏற்படுத்தினார்.

எனினும் திரும்பவும் ஆதிக்கம் செலுத்திய மன்செஸ்டர் யுனைட்டட் டின் சார்பாக 69ஆவது நிமிடத்தில் வெய்ன் றூனி போட்டியில் தனது இரண் டாவது கோலை அடிக்க அவ்வணி 4-2 என்ற கணக்கில் இலகுவான முன்னிலையைப் பெற்றுக் கொண்டது. ஆனால் இறுதிநேரத்தில் சிறப்பாக ஆடிய எவேர்ட்டன் கழகம் சார்பாக 83 ஆவது மற்றும் 85ஆவது நிமிடங்களில் கோல்கள் அடிக்கப்பட போட்டி சம நிலையில் நிறைவடைந்தது.

நேற்றைய போட்டியில் வெற்றிபெற்றிருந்தால் முதலிடத்தில் காணப் படும் மன்செஸ்டர் யுனைட்டட் கழகத்திற்கும், இரண்டாமிடத்தில் காணப் படும் மன்செஸ்டர் சிட்டி கழகத்திற்குமிடையில் புள்ளிகளின் அடிப் படையில் 8 புள்ளிகள் வித்தியாசம் ஏற்பட்டிருக்கும். ஆனால் நேற்றைய முடிவு காரணமாக இரு அணிகளுக்குமிடையில் தற்போது 3 புள்ளிகள் மாத்தி ரமே வித்தியாசம் காணப்படுகிறது. ஆகவே பிறீமியர் லீக் பட்டத்திற் கான போட்டி திரும்பவும் ஆரம்பித்துள்ளதாகக் கருதப்படுகிறது.




'கில்லி' இல்லாத நிலையில் பஞ்சாப் அணி வென்றதால் இந்த ஆட்டம்

## சச்சின் வந்தும் சறுக்கியது மும்பை

சச்சின் வந்தும் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு விமோசனம் கிடைக்க வில்லை. துடுப்பாட்டத் தில் ஏமாற்றிய இவர் 23 ஓட்டங்களுக்கு வெளி யேற, கிங்ஸ் லெவன் பஞ் சாப் அணியிடம் 6 இலக்கு கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் வீழ்ந்தது. 68 ஓட்டங்கள் விளாசிய ஷோன் மார்ஷ், பஞ்சாப் அணியின் வெற்றிக்கு கைகொடுத்தார்.

மும்பையில் உள்ள வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த ஐ.பி.எல்., தொடரின் 28 ஆவது லீக் ஆட்டத்தில், மும்பை இந்தியன்ஸ் - கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் மோதின. மும்பை அணியில், இடதுகை விர லில் ஏற்பட்ட காயத்தி லிருந்து மீண்ட 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின், ஜேம்ஸ் பிராங்ளின், திசர பெரேரா வாய்ப்பு பெற்றனர். ரிச்சர்ட் லீவி, டேவி ஜேக்கப்ஸ், கிளின்ட் மெக்காய் நீக்கப் பட்டனர். பஞ்சாப் அணி யில் வல்தாட்டி, ஹர்மீத் சிங் வெளியேற்றப்பட்டு பார்கவ் பாட், சித்தார்த் சிட்னிஸ் இடம் பிடித்தனர். காயம் காரணமாக பஞ்சாப் அணித் தலைவர் கில் கிறிஸ்ட் விளையாடவில்லை. அணித்தலைவர் பொறுப்பு மீண்டும் டேவிட் ஹசிக்கு வழங்கப்பட்டது. நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணித் தலைவர் ஹர்பஜன் சிங், துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

ரோகித் ஏமாற்றம்

மும்பை அணிக்கு பிராங் ளின், சச்சின் ஜோடி நிதான தொடக்கம் கொடுத்தது. முதல் இலக்குக்கு 51 ஓட்டங்கள் சேர்த்த போது, இரண்டாவது ஓட்டத்துக்கு ஆசைப்பட்ட சச்சின் (23), டேவிட் மில்லரின் துல்லிய 'த்ரோவில் ரன்-அவுட்' ஆனார். அடுத்து வந்த ரோகித் சர்மா (2) ஏமாற்றினார்.

பிராங்ளின் அபாரம்

பின்னர் இணைந்த தினேஷ் கார்த்திக், பிராங் ளின் ஜோடி ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண் டது. பார்கவ் பாட் பந்தில் அடுத்தடுத்து இரண்டு சிக்சர்கள் விளாசிய பிராங் ளின் அரைச்சதம் அடித்தார். இவருக்கு ஒத்துழைப்புக் கொடுத்த தினேஷ் கார்த் திக், டேவிட் ஹசி, அசார் முஹமட் பந்தை பவுண்ட ரிக்கு விரட்டினார். பிரவீன் பந்தில் இரண்டு சிக்சர்கள், ஒரு பவுண்டரி அடித்த பிராங் ளின், அணியின் ஓட்ட எண் ணிக்கையை உயர்த்தினார். மூன்றாவது இலக்குக்கு 75 ஓட்டங்கள் சேர்த்திருந்த போது, தினேஷ் கார்த்திக் (35) 'ரன்-அவுட்' ஆனார்.

அடுத்து வந்த பொலார்ட் (7), ஹர்பஜன் (4) சோபிக்க வில்லை. அபாரமாக ஆடிய பிராங்ளின் (79) நம்பிக்கை அளித்தார். மும்பை அணி 20 பந்து பரிமாற்றங்களில் 6 இலக்குகளுக்கு 163 ஓட் டங்களை எடுத்தது. பெரேரா (4), அம்பாதி ராயுடு (3) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய பஞ்சாப் அணிக்கு நிடின் சைனி, மன்தீப் சிங் ஜோடி நல்ல தொடக்கம் கொடுத்தது. முதல் இலக் குக்கு 48 ஓட்டங்கள் சேர்த்த போது, பிரக்யான் ஓஜா சுழ லில் சைனி (30) எல்.பி. டப்ளியூ., முறையில் ஆட்ட மிழந்தார். இவருக்கு ஒத்து ழைப்பு தந்த மன்தீப் சிங் (24), பொலார்ட் பந்தில் வெளியேறினார்.


பின்னர் இணைந்த ஷோன் மார்ஷ், டேவிட் ஹசி ஜோடி ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண் டது. ஹர்பஜன் பந்தில் அடுத்தடுத்து இரண்டு பவுண்டரிகள் அடித்த மார்ஷ், ஆர்.பி. சிங் பந்தில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி விளாசினார். மூன்றாவது இலக்குக்கு 58 ஓட்டங்கள் சேர்த்த போது, பொலார்ட் பந்தில் ஹசி (21) பவிலி யன் திரும்பினார். முனாப் பந்தை பவுண்டரிக்கு விரட் டிய மார்ஷ், அசத்தல் சிக்சர் அடித்தார்.

ஒரே ஒரு சிக்சர் அடித்த அசார் முஹமட் (10) நிலைக்க வில்லை. முனாப் பந்தில் மார்ஷ் சிக்சர் அடிக்க, கடை சிப் பந்துப் பரிமாற்றத்தில் பஞ்சாப் அணியின் வெற் றிக்கு 9 ஓட்டங்கள் தேவைப் பட்டது. பெரேரா வீசிய முதல் பந்தில் இமாலய சிக் சர் அடித்த மார்ஷ், அடுத்த பந்தில் ஓர் ஓட்டம் எடுத் தார். மூன்றாவது பந்தில் டேவிட் மில்லர் இரண்டு ஓட்டம் எடுக்க, பஞ்சாப் அணி 19.3 பந்து பரிமாற் றங்களில் 4 இலக்குக ளுக்கு 164 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. மார்ஷ் (68), மில்லர் (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

கடந்த ஆட்டத்தில் டில்லி யிடம் வீழ்ந்த மும்பை அணி, தொடர்ந்து இரண்டா வது தோல்வியை பெற்றது. ஆட்ட நாயகன் விருதை பஞ்சாப் அணியின் மார்ஷ் தட்டிச் சென்றார். (5)



## தொடரும் சங்காவின் சறுக்கல்



கட்டாக்கில் நேற்று முன் தினம் நடந்த ஐ.பி.எல்., லீக் ஆட்டத்தில் அசத்திய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 5 இலக்குகள் வித் தியாசத்தில் சுலபமாக வென்றது. மீண்டும் சொதப் பிய டெக்கான் அணி தொடர்ந்து 5 ஆவது தோல்வி யைப் பெற்றது.

கட்டாக்கில் நேற்று முன்தினம் நடந்த ஐந்தாவது ஐ.பி.எல்., தொடரின் 29 ஆவது லீக் ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ் அணி கள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா அணித் தலை வர் கம்பீர் களத்தடுப்பை தேர்வு செய்தார். மழை காரணமாக ஆட்டம் தொடங் குவதில் சுமார் ஒரு மணி நேரம் தாமதம் ஏற்பட்டது.

டெக்கான் அணிக்கு சங்ககாரா, ஷிகார் தவான் இணைந்து நல்ல தொடக் கம் தந்தனர். யூசுப் பதான் சுழலில் ஒரு சிக்சர் அடித் தார் தவான். பின்னர் பிரட் லீ பந்துப்பரிமாற்றத்தில் இரண்டு பவுண்டரிகள் விளாசினார். பாலாஜி பந்தில் சங்ககாரா (12) 'போல்டானார்'. தொடர்ந்து கொல்கத்தா பந்து வீச்சாளர்கள் மிரட்ட, இலக்குகள் சீரான இடை வெளியில் சரிந்தன. பார்த் திவ் பட்டேல் (23) 'ரன்' அவுட்டானார். பிரட் லீ வேகத்தில் கம்ரான் வையிட் (10) காலியானார். அரைச் சதம் எட்டிய தவான் (50), ரஜத் பாட்யா பந்தில் வெளியேற, ஓட்ட எண் ணிக்கை உயர வாய்ப்பு இல்லாமல் போனது. அங் கித் சர்மா (1) தாக்குப் பிடிக்கவில்லை. நரைன் சுழலில் ஜா(3), ஸ்ரைன் (7) நடையை கட்டினர். டெக் கான் அணி 20 பந்துப் பரி மாற்றங்களில் 7 இலக்குக ளுக்கு 126 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது.

சுலப இலக்கை விரட் டிய கொல்கத்தா அணிக்கு தொடக்கத்திலேயே ஷாக் கொடுத்தார் ஸ்ரைன். இவ ரது வேகத்தில் பிரண்டன் மக்கலம் (10) வெளியேறி னார். அமித் மிஸ்ரா சுழலில் பிஸ்லா (10) 'போல்டா னார்'. பிரதாப் சிங் பந்துப் பரிமாற்றங்களில் பவுண்டரி களாக விளாசிய அணித் தலைவர் கம்பீர் (30) அதிக நேரம் நீடிக்கவில்லை. அடுத்து வந்த யூசுப் பதான் (6), அங்கித் சர்மா பந்தில் ஒரு இமாலய சிக்சர் அடித்த கையோடு 'போல்டாகி' ஏமாற்றினார். அப்போது கொல்கத்தா அணி 10.4 பந்து பரிமாற்றங்களில் 4 இலக்கு களுக்கு 72 ஓட்டங்கள் எடுத்து திணறியது.

பின்னர் மனோஜ் திவாரி, கலிஸ் சேர்ந்து அசத் தினர். கலிஸ் 23 ஓட்டங் களுக்கு ஸ்ரைன் பந்தில் ஆட்டமிழக்க, லேசான பதற்றம் ஏற்பட்டது!

ஆனா லும், உறுதியாக போராடிய திவாரி (30★), தேபபிரதா தாஸ் (9★) இணைந்து வெற்றியை உறுதி செய்தனர். கொல்கத்தா அணி 19 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளுக்கு 127 ஓட் டங்கள் எடுத்து வெற்றி பெற் றது. ஆட்ட நாயகன் விருதை பிரட் லீ வென்றார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது அட்சய திருதியை வாழ்த்துக்கள்

(24.04.2012) தங்க நகை வாங்கும் உங்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் காத்திருக்கின்றன

# உதயா

## ஜுவல்லர்ஸ்

புன்னகைக்கு நகை, நகைக்கு உதயா

இல. 81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

NO. 81, KASTHURIAR ROAD, JAFFNA. TEL: 021222 4434.



அன்பார்ந்த அனைத்து வாடிக்கையாளருக்கும்

# சிறி நதியாவின் அட்ஷய திருதியை அழைப்பு

உலகின் வரட்சியை நீக்கி நல்ல விளைச்சலையும் ஐஸ்வர்யத்தையும் தருவதற்காக புனித கங்கை நதியானது சிவபெருமானின் ஆணைப்படி பூமிக்கு வந்து பசுமையையும், ஐஸ்வர்யத்தையும் உண்டாக்கிய நாள் மற்றும் வேதவியாசகர் விநாயகப் பெருமானுடன் சேர்ந்து மகாபாரதத்தை எழுத ஆரம்பித்த தினமும் அன்றே மற்றும் கிருஷ்ணபிரான் பாண்டவர்களுக்கு என்றுமே அள்ள அள்ளக் குறையாத அட்ஷய பாத்திரத்தினை வழங்கிய நாளும் அன்றைய தினமே இதுவே அட்ஷய திருதிதை நாள் என்று அழைக்கப்படுகின்றது. இந்த நாளில் செல்வம், ஐஸ்வர்யம் என்பவற்றின் உன்னத குறியீடான தங்கத்தினை அன்றைய தினம் வாங்கி அணிபவர்களுடைய செல்வம் ஐஸ்வர்யம் அதிகரித்துக் கொண்டே செல்லும் என்பதே அனைவரினதும் நம்பிக்கை. இவ் அட்ஷய திருதியை நன்நாளில் அனைவரும் அட்ஷய வாழ்வுபெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## இடம்: சிறி நதியா நகைமாளிகை

காலம்: இன்று (24.04.2012) செவ்வாய்க்கிழமை - நேரம்: காலை 7.00 - பி.ப. 9.00 மணிவரை

"தரம் குன்றா தங்கத்தினை சிறி நதியாவில் பெற்று என்றுமே குறைவில்லா செல்வ வாழ்வு வாழ்ந்திடுவீர்கள்"

குறிப்பு:
★ இன்றே உங்கள் தெரிவுகளை ஒடர் செய்து அன்றைய தினமும் பெற்றிடலாம்.
★ இன்றைய தினம் எமது நிறுவனத்தில் தங்கம் வாங்கும் அனைவருக்கும் அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்படும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

சிறி நதியா நகைமாளிகை,
இல.1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2709

சிறி நதியா நகைமாளிகை,
இல.56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6744

அக்ஷய திருதியை தினமான இன்று (24.04.2012) கொள்வனவு செய்யும் அனைத்து நகைகளுக்கும்

அழகிய பெறுமதிமிக்க அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்படும்



# நியூ லலிதாஸ் ஜுவல்லறி

இல. 111,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-0212224134

இல.32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:- 0212225511

அழகிய தங்கப்பவுண் நகைகளை நம்பிக்கையுடன்

பெற்றிட நம்பகரமான ஸ்தாபனம்



சிறப்பு நாளில் தங்க நகைகளை கொள்வனவு செய்து உங்கள் இல்லங்களில் ஐஸ்வர்யத்தைப் பெருக்கிக்கொள்ளுங்கள்

# நியூ நகுலா ஜுவல்லர்ஸ்



இல.109, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
0212219119

45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-0212224101


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org